
கல்கி
வேஷங்கள்
இந்த இதழில் ஆரம்பமாகிறது
KALKI
3.8.69
0 காசு

பிழை திருத்தம்: லெமன் ஜெல்லி மோல்டு தயாரிப்பு முறையில் 4ம் நம்பர் விதியில், "......ஜெல்லி கலவையைச் சேர்த்து நன்கு கட வைக்கவும்." என்பதற்குப் பதிலாக "ஜெல்லி கலவையைச் சேர்த்து நன்கு கடையவும்" என்று படிக்கவும்.

ப்ரூக் பாண்ட்

ப்ரூ இன்ஸ்டன்ட்

நொடிப் பொழுதில் தயார்! கப்புகள் கணக்கிலே திருப்தி !

ப்ரூ தயாரிப்பது சுலபம் ! வெந்நீரை ஊற்றி, விரும்பும் சுவை பெற பாலும் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளவும். அசல் காபி–சிக்கரி மணமும் சுவையும் கொண்டு உங்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்க நொடிப் பொழுதில் ப்ரூ தயாராகிவிடுகிறது !

நினைவிலிருக்கட்டும், ப்ரூ தயாரிப்பதிலே, சிறிதுகூட சிரமமோ அல்லது வடிகட்டும் தொந்தரவோ கிடையாது.

இதற்கு மேலாக, நீங்கள் விரும்பும் சுவைக் கேற்றபடி ப்ருவை சிறிது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சேர்த்து தயாரித்துக் கொள்ளலாம்.

வாங்குங்கள் ப்ரூ—காபியும் சிக்கரியும் கலந்த சுவையை நன்கறிந்த ப்ருக் பாண்டின் ருசி பார்த்துத் தரம் காணும் திறமையாளர்களால் கவனத்துடன் கலக்கப்பட்டது.

இது நொடிப் பொழுதிலாகிறது !
நேரம் மிச்சம் !
பணம் மிச்சம் !




கல்கி

பொருளடக்கம்

சௌமிய, ஆடி 19 • 1969 ஆகஸ்டு. 3

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


தேசப்
பொருளாதாரம்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 □ இதழ் 1

நிக்ஸன் வருகை

அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் ஜூலை 31ந் தேதி இந்தியாவுக்கு வருகிறார். இங்கு வருமுன் தென் கிழக்கு ஆசியாவில் மூன்று நாட்களைக் கழிக்கிறார். தில்லியில் பிரதம மந்திரியுடன் பேசுவார்; சர்க்காரின் மற்ற தலைவர்களையும் சந்திப்பார். இங்கிருந்து பாகிஸ்தான் போகிறார். அடுத்தாற் போல் தங்குமிடம் ருமேனியாவின் தலைநகரம். இந்தப் பயணங்களில் நிக்ஸன் ஈடுபடுகையிலேயே, அவர் போகாத ஆசிய நாடுகளுக்கு அமெரிக்க ராஜாங்கக் காரியதரிசி போய் வருகிறார்.

சுழற் காற்று வேகத்தில் இந்த இரண்டு அமெரிக்கத் தலைவர்களும் பல தலைநகரங்களுக்குச் சென்று, அவசரம் அவசரமாகப் பேசி, என்ன தெரிந்து கொள்ளப் போகிறார்கள் என்ற சந்தேகம் பலருக்கு ஏற்படலாம். சந்தேகிப்பது நியாயமே. ஆனால் அந்தந்த ஊருக்கு அவர்கள் வருவதற்கு முன்னமேயே தேவைப்படும் தகவல்களை யெல்லாம் சர்க்கார்த் தலைவர்கள் தயாராக வைத்திருப்பார்கள். சந்தேகங்களைப் போக்கடித்துக் கொள்வதற்காகத்தான் பேச்சு.

இந்த விஜயத்தின் நோக்கம் என்னவென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. இரண்டு அல்லது மூன்று விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டி விரும்பலாம். முதல் விஷயம், அந்தந்த நாட்டின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் வெளி உதவியைப் பற்றிய தகவல். இரண்டாவது விஷயம் எந்த அளவுக்கு இந்தத் தேசங்களால் தமது எல்லைகளையும் சுதந்திரத்தையும் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பது. மூன்றாவது விஷயம், அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள நாடுகள் எந்த அளவுக்கு ராஜீய, ராணுவ வகைகளில் தம்மிடையே ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்ளத் தயார் என்பது.

பிற நாடுகளுக்கு அமெரிக்கா கொடுக்கும் உதவியைக் குறைத்துவிட வேண்டும் என்பது அந்தத் தேசத்துப் பார்லிமென்ட் (காங்கிரஸ்) செய்துள்ள முடிவு. நிக்ஸனோ அவற்றுக்குப் போதிய உதவி கிடைக்க வேண்டும் என்று நம்புகிறவர். எனவே, அதற்கு அநுகூலமான ஆதாரங்களைத் திரட்டுவதில் அவர் அக்கறை கொள்ளக்கூடும். ரஷ்யாவும், கம்யூனிஸ்ட் சீனாவும் தெற்கு ஆசியாவில் ஒன்றுக்கொன்று போட்டியாகப் பல நாடுகளில் தமது செல்வாக்கை வளர்த்து வருகின்றன. பாகிஸ்தான் ஒரு முக்கிய உதாரணம். இந்தப் போட்டியின் தன்மையைப் பற்றியும், விளைவுகளைப் பற்றியும் கேட்டறிய நிக்ஸன் விரும்பக் கூடும்.

பிராந்திய அடிப்படையில் ஆசிய நாடுகள் தமது பந்தோபஸ்துக்காகக் கூட்டு ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும் என்று கொஞ்ச காலமாக ரஷ்யா கூறி வருகிறது. ஆனால் இவ் விஷயமாகத் தன் மனத்தில் இருப்பது என்ன என்பதை அது விவரமாகக் கூறவில்லை. ரஷ்யாவும், கம்யூனிஸ்ட் சீனாவும் தெற்கு ஆசியாவில் கூட்டாளிகளைச் சேர்த்து வருவது அமெரிக்காவுக்கு இஷ்டமாக இல்லை. பல விஷயங்களில் அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒத்துழைக்கின்றன. ஆனால் ஆசிய நாடுகள் விஷயத்தில் ஒத்துழைக்கிற மனப்பான்மை இன்னும் இவற்றிடையே ஏற்பட்டதாக வில்லை.

சீனாவும் ரஷ்யாவும் இப்போது விரோதிகளாகவே இருந்து வருகின்றன. ஆனால் அவை எப்போதுமே பகை நாடுகளாக இருக்கும் என்பதில்லை. எனினும், இப்பொழுது எல்லா வகை ஆக்கிரமிப்பாளருக்கும், கலகக்காரர்களுக்கும் கம்யூனிஸ்ட் சீனா ஆதரவு கொடுத்து வருகிறது. உதவிகளையும் அளித்து வருகிறது; இந்தப் போக்கு நீடித்தால் என்னவாகும் என்று சொல்ல முடியாது. இரண்டு ஆண்டுகளில் பிரிட்டனும், அமெரிக்காவும் தெற்கு ஆசியாவிலுள்ள தமது படை பலங்களை வாபஸ் பெற்று விடுவது என்று முடிவு செய்துள்ளன. ரஷ்ய — சீன மனப்பான்மைகளை முன்

விட்டு இந்த முடிவில் மாறுதல் ஏதாவது தேவையா என்று தாமே நேரில் கண்டறிய நிக்ஸன் விரும்பக் கூடும்.

வியட்நாமிலிருந்து விரைவில் வெளியேறினலும் ஜப்பானுடன் உள்ள ராணுவக் கூட்டுறவைப் பலப்படுத்திக் கொண்டு, கிழக்கு ஆசியாவில் போதிய பலத்துடன் அமெரிக்கா நீடித்து இருந்து வரவேண்டும் என்று நினைப்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.

அமெரிக்கா, ரஷ்யா, கம்யூனிஸ்ட் சீனு ஆகிய மூன்றுக்குமிடையே அவநம்பிக்கையும் சந்தேகங்களும் பொறுமையும் இருந்து வருகின்றன. தனக்கெதிராக மற்ற இரண்டும் ஒன்றுபட்டுவிடக் கூடாதே என்று மூன்று நாடுகளுமே கவலைப்பட்டு வருகின்றன. ரஷ்யாவும் அமெரிக்காவும் தனக்கெதிராகச் சுற்றியுள்ள எல்லா நாடுகளையும் ஒன்று திரட்டப் பார்க்கின்றன என்பது சீனவின் புகார். சீனு தன்னுடைய ரஷ்ய விரோதத்தை விரைவில் மாற்றிக் கொண்டு விட்டால் அதன் நீண்ட கால விளைவுகள் தனக்கு எதிரிடையாகி விடலாம் என்று அமெரிக்கா நினைக்கிறது. சீனவுடன் அமெரிக்கா நெருங்கிய வர்த்தக உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் ஒருபுறம் இருந்து வருகிறது. அம்மாதிரி நடந்துவிட்டால் அதன் விளைவாகச் சீனவின் துணிச்சல் அதிகரித்துத் தனக்கும் சீனவுக்குமிடையே பெரிய போர் மூண்டு விடுமோ என்று ரஷ்யா கவலைப்படுவதாகத் தெரிகிறது. இத்தகைய பயங்களைப் பற்றியெல்லாம் ஆசிய தேசங்களின் தலைவர்களை இப்போது நேரில் கேட்டறிவது அவசியமென்று அமெரிக்க ஜனதிபதி நினைக்கிறார் போலும்!

ராஜாஜியின் கருத்துக்கள்

ஜுலை 12ந் தேதி 'எகனமிக் டைம்ஸ்' இதழில் பிரசுரமாகியுள்ள பின்வரும் விஷயத்தை எல்லோரும் படிக்க வேண்டும். தேசிய தொழில் வளர்ச்சி கார்ப்பொரேஷனும், யூனியன் தொழில் அமைச்சகமும் எம்மாதிரி, எந்த நோக்கத்துடன் வேலை செய்கின்றன என்பதைப் புரிந்து கொள்வதற்கு இது பயன்படும்.

தொழில் வளர்ச்சி, உள்நாட்டு வர்த்தகம், கம்பெனி விவகாரங்கள் ஆகிய பொறுப்புக்களை வகிக்கும் அமைச்சகம் ஒரு விசாரணையை நடத்தி வருகிறது. பெரிய தொழில் ஸ்தாபனங்களும் தனிப்பட்ட தொழிலதிபர்களும் எந்த ராஜீயக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கண்டறிந்து அறிக்கை தருமாறு தேசிய தொழில் வளர்ச்சிக் கார்ப்பொரேஷனுக்கு அது உத்தரவு பிறப்பித்துள்ளது.

அந்தக் கார்ப்பொரேஷன் ஒரு பிரதான தொழிலதிபருக்கு, அவர் காங்கிரஸைச் சேர்ந்தவரா அல்லது ஓர் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவரா என்று கேட்டு எழுதியுள்ளது. மந்திரி சபையின் காரியாலயத்தினர் சார்பில் அமைச்சகம் இந்தத் தகவலைக் கோருகிறது என்று கார்ப்பொரேஷன் ஒரு விளக்கத்தையும் தந்திருக்கிறது.

அந்தத் தொழிலதிபர் பின்வருமாறு பதில் அளித்திருக்கிறார்:

''உங்கள் கடிதத்தில் காணப்படுவது போன்ற கேள்வியைப் பார்த்து நான் பெரிதும் வியப்படைகிறேன்.

''உலகெங்கும் யார் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது முற்றிலும் அவரது சொந்த, அந்தரங்க விஷயமாகவே பாவிக்கப்படுகிறது. வெளிப்படையாக அதைப் பறைசாற்ற வேண்டுமென்பதில்லை. நமது நாட்டிலும் மக்களின் கருத்து இதுவே என்று நம்புகிறேன்.

''இதுவரை நான் சந்தா செலுத்தி எந்த அரசியல் கட்சியிலும் அங்கத்தினரானதில்லை. பெரும்பாலான அரசியல் கட்சிகளில் சில கெட்ட அம்சங்களும் இருக்கின்றன, சில நல்ல அம்சங்களும் இருக்கின்றன என்பது என் நம்பிக்கை. வேலைத் திட்டத்தையும் நீண்ட கால இலக்கை அடைவதற்கான வழிமுறைகளையும் பொறுத்து, பல அரசியல் கட்சிகள் விஷயத்தில் எனக்குப் புத்திபூர்வமான பற்றுதல் உண்டு.

''நான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவனு, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவனு என்று நீங்கள் கேட்டிருப்பது கவையான கேள்வி. இந்தத் தேசத்தில் காங்கிரஸ் கட்சி ஒன்று, எதிர்க் கட்சி என்று நீங்கள் சொல்லும் ஏதோ ஒன்று ஆகிய இரண்டு கட்சிகள் மட்டும் தான் இருக்கின்றன என்பது உங்கள் அபிப்பிராயமா? இதைத் தயவுசெய்து தெளிவுபடுத்தவும்.''

★

எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் செய்து விடவேண்டும் என்ற சோஷலிஸ்ட் கொள்கை செல்வத்தின் உற்பத்திக்கு இடையூறு செய்கிறது. நமது தேசியப் பறவையாகிய மயிலைப் போல் இதுவும் வியர்த்தமாகிவிடுகிறது. மயிலின் தோகை அழகாகத்தான் இருக்கிறது. ஆனல் அது விரித்துப் பறக்க முடியாதபடி அவ்வளவு கனமாக இருக்கிறது. போதிய நடவடிக்கைகளை எடுத்து, ஸ்ரீமதி இந்திரா காந்தியைப் பதவியிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும். அதை வகிக்கத் தாம் தகுதியற்றவர் என்பதை அவர் சுறுசுறுப்பாக ருசு செய்து விட்டார். அவரை வெளியேற்ருவிடில் நாம் ரஷ்யாவை வளைய வந்து கொண்டிருக்கும் சார்பு நாடாகி விடுவோம். இறுதியாகச் சீனச் சிலந்தியின் பெரிய கூட்டில் சிக்கி விடும்படியாக நேரிடலாம்.

★

ராஷ்டிரபதி தேர்தலில் போட்டி யிடும் அபேட்சகர்களில் முக்கியமாக உள்ளவர் மூவர். முன்னுள் உப ராஷ்டிரபதி; எல்லா அரசியல் கட்சிகளாலும் உயர்வாகப் பாராட்டப்படும் பார்லிமெண்டு சபாநாயகர்; முன்னுளில் நிதி மந்திரியாகவும் ரிசர்வ் பாங்கி கவர்னராக

வும் இருந்து பரந்த அனுபவமும், எல்லாருடைய பெருமதிப்பையும் பெற்றுள்ள பெரியவர் ஆகிய மூவரும் தேர்தலில் போட்டியிடப் பூரண தகுதியுள்ள அபேட்சகர்கள். காங்கிரஸ் கட்சியில் தோன்றியுள்ள எல்லா நிலவரங்களையும் கவனிக்குங்கால், இப்போதாவது அக்கட்சித் தலைவர்கள், கட்சிக் கொறடாவைப் பிரயோகிக்காமல், எவ்வித உத்தரவுகளையும் போடாமல் யாருக்கு வோட்டுப் போடுவது என்ற உரிமையை அவரவர்கள் சுய இச்சைக்கு விட்டுவிட்டால் நாட்டுக்குப் பெருபகாரமாக இருக்கும். காங்கிரஸ் கட்சிக்குக்கூட நல்லது. காங்கிரஸ் கட்சி தனது அங்கத்தினர்களுக்கு இம்மாதிரி விடுதலை அளித்தால் ஜனநாயக எதிர்க் கட்சிகளும் சந்தோஷமாக இதே முறையைப் பின்பற்றுவார்கள்.

★

பாங்கு தேசவுடைமை அவசரச் சட்டம் பற்றி 'ரிட்' மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டில் எல்லா நீதிபதிகளின் முன் பரிசீலனையில் இருக்கையில், அதன் விசாரணைக்காக ஆகஸ்டு 11ந் தேதி நாளும் குறிப்பிட்டிருக்கும்போது, அரசாங்க உடைமை மசோதா உடனடியாக பார்லிமெண்டில் இப்போது பிரேரிக்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டால் நமது அரசியல் அமைப்பு எவ்வளவு கேவலமாகச் சீர்கெட்டிருக்கிறது என்பதையே இது குறிப்பாக எடுத்துக் காட்டும். சுப்ரீம் கோர்ட்டு விடுத்துள்ள தடை உத்தரவுகளினால் பாங்குகளை அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாது என்றாலும், உயர்நீதி மன்றம் தடை உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னமே அரசாங்கத்தின் அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு விட்டதால் பாங்குகளை அரசாங்க உடைமையாகச் செய்தாகி விட்டது என்று பிரதமர் இந்திரா காந்தி மக்கள் சபையில் சமர்ப்பித்த அறிக்கையில் பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகிறார். இது அரசாங்கத்துக்கும் சுப்ரீம் கோர்ட்டுக்கும் உள்ள போட்டா போட்டி விஷயம் அல்ல. பாங்குகள் தலைமீது யார் முதலில் குதிக்கிறார்கள் என்பது அல்ல. அவசரச் சட்டமே செல்லுபடியாகுமா, அல்லது தள்ளுபடி செய்ய வேண்டியதா என்ற முழு விஷயமும் சுப்ரீம் கோர்ட்டின் பரிசீலனையில் இருக்கிறது. தேச உடைமை சுப்ரீம் கோர்ட்டின் தடை உத்தரவுக்கு முன்னமேயே முடிந்து போன விஷயம், ஆகவே அந்த முடிவை மாற்றி யமைக்க முடியாது என்று கருதப்படுமேயானால், சுப்ரீம் கோர்ட்டின் பின் நடவடிக்கைகள் முழுவதும் அர்த்தமற்றதாக அல்லவோ ஆகும்? திங்கட்கிழமை சுப்ரீம் கோர்ட் தடை உத்தரவு பிறப்பித்திருந்தும், சனிக்கிழமை இரவுக்கும் செவ்வாய்க் கிழமை காலைக்கும் இடையில் தாம் விரும்பியபடி பாங்குகளைத் தேச உடைமையாகச் செய்தாய்விட்டது என்று பிரதமர் தமக்குள் சந்தோஷப்படுவதை வேண்டுமானால் யாரும் தடுக்க வேண்டாம். ஆனால் அவருக்கு ஆலோசனை கூறும் சட்ட இலாகா சட்டத்தின் தத்துவத்தை மறந்து விட்டது போலும்! குறிப்பிட்டு விலக்களித்துச் சொன்னாலொழிய நீதி மன்றத்தின் தடை உத்தரவு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்தே அமலாகும் என்பதை ஏனோ அவர்கள் மறந்து விட்டனர். குறிப்பிட்ட சில அம்சத் தடைகள், ரிட் மனுதாரர்களின் கோரிக்கைகளுக்கிணங்கி எச்சரிக்கை நடவடிக்கையாக எடுத்துக் கொள்ளப்பட்டதே தவிர, பொதுத் தடை உத்தரவை அவை மாற்றவோ, குறைக்கவோ இல்லை.

பாங்கு மசோதாவைப் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கக் காட்டிய பரபரப்பையும் வேகத்தையும் பார்க்கும் போது சட்டம் இயற்றுவதுகூட பிரதமரின் ஆதிக்கப் போரில் ஒரு நடவடிக்கையே என்றுதான் நிரூபணமாகிறதே தவிர தேசப் பொருளாதார முன்னேற்றத்துக்கெனத் தெரியவில்லை. ஜனநாயகத்தையே அரசாங்க ஆதிபத்தியத்துக்குள் அமிழ்த்தி கம்யூனிஸ்டு ஆளுகைக்கு மாற்றவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு.

அன்பார்ந்த நேயர்களுக்கு

இந்த இதழிலிருந்து கல்கி தனது இருபத்தொன்பதாவது பிராயத்தைத் தொடங்குகிறது.

பிரபஞ்ச ரீதியிலும் தேசிய ரீதியிலும் பெரிய சம்பவங்கள் நிகழ்ந்துள்ள சமயம் இது. சந்திரனில் மனிதன் அடி எடுத்து வைத்துத் திரும்பி யிருக்கிறான். அறிவுத் துறையில் மக்கள் குலம் எவ்வளவு தூரம் சிறப்பெய்தி இருக்கிறது என்பதற்கு அமெரிக்க விண்வெளிப் பயணிகள் அழுத்தமான சான்று பகர்ந்து விட்டனர். விஞ்ஞான நுட்பத்தின் வியத்தகு ஆற்றலை எண்ணிப் பேராச்சரியமும் பெரு மகிழ்ச்சியும் கொள்கிறோம். இது பிரபஞ்ச ரீதியில் நடந்துள்ள மாபெரும் நிகழ்ச்சி.

தேசிய ரீதியில் நடந்துள்ள நிகழ்ச்சி இவ்விதம் மகிழ்ச்சியூட்டுவதாக இல்லை. ஏதோ ஒரு தனிப்பட்ட கட்சிக்குள் நடந்த ஒரு பூசலின் முடிவில் நாட்டையே பாதிக்கும் இடி விழுந்து விட்டது. ரூபாய் இரண்டாயிரம் கோடிக்கு மேற்பட்ட மக்களின் சேமிப்புக்களைக் கொண்ட பாங்குகள், ஊதாரித்தனத்துக்கும் பட்சபாதத்துக்கும் திறமையின்மைக்கும் பெயர்பெற்ற அரசாங்கத்தின் உடைமையாக்கப்பட்டுள்ளன. தேசத்தின் பொருளாதார மேம்பாடு என்பது அரசியல் பிரசங்கிகளின் பிரசார கோஷங்களில் இல்லை என்பதையும், பெருத்த முதலீடு செய்து தொழில் புரிந்து ஸ்தூலமாக உற்பத்திப் பெருக்கம் காண்பவர்களையே சார்ந்துள்ளது என்பதையும் புரிந்து கொள்ளும் எவரும் எதிர்காலத்தைப் பற்றிப் பீதியே கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கலங்கிப் பயனில்லை. சத்தியம் வெல்லும் என்பதில் நம்பிக்கை வைத்து, கடவுளின் கருணையில் நம்பிக்கை வைத்துத் தருமப் போராட்டத்தைத் தொடர்ந்தேயாக வேண்டும். சத்திய, தர்ம பராக்கிரமராகிய ராஜாஜியைத் தனிப் பெரும் வழிகாட்டியாகக் கொண்டு நடத்தப் பெறும் இந்தத் தர்ம யுத்தத்தில் உள்ளமார ஈடுபடும் பாக்கியம் பெற்ற கல்கி இன்று தனது பிறந்த தினத்தன்று மீண்டும் தன்னை இந்த அறப் பணிக்கு அர்ப்பணித்துக் கொள்கிறது.

விஞ்ஞானத்திலும், அரசியலிலும் ஈடுபட்டுள்ள மனித உள்ளம் நல்லதாக வேண்டும். இல்லாவிடில் எந்த வியத்தகு சாதனை செய்தும் பயனில்லை. 'நம் அறிவால் இத்தனை சாதித்தோமே!' என்ற அகம்பாவமே மிஞ்சும். கிரீஸ் மகாராணியிடம் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசாரிய சுவாமிகள் மொழிந்ததைத்தான் இன்று நினைவுகூர்கிறோம். ''மனிதன் பெரியவனாவதற்கு முயல வேண்டியதில்லை; நல்லவனாவதற்கே முயல வேண்டும். உண்மையில் நன்மையேதான் பெருமையும்'' என்று திருவாய் மலர்ந்தருளினார், அம்மகான்.

நல்லவராவதற்கு வழி ஒன்றே ஒன்றுதான். 'எல்லையில் நலம்' என்று ஆழ்வார் போற்றிய ஆண்டவனிடம் எளிமையுடன் பக்தி செலுத்துவதுதான் நன்மைக்கெல்லாம் ஊற்றுக்கண். 'அவன் கொடுத்த அறிவால்தான் இந்த விஞ்ஞான சாதனையைப் புரிய முடிந்தது. எனவே இதனை அவனது படைப்பின் நலனுக்கே பயனாக்க வேண்டும்'; 'அவனுடைய அருளால்தான் இந்த அரசியல் அதிகாரம் கிடைத்துள்ளது; எனவே இதை அவனது குழந்தைகளின் நன்மைக்கே பயன்படுத்த வேண்டும்' என்ற எண்ணம் பிறக்க வேண்டும். ஆண்டவனின் எண்ணம் நீங்காமல் மனத்தில் மேவி இருந்தாலே, செய்கிற காரியங்கள் யாவும் அவன் சேவையாகி, வீடும் நாடும், ஊரும் உலகமும் உயரும். இறுதியில் ஆஸ்திகம், ஆன்மிகம் யாவும் அன்பில்தான் அடக்கம். ஆண்டவன் என்கிற ஒன்றிடம் இந்த அன்பை வைக்கப் பழகிவிட்டால் அனைத்திடமும் அன்பு வைத்ததாகிவிடும்.

இந்த அன்புப் பணியில் என்றுமே ஈடுபட்டு வந்துள்ள 'கல்கி' இப்பணிக்குக் காவலராக விளங்கும் ராஜாஜி அவர்களின் 'தோழமை யோகத்'தை இவ்விதழோடு நேயர்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதைப் பாக்கியமாகக் கருதுகிறது. இறையன்பு என்பது வாழ்க்கையில் சகல காரியங்களிலும் இழைந்து ஓடும் உன்னதப் பாங்கினைத் 'தோழமை யோகம்' உபதேசிக்கிறது. இந்த உபதேசம் நம் வாசகர்களின் உள்ளங்களை உயர்த்தும் என நம்புகிறோம்.

இலக்கியப் பணியிலும் 'கல்கி' என்றும் போல் தன் பங்கினைப் பாங்குடன் தொடர்ந்து ஏற்கிறது. இலக்கியத்தில் புதுமை மிளிரும் வகையில் கதாசிரியரின் நேரடி வருணனையில்லாமல், கதா பாத்திரங்களின் குண சித்திரங்களை உரையாடலின் மூலமாகவே விவரிக்கும் 'வேஷங்கள்' இவ்விதழில் தொடங்குகிறது. பொர்க்லி — கல்கி இலக்கியப் பரிசுத் திட்டத்தில் — சமூகச் சிறுகதைகளில் முதற் பரிசு பெற்ற திரு (இந்திரா) பார்த்தசாரதியின் இந்தத் தொடர் கதை, முதல்தரத் தொடர்கதை எனப் பெயர் எடுக்கும் என நம்புகிறேன்.

பொது வாழ்வில் பங்கு பற்றும் பிரமுகர்களைப் பற்றி அவர்களது அண்டை வீட்டாரிடமிருந்து ருசிகரத் தகவல்களைச் சேகரித்துத் தரும் பேட்டித் தொடரும் இவ்விதழில் தொடங்குகிறது.

பழைமை என்ற அஸ்திவாரத்தை நாளும் பலப்படுத்திக் கொண்டே, அதன் மீது புதுமையில் மேலும் விரிவுகள் கண்டு வரும் சேவையை உங்கள் அபிமானப் பத்திரிகை தொடருகின்ற இத்தருணத்தில் ''முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாகவும், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாகவும்'' உள்ள ஆண்டவனின் அருளை அனைவருக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

சதாசிவம்

பக்கத்து வீட்டுப் பிரமுகர்

பாபா ஆர்ட்ஸ் நிறுவனத்தின் பாகஸ்தரான திரு கண்ணன் பக்கத்து வீட்டுப் பிரமுகர் திரு ம.பொ.சி. அவர்களைப்பற்றிக் கூறுகிறார்:

நான் இப்போ இருக்கிற வீடே ஒரு காலத்திலே ம. பொ. சி. அவங்களோட வீடுதான். ஆகஸ்ட் தியாகியாக ஜெயிலுக்குப் போயிட்டு வெளியே வந்தவுடனே அவர் இந்த வீட்டையே தியாகம் பண்ண வேண்டியதாப் போச்சு! ஆமாங்க! குடும்பத்தை நிருவாகம் பண்ணப் பணம் வேண்டாமா? பக்கத்துப் பக்கத்திலே இருந்த இரண்டு வீடுகளிலே ஒன்றை விற்க வேண்டிய நெருக்கடி.

பண நெருக்கடியைத் தீர்க்க இந்த முடிவுக்கு வந்தாரா? மன நெருக்கடியைத் தீர்த்துக்கவும் இதே வீட்டு விஷயத்திலே ரொம்ப விட்டுக் கொடுத்தாருங்க! நான் இப்போ இருக்கிற வீட்டை எனக்கு முன்னாலே வேறு ஒருத்தர் ஐயாகிட்டேயிருந்து வாங்கி இருந்தாரு. வாசல் முகப்பு அகலத்துக்கும், பின்பக்கத்துச் சுவரு அகலத்துக்கும் இடையே வித்தியாசம் உண்டு. பின்பக்கம் போகப் போக அந்த அகலம் குறைஞ்சுக்கிட்டே போகும். ஆனால் வீட்டை வாங்கினவரு, வாசல் முகப்பு அகலத்துக்குப் பின் - பக்கமும் அளந்து மூணரை அடி அகலத்தை ஆக்கிரமிச்சுக்கிட்டாரு. இரண்டு வீட்டுக்கும் பொதுவாயிருந்த கிணற்றைப் பாதியிலே மூடவும் செய்துட்டாரு. அப்போ ஐயா ஊரிலே இல்லே. அவரு வந்தவுடன் வியவகாரம் வரும்னுதான் எல்லாரும் நினைச்சாங்க. ஆனால் ஐயா என்ன சொல்லிட்டாரு தெரியுமா? ''பக்கத்து வீட்டுக்காரரோடு என்னிக்கும் மனமொத்து வாழணும்! போகட்டும்! அவர் தான் சந்தோஷமா அனுபவிச்சுட்டுப் போகட்டுமே''ன்னு விஷயத்தை அப்படியே விட்டுட்டாரு.

அந்த ஆசாமி வீட்டைச் செப்பனிட்டு, ஓட்டுக் கூரையாக இருந்த மாடியைக் கெட்டி மாடியாக மாத்திக் கட்டினாரு. விஷயம் தெரியாதவங்க, ஐயா அரசியலிலே சம்பாதிச்ச மாடி வீடு கட்டிப்பிட்டாருன்னுதான் பேசிக்கிட்டாங்க. இதிலே இன்னொரு வேடிக்கை என்னன்னா, வீடு கை மாறிப் பத்திரம் பாடி பதிஞ்சு, வாங்கின ஆசாமி வீட்டு வரி கட்ட ஆரம்பிச்ச பிறகு, 'ஏன் கார்ப்பொரேஷன் அனுமதியில்லாமல், வீட்டு அமைப்பை மாத்தினீங்க?'ன்னு, ம. பொ. சி. ஐயாவுக்கு கார்ப்பொரேஷன்லே யிருந்து நோட்டீஸ் வந்தது!

இந்த வீட்டைப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னாலே நான் வாங்கினேன். இதனாலே ஐயாவோட அடுத்த வீட்டு உறவு எனக்கு ஒரு மகாமகக் காலமாக உண்டு. இப்போதெல்லாம் எங்க வீட்டுக்கும் அவங்க வீட்டுக்கும் நடுவிலே குறுக்குச் சுவருன்னு ஏதும் இருக்கிறதாகவே எங்களுக்கு நினைப்பு கிடையாது. பெண் பிள்ளைகள் குழந்தைகள் எல்லாம் அப்படி மனசு விட்டுப் பழகுவாங்க. ''ஐயா ராத்திரி பூரா உடம்பு சௌகரியமில்லாமெ முக்கி முனகிக்கிட்டுப் படுத்திருந்தாரு. காலையிலே எங்கேயோ வெளியூருக்குக் கிளம்பிக்கிட்டு இருக்கிறாங்களே!'' என்று என் மகள் காந்தி அடிக்கடி சொல்லுவா! அவருக்கு அது ரொம்ப சகஜம். பொதுப் பணி, கட்சிப் பணி என்று வரும்போது அவரு தம் உடல் நலம், சாப்பாடு எல்லாத்தையும் மறந்துடுவாரு.

பிரபலமடைந்த ஒரு மனிதர் வீட்டுக்கு அண்டையிலே இருக்கிறோமே. வாசலிலே எப்போதும் கும்பலும் கூட்டமுமாக இருக்குமென்று நாங்க நினைக்கிறதுக்கு ஐயா இடம் கொடுக்கிறதே இல்லே. அவரைப் பார்க்க வரவங்கிட்டே இதமாப் பேசி அனுப்பி வைச்சுடுவாரு. நியாயமான முறையிலே உதவியோ பொரிசோ கேட்டு



ம.பொ.சி —கண்ணன்

வரவங்களுக்குத் தேவையானதைச் செய்யத் தயங்கவும் மாட்டாரு. இன்னொரு விஷயம். எனக்குத் தெரிஞ்ச அளவிலே, இவரு மந்திரிமார்கள்கிட்டே எந்த சிபாரிசுக்கும் போய் நிற்பதில்லே.

ஓர் எம். எல். ஏ.ங்கிற முறையிலே இவரு பல சர்ட்டிபிகேட்டுகளுக்குக் கையெழுத்துப் போடணும். பள்ளிக்கூடம் காலேஜுகளிலே சேர்ந்து உபகாரப் பணம் வாங்க விரும்பற பின்தங்கிய வகுப்புக் குழந்தைகள் இந்த மாதிரி சர்டிபிகேட்டுகளுக்குக் கையெழுத்து வாங்க வருவாங்க. இதற்கென்று சென்னை நகரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூணு நாலு பேர் மந்திரிங்களாகப் போய்விட்டதாலும், மந்திரிகள் இந்த மாதிரி சர்ட்டிபிகேட்டுகளுக்குக் கையெழுத்துப் போடக் கூடாது என்று விதிமுறைகள் இருப்பதாலும் எல்லாருமே அநேகமாக ஐயா கிட்டேதான் வருவாங்க. இவரும் மகிழ்ச்சியாகப் போட்டுக் கொடுத்துக்கிட்டே இருப்பாரு.

ஐயாவுக்கு ரொம்ப அபூர்வமாகக் கோபத்தை உண்டாக்கும் வேலையையும் இந்தச் சர்டிபிகேட்டுகள் சில சமயங்களிலே செய்து விடும். சரியாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களை (கல்லூரி, பள்ளி முதல்வர்கள் கையெழுத்துக்கள் ; மார்க்குகளுக்கான நற்சான்றிதழ்கள் இல்லாமலே) சில பேர் கொண்டு வந்து கையெழுத்து கேட்பாங்க. அப்போ பார்க்கணும் ஐயா முகத்தை. ''என் பேரைக் கெடுக்கணுங்கிறதுதான் உங்க நோக்கமா ? என் கையெழுத்து விழுந்த பிறகு நீங்க தவறுதலாகப் பூர்த்தி செய்து ஏதாவது எக்கச்சக்கமாக ஆனால் என் நிலைமை என்ன ஆகும்? போய்ச் சரியாகப் பூர்த்தி செய்துக்கிட்டு வாங்க!'' என்று எழுந்து விடுவார். அவரு கோபிக்கிறது என்பது இப்போதுதான். மற்ற நேரங்களிலே அவரோட அமைதியை யாராலேயும் அசைக்கக முடியாது.

இவருக்குத் தெரிஞ்ச பெரிய மனிதர்களிடம் சிபாரிசு செய்யச் சொல்லி, பல துறைகளைச் சேர்ந்த பல நபர்கள் இவரைத் தேடி வருவாங்க. இவரும் மனசாட்சிக்கு விரோதமில்லாமே ஆனதைச் செய்வாரு. சில பேர் சில சமயங்களிலே இவர்கிட்டே 'ஸ்டிராங்கா' லெட்டர் கொடுக்கணும்னு வற்புறுத்துவாங்க. அப்பவெல்லாம் ஐயா இருக்குறள் அடியைத்தான் உதாரணமாகச் சொல்லுவாங்க.

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார்

என்பதுதான் அந்த அடி. ''பெரிய மனுஷங்கிட்டே ரொம்ப நெருங்கவும் கூடாது. ரொம்பத் தள்ளியும் இருக்க முடியாது. நெருப்பிலே குளிர் காயற மாதிரி. கிட்டே போனால் கட்டுடும். என்னாலே இதற்கு மேலே ஒன்றும் செய்ய இயலாது'' என்று தெளிவாகவே சொல்லுவாரு.

இந்தத் திருவல்லிக்கேணி இருசப்பக் கிராமணி தெரு இருக்குதே ! ஒரு காலத்திலே பெரிய சண்டைக்காரப் பேட்டைன்னு பேர் பெற்றது. ஐயாவோட இனத்தைச் சேர்ந்த அந்தக் காலத்துப் பெரியவங்க, இந்தப் பேட்டையில் உள்ள ஒவ்வொரு வீடும், தங்களுடைய உடைமைக்கு உட்பட்டது என்ற ஆணவத்தோட இருந்தாங்க. ஆனால் இப்போ இந்த ஐயாவோ, இந்தப் பேட்டையிலுள்ள ஒவ்வொரு வீட்டார் நல்வாழ்வுக்கும் அமைதிக்கும் தம்மாலான உதவியைச் செய்யணும் என்ற, அடக்க நினைவோடேயே இருக்காரு.

இந்தப் பேட்டையிலே நேஷனல் பெண்கள் பள்ளி இருக்குதே! அதற்கான இடத்தை அந்தக் காலத்தில் ஆர்ஜிதம் பண்ண முயற்சி பண்ணின போது நிர்வாகிகள் ரொம்பச் சிரமப்பட்டாங்க. காலி இடமாக இருந்த அந்த வெளியில் குடிசை வாழ் மக்களாக இருந்த பலர் அந்த இடத்தைக் காலி செய்ய மறுத்தார்கள். கடைசியில் ஒரே ஒரு நபரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் காலி செய்து விட்டார்கள். அந்த ஒரு நபர் முரட்டு சுபாவமுடையவர். கோர்ட்டுக்குப் போகத் தயாராகிக் குடிசையைக் கிளப்ப மறுத்து விட்டார். அவர் ஐயா இனத்தவர். அவர்கிட்டே நடையாக நடந்து, கெஞ்சி, ஒரு பொதுஜன நன்மைக்காக விட்டுக் கொடுக்கும்படி வேண்டி, அந்த இடத்தைப் பெற, ஐயா உதவி செய்தாருங்க. இல்லாத போனா இன்னமும் கேஸ் நடந்துக்கிட்டுத்தான் இருக்கும் ! இந்தப் பேட்டை பெண் குழந்தைகள் சிரமப்பட்டுக்கிட்டுத்தான் இருப்பாங்க.


எவரும் குல மரபை விட்டுக் கொடுக்க மாட்டாங்கன்னு சொல்றது சம்பிரதாயம். ஐயா ஒரு தீவிர மதுவிலக்குவாதி. இவங்க வம்சத்து முன்னோர்களோ, இதையே தொழிலாகக் கொண்டு வாழ்க்கை நடத்தினவங்க. இவரோட லட்சியத்தோட நிகர லாபம், தொழில் நடத்த முடியாத நிலைமையிலே இருக்கும் மூணு உறவுக்காரக் குடும்பங்களுக்குச் சாப்பாடு இன்னிக்கும் போட்டுக்கிட்டு இருக்காரு.

ஐயா ஒரு பத்திரிகாசிரியர்ங்கிறது உங்களுக்குத் தெரியும். எம். எல். ஏ., கட்சித் தலைவர், அரசியல்வாதிங்கிற முறையிலே அவருக்குத் தினம் எத்தனையோ தபால்கள் வரும். ஐயா செங்கோல் பத்திரிகை 'புரூப்' திருத்துவார். வர கடிதாசிகளுக்கு அவரே பதில் எழுதுவார். 'உதவி வைத்துக் கொள்ளக் கூடாதா?' என்று கேட்டால், ''அந்தக் குமாஸ்தாவுக்குச் சம்பளம் கொடுக்க, பணம் எப்படித் திரட்டுவது என்கிற புதுக் கவலை வேறு சேரும்! அது எதற்கு?'' என்று சொல்லி விடுவாரு.

எனக்குத் தெரிஞ்ச ஐயா சேர்த்திருப்பது எல்லாம் ஐயாயிரம்தான் ! ஆமாங்க.... பணமில்லீங்க! புஸ்தகங்கள்! இன்கம்டாக்ஸ் கணக்குக் கொடுக்கணும் என்கிற நிலைக்குத்தான் அவர் இன்னும் வரலியே !

அவர் கணக்குப் போடறதெல்லாம், அவர்கிட்டே வரவங்க, அவரைச் சுற்றி இருக்கிறவங்க எல்லோரும் மன அமைதியோடும் மகிழ்ச்சியோடும் வாழணும் என்கிறதுதான்! அந்தக் கணக்கிலே அடங்கியவர்களுள் நானும் ஒருத்தன்!

பேட்டி: **கோமதி சுவாமிநாதன்**




1. எம்.என். ஜெயகுமார்
18 நிமிஷம்

2. வி. சந்திரசேகரன்
20 நிமிஷம்

3. குமாரி பானுமதி
22 நிமிஷம்

1 லிருந்து 90 வரை சரியாக யாரால் வெகு வேகமாகக் கண்டுபிடித்துச் சொல்ல முடியும்?

மேலே உள்ள கட்டத்தில் ஒன்று முதல் 90 வரையில் எண்கள் எங்கெங்கோ இடம் மாறி, சிறிதாகவும் பெரிதாகவும் இருக்கின்றன. ஒன்று முதல் 90 வரை வரிசையாக வேகமாகப் பார்த்துக் கொண்டே வரவேண்டும். இந்த ஆண்டு எஸ். எஸ். எல். ஸி. தேர்வு எழுதிய 1,89,978 மாணவர்களில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ள பெருமை கும்பகோணம் மாணவன் செல்வன் எம். என். ஜெயகுமாரைச் சாரும். குடந்தை டவுன் ஹைஸ்கூல் மாணவனான எம். என். ஜெயகுமார் 600க்கு 555 மார்க் பெற்றவன். இவன் கணக்கு, அல்ஜீப்ரா, ஜியாமிட்ரி ஆகிய இரு பாடங்களில் நூற்றுக்கு நூறு மார்க் பெற்றிருக்கிறான்.




எம். என். ஜெயகுமார் இந்த ஒன்று முதல் 90 வரையில் உள்ள எண்களை 18 நிமிடத்தில் அலட்டிக் கொள்ளாமல் கண்டு பிடித்தான்.

கும்பகோணம் பாணாதுறை உயர்நிலைப்பள்ளியில் சென்ற ஆண்டு படித்து, அந்தப் பள்ளிக்கூடத்துக்கே பெருமை தேடித் தந்தவன் செல்வன் வி. சந்திரசேகரன். சான்று: இந்த ஆண்டு எஸ்.எஸ். எல். ஸி. எழுதிய மாணவ மாணவிகளுள் பாணாதுறை உயர்நிலைப்பள்ளியில் அதிக மார்க் வாங்கியோருக்கு டாக்டர் பி. ராமமூர்த்தி எம்.ஏ. டி. எஸ். ஸி. வழங்கிய 'சீதாலட்சுமி பரிசு' ரூபாய்

அரைமணிக்கு மேலானால் அவமானம்!

இருநூறும் பெற்றான். வி. சந்திரசேகரன் 600க்கு 512 மார்க் பெற்றதுடன் பள்ளியில் முதல் இடத்தைப் பிடித்தான். கணக்கில் 100க்கு 97 மார்க் பெற்றான். ஒன்று முதல் 90 வரை உள்ள எண்களை வி. சந்திரசேகரன் 20 நிமிடங்களில் சிரமமின்றிக் கண்டுபிடித்தான்.



அதே பாணாதுறை உயர்நிலைப் பள்ளியில் படித்த குமாரி பானுமதி 600 மார்க்குக்கு 476 மார்க் பெற்றுள்ளாள். பாணாதுறை உயர்நிலைப் பள்ளியில் மாணவிகளில் முதல் இடத்தைப் பெற்றவள் குமாரி பானுமதி. ஒன்று முதல் 90 வரையில் உள்ள எண்களை 22 நிமிடங்களில் சற்றுத் திணறிய பிறகு கண்டுபிடித்தாள்.




போகட்டும். நீங்கள் எத்தனை நிமிடங்களில் கண்டு பிடிக்கிறீர்கள் பார்க்கலாம்! ஒரே ஒரு நிபந்தனை: 30 நிமிடங்களுக்கு மேல் ஆனால் யாரிடமும் சொல்லாதீர்கள். வெட்கக்கேடு!

புகைப்படங்களும் தகவலும்:
அன்பு



வியப்பளிக்கும் விமானபுரி




புஷ்பக விமானங்கள் என்றால் இராமாயணத்திலோ, மகாபாரதத்திலோ கேள்விப்பட்ட பெயராக இருக்கிறது என்பீர்கள். நவீன காலத்தில் தயாரிக்கப்பட்ட 'புஷ்பக்' விமானம் - மற்றும் பல விமானங்களைப் பற்றிய கட்டுரை இது

பிரதான கட்டடத்தினுள் நுழைந்து, இடதுபுறம் திரும்பி, பொதுமக்கள் தொடர்பு அதிகாரியின் அறையை அடைந்ததும் நமக்கு ஒரு சந்தேகம் உண்டாகிறது. விளையாட்டுப் பரிசுக் கோப்பைகள், கேடயங்கள் விற்பனை நிலையம் ஒன்றில் நுழைந்து விட்டோமோ என்ற சந்தேகம். ஆமாம், நூற்றுக்கணக்கான கோப்பைகளும் கேடயங்களும் இரண்டு மூன்று அலமாரிகள் நிறையக் குவிந்து கிடக்கின்றன. அதிகாரி நம்மை வரவேற்கிறார். தொழிற்சாலையைச் சுற்றிப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்.


'ஹாங்கர்கள்' எனப்படும் பெரிய பெரிய கூடாரங்கள். ஒவ்வொருவித விமானத்துக்கான வேலைகளைப் பகுத்துக் கொண்டிருக்கிறார்கள். விமான உடல் பாகத்தைச் செய்ய உதவும் தகடுகள் — அளவுதான் பெரிதாக இருக்கிறதே தவிர, அந்தத்தகடுகள்தாம் எத்தனை இலேசாக இருக்கின்றன! அவற்றை மடிக்க வேண்டிய முறையில் மடித்து, துவாரமிட வேண்டிய இடங்களில் இட்டு, இணைக்க வேண்டிய விதத்தில் இணைத்து, பிரும்மாண்டமான இயந்திரங்களும் மனிதர்களும் கருமமே கண்ணாயிருக்க நாம் தொழிற்சாலையைச் சுற்றி வருகிறோம்.


இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில் 22,000 பேர் வேலை செய்கிறார்களாம். நம்பத்தான் முடியவில்லை. ஆனால் அதற்குக் காரணம் இதன் மிகப் பரந்த விஸ்தீரணமாகவும் இருக்கலாம். தொழிற்சாலை, விமான தளம், குடியிருப்பு எல்லாம் சேர்ந்து மொத்தம் சுமார் 2300 ஏக்கர்கள். இன்னொன்று: பெரிய பெரிய விமானங்களின் அருகே நின்று வேலை பார்த்துக் கொண்டிருக்கும் மனிதர்கள் எங்கே நம் கண்களில் படுகிறார்கள்!



அழைத்துச் சென்றவரிடம் இதைச் சொன்ன போது அவர் கூறினார்: ''உங்களுக்கு இப்போதே அவர்கள் இருப்பது தெரிய







1. எச் எப் 24 விமானம். 2. எச் ஜெ. டி-16, ஜெட் பயிற்சி விமானம்- எச். ஏ. எல். முறை வகுத்தது. 3.ஜீ இணைப்பு வரிசையின் ஒரு பகுதி. இடது வரிசை: நாட், நடு வரிசை: எச்ஜேடி-16. வலது: ஹெலிகாப்டர். 4. நாட். 5. ஆர்பியஸ் என்ஜின். 6. க்ருஷக். 7. எச். ஏ. எல். பெங்களூர் தளத்தின் ஜெனரல் மானேஜர் டாக்டர் காட்டகே. 8. ஆயிரமாவது விமானம் தயாரித்து முடித்த விழாவில் (எச் எப் 24) திரு வி. சுப்பிரமணியம், திரு வீரேந்திர பட்டீல், ஸர்தார் ஸ்வரண் ஸிங்.

லில்லை. ஒரு விமானம் தயாராகி மேலே பறக்கும் போது அதை உருவாக்கியவர்களை — சிறு சிறு தொழிலாளர்களை யார் நினைவுகூர்கிறார்கள்?''

எனக்கு இது ஒரு பெரிய விஷயமாகப் பட்டது. எல்லாவற்றிலும் இப்படித்தானே! வீட்டில் குடியிருக்கிறோம். வீட்டைக் கட்டிய தொழிலாளர்களைப் பற்றி நினைத்துப் பார்க்கிறோமா? சட்டையை அணிந்துகொள்கிறோம். அதில் காஜா எடுத்த பையனை நினைக்கிறோமா?

''இந்துஸ்தான் ஏரோ நாடிக்ஸ்'' எனப்படும் இந்த விமானத் தொழிற்சாலை ஆயிரம் விமானங்களைச் செய்து முடித்ததற்காக அண்மையில் விழா நடத்தியது. இந்திய விமானத் துறையை அபிவிருத்தி செய்ய திரு சி. சுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு விமானத்துக்கான கணக்கீடுகள் செய்த பின்னர் உண்மையாக அதைத் தயாரித்துப் பறக்கவிடும் நாள் வரையிலும் ஏன் இந்த இடைவெளி? சில சமயங்களில் ஐந்தாறு வருடங்கள் ஆகின்றனவே? படிப்படியாக என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கின்றன என்பதை விவரிக்கிறார்கள்.

முதலில் வரைபடம் தயாரிக்கப்படுகிறது. காற்றழுத்தக் கணக்கீடுகள் செய்யப்பட்டு அவற்றுக்குத் தக்கபடி ஒவ்வொரு பாகமும் தயாரிப்பதற்கான படங்கள் வரையப்படுகின்றன. இந்த நுணுக்கமான படங்கள்தாம் மூலதனம். இவை மிகவும் துல்லியமாக இருக்க வேண்டும். கணக்கீடுகள் செய்கையில், திட்டமிடும் எடையைத் தாங்கக் கூடிய கன பரிமாணத்





தேவைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. சில சமயங்களில் எதிர்பார்க்கப்படும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இப்படங்களையும் அளவீடுகளையும் திரும்பத் திரும்ப மாற்றித் திட்டமிட நேரிடலாம்.

உதாரணமாக, ஒரு நவீன 'ட்ரான்ஸானிக்' விமானத்தைக் கணக்கிடு செய்ய 15,00,000 மணி நேரம் செலவாகும். மாதிரி வரைபடங்களின் எண்ணிக்கை மட்டுமே 6000 முதல் 7000 வரையாகும். சில நேரங்களில் மர மாதிரி ஒன்றைச் செய்து சோதனைகள் செய்ய வேண்டியிருக்கும். இதற்கு மட்டுமே ஆயிரம் வரை படங்களும், 81,000 மணி நேரமும் தேவையாயிருக்கும்.

காகிதக் கணக்கீடுகள் முடிந்தபின், முன்னோடி விமானம் ஒன்று செய்யப்பட்டுப் பறக்க விடப்படுகிறது. விமானம் மிகவும் நுணுக்கமான அமைப்புக் கொண்டதாயின் 1200 அல்லது 1400 முறைகள்கூடப் பறக்க விட்டு விளைவுகளைக் கணக்கிட வேண்டியிருக்கும். இதற்கான செலவும் ஒரு மணி நேரத்துக்கு ரூ. 5000 முதல் ரூ. 15000 வரை ஆகும்.

விமானத்தின் எடை தாங்கும் சக்தி எல்லாக் கால நிலையிலும், எல்லாச் சீதோஷ்ணத்திலும் வேலை செய்யும் சக்தி முதலியன பலவிதப் பரிசோதனைகளாலும் சோதிக்கப்படுகின்றன. எல்லாவற்றிலும் திருப்தியடைந்த பின்னர் உற்பத்தி பற்றிய தீர்மானங்கள் தொடங்கப் பெறுகின்றன. இவற்றுக்கான ஆயுதங்கள், பகுதி மாதிரிகள் முதலியன செய்யப்படுகின்றன. உதாரணத்துக்கு ஒரு நவீன யுத்த விமானத்தை எடுத்துக் கொண்டால், சுமார் 11,000 நுணுக்கமான பகுதிகள் செய்யப்பட வேண்டும். இதற்கெல்லாம் சுமார் 18,000 விதமான ஆயுதங்கள் தேவைப்படும்.

இவையெல்லாம் முடிந்து, உண்மையான உற்பத்தி தொடங்குகையில் பல நாட்கள் கடந்து விடும்.

1940ல் இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை தொடங்கப்பெற்ற பொழுது பயிற்சி விமானம், சண்டை விமானம், குண்டு வீச்சு விமானம் ஆகியவற்றைத் தயாரிப்பது அதன் திட்டமாக இருந்தது. உற்பத்தியும் தொடங்கி விட்டது. ஆனால் 1943ம் ஆண்டில் இரண்டாம் உலக மகாயுத்தம் காரணமாக உற்பத்தி நிறுத்தப்பட்டு, பாதுகாப்பு வேலைகள் — அதாவது விமானப் பழுது பார்த்தல், 'ஓவராலிங்', எஞ்சின் தயாரிப்புகள் முதலியன மேற்கொள்ளப்பட்டன. கிழக்கில் மிகப் பெரிய 'ஓவரால் — ரிப்பேர்' நிறுவனங்களில் ஒன்றாக ஆகியது இந்துஸ்தான் விமான உற்பத்திச்சாலை.

1947ல் இங்கிலாந்திலிருந்து வந்த ஆலோசனைக் குழு, இந்த விமானத் தொழிற்சாலைதான் இந்தியாவில் விமான உற்பத்திக்கு மிகவும் ஏற்ற இடமென்று சிபாரிசு செய்தது. இந்திய விமானப் படையினர் பயிற்சி பெற உதவும் விமானங்களை உற்பத்தி செய்வது 1949 வரை நடந்தது.

''பார்த்தீர்களா, HT–2 விமானத்தை! 1947–48ல் தொடங்கி இது வரை சுமார் 160 விமானங்கள் இந்திய விமானப் படைக்கும், விமானப் பயிற்சிக் கூடத்துக்கும் கொடுத்தோம். ஒரு விமானம் இந்தோனேசியாவுக்குப் பரிசளித்தோம். கொழும்புத் திட்டத்தின் கீழ் ஒன்று சிங்கப்பூருக்குக் கொடுத்தோம். பன்னிரண்டு விமானங்கள் கானாவுக்கு விற்றோம்'' என்று விளக்கினர் அழைத்துச் சென்றவர். தொடர்ந்து அவர், ''சென்னையில் நடந்த உலகக் கண்காட்சியில் இதைப் பார்த்திருப்பீர்களே!'' என்றார்.

நாட் விமானம் அங்கே நின்றது. மேலும், வாம்பயர், ஜெர்மானியப் பொறி இயல் வல்லுநர்களின் உதவியோடு 1956ல் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட HF–24 விமானம் முதலியவற்றையும் காண்கிறோம். பாகிஸ்தான் இந்தியா போரில் நாட் விமானங்களில் பறந்து நமது விமானப் படை வீரர்கள் செய்த சாகஸச் செயல்கள் நம் நினைவுக்கு வருகின்றன.

''என்ன ஸார்? ஒரு ஜெர்மானியரைக் கூடப் பார்க்க முடியவில்லையே? ஒருவேளை 1956லிருந்து இங்கேயே இருப்பதால் அவர்களும் தோற்றத்தில் நம்மைப் போலாகிவிட்டார்களோ?'' என்றேன்.

''இப்போது இங்கே ஜெர்மானியர் யாரும் இல்லை. அவர்களிடம் பயிற்சி பெற்ற நம்முடைய பொறியியல் வல்லுநர்களே சுமார் நூறு பேர்கள் இப்போது HF–24 உற்பத்தியை நிர்வகிக்கிறார்கள். இது இரண்டு எஞ்சின்கள் பொருத்தப்பட்ட சூப்பர் ஸானிக் விமானம். ஒலி வேகத்தையும் மிஞ்சக் கூடியது. இதில் உபயோகிக்கப்படும் என்ஜின் பிரிஸ்டல் ஸிட்லி ஆர்ஃபியஸ் 703 என்பதாகும். அது சரி, புஷ்பக விமானத்தில் போயிருக்கிறீர்களா, நீங்கள்?'' என்றார் அவர்.

''எங்கேயோ — இராமாயணத்திலேயோ, மகாபாரதத்திலேயோ அந்தப் பெயரைக் கேள்விப்பட்டதாக நினைப்பு!'' என்றேன்.

அவர் சிரித்துக் கொண்டே, ''நான் இன்றைய 'புஷ்பக்'கைப் பற்றிக் கூறுகிறேன். ஃப்ளையிங் கிளப்புகளுக்குச் சுமார் 125 விமானங்கள் விநியோகம் செய்திருக்கிறோம். புஷ்பக் மிக மிக இலேசான, இரண்டு இருக்கைகளைக் கொண்ட பயிற்சி விமானம். கனமற்ற உலோகக் குழாய்களாலான பிரேமும், பிரத்தியேகமான டார்ப்பாலின் போன்ற ஒருவிதக் கவரிங்கும் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதால் இது மிகவும் இலேசாக இருக்கிறது. 'கிருஷக்' என்ற நான்கு இருக்கை விமானமும் கிட்டத்தட்ட இது போன்ற ஒன்றே. இது குறைந்த தூரப் பிரயாணத்துக்குப் பயன்படுத்தப் படுகிறது'' எனக் கூறினார்.

''கான்டீன் எங்கே இருக்கிறது? நல்ல காப்பி கிடைக்குமா இப்போது?'' என்று பரிதாபமாக வினவினேன். அவர் புன்முறுவலுடன், ''மிகவும் களைப்பாக இருக்கிறதா? கால் வலிக்கிறதோ?'' என்றார். கால் வலிக்காமல் என்ன செய்யும்? எவ்வளவு பெரிய நிலப் பரப்பைச் சுற்றி வந்திருக்கிறேன். விமானம் கட்டப்படுவதைக் காண்கையில் அந்த ஆர்வத்தில் கால் வலி தெரியாவிட்டாலும் ஒரு பணி மனையிலிருந்து இன்னொன்



கீழ்ப்பாக்கம் வைத்தியக் கல்லூரியில் ரண சிகித்சை உதவிப் பேராசிரியர் டாக்டர் டி. மோகன்தாஸுக்கும், செல்வி ராஜி மோகன்தாஸ் B. Sc., க்கும் கோவை கிறிஸ்துவ தேவாலயத்தில் ஜூலை 8ந் தேதி விமரிசையாகத் திருமணம் நடந்தது. அதையொட்டி நடந்த வரவேற்புக்கு அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் தலைமை தாங்கினார். மத்திய அரசு உதவி அமைச்சர் திரு கே. எஸ். ராமஸ்வாமி டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார் திரு டி. எஸ். அவினாசிலிங்கம் மற்றும் கோவை பிரமுகர்கள் பலரும் விஜயம் செய்து மணமக்களை வாழ்த்தினர்.

றுக்கு நடக்கையில் அது தெரியத்தானே செய்கிறது!

"ஹெலிகாப்டரையும் பார்த்து விடலாமே!" என்றார். கால் வலி மறைந்தது. காப்பி ஆசை மறந்தது.

இங்கே தயாரிக்கப்படும் ஹெலிகாப்டர்கள் ஃப்ரான்ஸ் நாட்டு ஸட்-ஏவியேஷன் நிர்வாகத்தினரின் உதவியோடு செய்யப்படுகிறது.

பயிர்களுக்குக் கிருமிநாசினி தெளிக்க உபயோகப்படுத்தப்படும் விவசாய விமானத்தை அடுத்தாற் போல் பார்த்தேன்.

என்ஜின் தொழிற்சாலையில் பல ரக விமானங்களுக்கான பல தரப்பட்ட என்ஜின்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஹெலிகாப்டருக்கான என்ஜின் தயாரிப்பும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

"ஆமாம், ஒவ்வொரு விமானமும் வேறு ஏதேனும் ஒரு நாட்டின் உதவியோடுதான் தயாரிக்கப்படுகிறது போல் இருக்கிறதே! நாமாக ஒன்றும் புதிதாகச் செய்ய முடியாதோ?" என்று கேட்டேன்.

"HJT-16 கிரன் எனப்படும் ஜெட் பயிற்சி விமானம் முழுக்க முழுக்க நாங்களே டிஸைன் செய்ததுதான். நம் அரசாங்கமும் அனுமதி தந்து விட்டது. 1965ல் அதன் இரண்டாவது மாதிரியைக்கூடச் சோதனை செய்தாகி விட்டது. தயாரிப்பையும் ஆரம்பித்தாகி விட்டது. அதைத் தவிர கிளைடர், HT-2, புஷ்பக், கிருஷக் இவைகளும்கூட எங்கள் ஜெனரல் மானேஜர் டாக்டர் வி. எம். காட்டகே அவர்கள் முறை வகுத்தவைதாம்."

சில வெளிநாடுகளுக்கு டார்ட் என்ஜின் பாகங்களை ஏற்றுமதி செய்கிறார்கள்.

இன்று பெங்களூர், நாஸிக், கான்பூர், கோராபுட், ஹைதராபாத் ஆகிய ஐந்து இடங்களில் இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையின் ஐந்து தளங்கள் இருக்கின்றன. இவற்றில் பெங்களூர் தொழிற்சாலையே முதலில் ஆரம்பிக்கப்பட்டது. 1940ம் ஆண்டு காலஞ்சென்ற ஸ்ரீ வால்சந்த் ஹிராசந்த் மைசூர் அரசாங்கத்தின் உதவியோடு ரூ. 4 கோடி மூலதனத்துடன் ஆரம்பித்தார். 1941ல் இந்திய அரசாங்கமும் ஒரு பங்குதாரராகச் சேர்ந்தது.

1942ம் ஆண்டு இந்திய அரசாங்கம் மொத்தப் பங்குகளில் மூன்றில் இரண்டு பங்கைக் கைக்கொண்டு நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டது. 1943 முதல் 1945 வரை — அதாவது உலகப் போர் நடக்கையில் — அமெரிக்க விமானப் படை இந்நிறுவனத்தை மேற்பார்வை செய்தது. 1951ல் இத்தளத்தின் மேற்பார்வைப் பொறுப்பு, இந்தியத் தொழில் அமைச்சிடமிருந்து இந்தியப் பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றப்பட்டது. 1956ல் பங்கு மூலதனம் ரூ. 18 கோடியாக உயர்த்தப்பட்டது. இது 1960ல் 20 கோடியாகவும், 1961ல் 25 கோடியாகவும் உயர்த்தப்பட்டது. இதனுடன் இணைந்திருந்த ரயில் பெட்டித் தயாரிப்புப் பகுதி 1965 ஜனவரியிலிருந்து பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட்டுடன் (டிராக்டர் தயாரிப்புத் தொழிலகம்) சேர்க்கப்பட்டது.

வருடா வருடம் ரூ. 100 இலட்சத்துக்குக் குறையாமல் இலாபம் வருவதாகச் சொல்கிறார்கள். வெளிநாட்டு ஏற்றுமதி பெருகினாலும், சுதேசித் தயாரிப்புகள் மூலம் அந்நியச் செலாவணி மிச்சமானாலும் இது அதிகரிக்கக் கூடும்.

'விமானபுரா' என்று பிரத்தியேகமான ஓர் இரயில் நிலையத்தை நிறுவி, இதன் தொழிலாளர்களுக்காகவே காலையிலும், மாலையிலும் ஓர் இரயில் விடுகிறார்கள். இந்த இரயிலும், தொழிற்சாலைக்குச் சொந்தமான சுமார் 150 பஸ்களும் இருக்கின்றனவோ, தொழிற்சாலையில் வேலை நடக்கிறதோ! நகரப் போக்குவரத்து பஸ்ஸை நம்பினால் அதோகதிதான்! இந்தக் கட்டுரையாளருக்குத் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்க்கச் சுமார் இரண்டு மணி நேரம் பிடித்தது. ஆனால் நகரத்திலிருந்து போய் வரவோ மொத்தம் நான்கு மணி நேரத்துக்கு மேல் ஆயிற்று! பெங்களூர் நகரிலிருந்து 'விமானபுரா' சுமார் ஏழு மைல் தூரத்தில் இருக்கிறது.

'விமான ஸமாச்சார்' என்ற அவர்களுடைய பத்திரிகை எப்படி இருக்கிறது என்பதைக் காட்ட இரு உதாரணங்கள் தருகிறேன். ஒரு கட்டுரையில், மிகவும் கனமான விஞ்ஞான ரீதியில் ஓர் ஆராய்ச்சி. விமானம் கிளம்புவதற்கு முன் தளத்தில் ஓடுகிறது. இந்த ஓட்ட வேகத்தில் உண்டாகிற உயர்த்தும் சக்தியில் மேலே எழும்புகிறது. இப்படி முழு விமானமும் ஓடுவதற்குப் பதில் அதன் சிறகுகளை மட்டும் அசைத்து இந்த உயர்த்தும் சக்தியைப் பெற முடியுமா என்பது பற்றிய ஆராய்ச்சி.

இதே இதழில் இன்னொரு பக்கத்தில் மிக மிக இலேசான ஒரு நகைச்சுவைக் கட்டுரை — விமான விபத்துக்களைத் தவிர்க்க அதில் ஏறும் ஒவ்வொரு பிரயாணியின் ஜாதகத்தையும் பரிசீலனை செய்யவேண்டுமாம்! – ம. **இராஜாராம்**

புகைப் படங்கள் உதவி: எச். ஏ. எல். பொதுஜனத் தொடர்புப் பிரிவு.

நியூயார்க் நகரத்தின் பெரிய பாதாளச் சாக்கடைகளில் முதலைகள் காணப்பட்டன. எப்படி அங்கு வந்தன என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். சில வீடுகளில் முதலைகளைச் செல்லமாக வளர்ப்பது உண்டு. முதலைகள் குட்டி போட்டு விடும்.

குட்டிகள் சில சாக்கடைகளுள் தப்பிச் சென்று எப்படியோ இறந்து போகாமல் அங்கேயே வளர்ந்து விடுகின்றனவாம்.

("ஹாண்ட்புக் ஆப் பெட்ஸ்") - முத்து





பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

பூர்வ கதை

தமிழகத்தின் சரித்திரத்தில் இராஜ ராஜ சோழர் என்று புகழ்பெற்ற அருள்மொழிவர்மர் இளவரசரா யிருந்த சமயத்தில் இலங்கையில் சோழ நாட்டுப் படைகளுக்குத் தலைமை வகித்துப் போர் நடத்திக் கொண்டிருந்தார். அவருடைய தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி நோய்வாய்ப்பட்டுத் தஞ்சையில் படுத்த படுக்கையில் இருந்தார். சுந்தர சோழரின் மூத்த குமாரரும் பட்டத்து இளவரசருமான ஆதித்த கரிகாலர் காஞ்சியில் தங்கியிருந்தார். இரண்டு ராஜ குமாரர்களுக்கும் நடுவில் பிறந்தவரான குந்தவை பழையாறை நகரில் செம்பியன் மாதேவியின் ஆதரவில் இருந்து வந்தார்.

சோழ சாம்ராஜ்யத்துப் பெருந்தரத்து அதிகாரி களிலே மிக முக்கியமானவர்கள் அண்ணன் தம்பி களான பழுவேட்டரையர்கள். பெரிய பழுவேட்டரை யர் ஏறக்குறைய சோழ நாட்டின் சர்வாதிகாரி பதவியை வகித்து வந்தார். சாம்ராஜ்யத்தின் தன பொக்கிஷமும் தானிய பண்டக சாலையும் அவ ருடைய வசத்தில் இருந்து வந்தன. சின்னப் பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டையின் தளபதி பதவியை வகித்து வந்தார். சுந்தர சோழ சக்கர வர்த்தி பெரிதும் இந்த இரு சகோதரர்களின் ஆதிக் கத்தின் கீழ் இருந்து வந்தார்.

பெரிய பழுவேட்டரையர் முதுமைப் பிராயத்தில் நந்தினி என்னும் அழகிய பெண்ணை மணந்தார். நந்தினியும் குந்தவையும் ஒருவரையொருவர் துவேஷித்தனர். ஒருவரையொருவர் அவமானப் படுத்தவும் பழி வாங்கவும் சமயம் பார்த்துக் கொண் டிருந்தார்கள்.

நந்தினியின் தூண்டுதல் காரணமாகப் பெரிய பழுவேட்டரையர் ஒரு பெரிய சதியில் ஈடுபட்டார். சுந்தர சோழரின் இரு புதல்வர்களுக்கும் பட்டமில் லாமல் செய்து விட்டு, அவருடைய பெரிய தந்தை மகன் மதுராந்தகனைச் சிம்மாசனத்தில் ஏற்றத் தீர்மானித்தார். இதற்குக் கடம்பூர் சம்புவரையர் முதலிய சிற்றரசர்களின் பூரண சம்மதத்தையும் பெற்றார். காஞ்சியிலிருந்த ஆதித்த கரிகாலர் தம் தந்தையைத் தஞ்சையிலிருந்து காஞ்சிக்கு வரும்படி செய்வதற்காகக் காஞ்சியில் ஒரு பொன் மாளிகை கட்டினார். அதை வந்து பார்க்கும்படி தந்தையை வேண்டிக் கொண்டு தஞ்சைக்கு ஓலை கொடுத்து அனுப்பினார். ஓலையை எடுத்துச் சென்ற வன் வந்தியத்தேவன் என்னும் பழைய வாணர் குலத்து வீரன். அவன் வழியில் சம்புவரையர் மாளிகையில் தங்கியிருந்தபோது மேற்படி சதியா லோசனையைப் பற்றித் தெரிந்து கொண்டான். தஞ்சை சென்று சுந்தர சோழரிடம் ஓலையைக் கொடுத்த பிறகு பழையாறைக்குப் போய்க் குந்தவை தேவியைக் கண்டான். அவளிடம் தான் அறிந்ததை யெல்லாம் சொன்னான். குந்தவை அவனை இலங்கை சென்று தன் அருமைச் சகோதரனை அழைத்து வரும்படி ஏவினாள். வழியில் பல அபாயங்களுக்குத் தப்பி வந்தியத்தேவன் இலங்கை வந்து அருள்மொழிவர்மரிடம் குந்தவையின் ஓலை யைக் கொடுத்தான். அதே சமயத்தில் இளவரசரைத் தேடிக் கொண்டு இன்னும் சிலரும் வந்து சேர்ந் தார்கள். முதன்மந்திரி அநிருத்தர் ஆழ்வார்க் கடியானிடம் இளவரசர் இலங்கையிலேயே இருத்தல் நலம் என்று சொல்லி அனுப்பினார். தம்பியைக் கையோடு காஞ்சிக்கு அழைத்து வரும்படி ஆதித்த கரிகாலர் பார்த்திபேந்திரனை அனுப்பி யிருந்தார். சோழ குலத்தை அடியோடு கருவறுக்கச் சபதம் செய்திருந்த கொலைகாரர் கூட்டத்தைச் சேர்ந்த இருவரும் இலங்கைக்கு வந்திருந்தார்கள்.

அருள்மொழிவர்மர் இலங்கைக்கு வந்த புதிதில் அவர் தண்டு இறங்கியிருந்த இடத்தை ஊமை ஸ்திரீ ஒருத்தி சுற்றிச் சுற்றி வந்து ஓலமிட்டாள். இளவரசர் அவள் அருகில் சென்று பார்த்தபோது குழந்தைப் பிராயத்தில் தன்னைக் காவேரி நதியில் மூழ்கிப் போய்விடாமல் காப்பாற்றியவள் அவள் தான் என்று அறிந்தார். இளவரசர் தங்கியிருந்த இடம் கொடிய நச்சு சுரம் பரவியிருந்த இடம் என்பதை அம்மாதரசி உணர்த்தி அங்கிருந்து போய் விடும்படி எச்சரித்தாள். வேறு பல சந்தர்ப்பங் களிலும் அம்மூதாட்டி திடீர் திடீரென்று தோன்றி இளவரசரைக் காப்பாற்றினாள்.

இந்த மூதாட்டி பற்றிய கதையை அருள்மொழி வர்மர் ஆழ்வார்க்கடியானுக்கும் வந்தியத்தேவனுக் கும் சொன்னார். மூவரும் பேசிக் கொண்டே அநு ராதபுரத்திலிருந்து புறப்பட்டார்கள். மஹிந்தலையை நெருங்கும் சமயம் ஆதித்த கரிகாலர் அனுப்பி வைத்த பார்த்திபேந்திரனும் ஈழத்தில் சோழ சைன் னியத்தின் சேநாதிபதி பூதி விக்கிரமகேசரியும் அவர் களுடன் சேர்ந்து கொண்டார்கள். இவர்களுடன் வந்த யானை மீதிருந்து பூங்குழலி இறங்கினாள்.

பூங்குழலியை அருள்மொழிவர்மர் இலங்கைக்கு வருகையில் சந்தித்திருந்தார். அலைகடலில் அவள்



அநாயாசமாகப் படகு செலுத்துவதைப் பார்த்து "சமுத்திர குமாரி" என்று அவளை அன்பும் கிண்டலுமாக அழைத்திருந்தார். ஆனால் பூங்குழலியோ பெருவகையுடன் அந்தச் சொற்களையும் அவற்றைக் கூறியவரையும் இதயத்தில் ஆழப் பதிய வைத்திருந்தாள். ஒரு பாழடைந்த மண்டபத்தை அடைந்து அனைவரும் இளவரசருடன் மந்திராலோசனை நடத்தினார்கள். ஏற்கனவே வந்திருந்த மூன்று செய்திகளுடன் நான்காவதாகப் பூங்குழலி கொண்டு வந்திருந்த செய்தியைச் சேநாதிபதி வெளியிட்டார். 'பழுவேட்டரையர்கள் இளவரசரைச் சிறைப்படுத்தி வரப் பெரிய மரக்கலங்களில் வீரர்களை அனுப்பியிருக்கிறார்கள்' என்பதுதான் அந்தத் திடுக்கிட வைத்த செய்தி. இதற்குமேல் நடக்கப்போவதை வாசகர்கள் தொடர்ந்து படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

நாற்பத்தோராம் அத்தியாயம்

"அதோ பாருங்கள்!"

சேநாதிபதி பூதி விக்கிரமகேசரி கூறிய செய்தியைக் கேட்டதும் இளவரசரின் முகத்தில் புன்னகை அரும்பியது.

"கடைசியாக என் உள்ளத்தின் போராட்டத்துக்கு ஒரு முடிவு வந்து விட்டது போல் காண்கிறது" என்று மெல்லிய குரலில் தமக்குத்தாமே பேசிக் கொள்கிறவர் போலச் சொல்லிக் கொண்டார்.

பார்த்திபேந்திரன் கொதித்தெழுந்தான். "சேநாதிபதி! என்ன சொன்னீர்? இது உண்மைதானா? என்னிடம் ஏன் இதுவரை சொல்லவில்லை? இந்தப் பித்துக்குளிப் பெண்ணை நீர் நம்முடன் கட்டி இழுத்து வந்ததற்குக் காரணம் இப்போதல்லவா தெரிகிறது. மறுபடியும் கேட்கிறேன். பழுவேட்டரையர்கள் இளவரசரைச் சிறைப்படுத்தி வரக் கப்பல்களை அனுப்பியிருப்பது உண்மையா?" என்று கேட்டான்.

"ஆம், ஐயா! இந்தப் பெண் கண்ணால் பார்த்ததாகவும், காதால் கேட்டதாகவும் கூறுவதை நம்புவதாக இருந்தால் அது உண்மைதான்!"

"ஆகா! அந்தக் கிழவர், திருக்கோவலூர் மிலாடுடையார் கூறியது உண்மையாயிற்று. பழுவேட்டரையர்களை உள்ளபடி உணர்ந்தவர் அவர்தான்! சேநாதிபதி! இத்தகைய செய்தியை அறிந்த பிறகும் ஏன் சும்மா இருக்கிறீர்? பராந்தக சக்கரவர்த்தியின் குலத் தோன்றலை, சுந்தர சோழரின் செல்வப் புதல்வரை, நாடு நகரமெல்லாம் போற்றும் இளவரசரை, தமிழகத்து மக்களெல்லாம் தங்கள் கண்ணினுள் மணியாகக் கருதும் செல்வரை, ஆதித்த கரிகாலருடன் பிறந்த அருள்மொழி வர்மரை — இந்த அற்பர்களாகிய பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தி வர ஆட்களை அனுப்பும்படி ஆகிவிட்டதா? இனியும் என்ன யோசனை? உடனே படைகளுடன் புறப்பட்டுச் சென்று இளவரசரைச் சிறைப்படுத்த வந்தவர்களை அழித்து இந்த இலங்கைத் தீவிலேயே அவர்களுக்குச் சமாதியை எழுப்புவோம். பிறகு நாம் போட்ட திட்டத்தின்படி காரியத்தை நடத்துவோம்! கிளம்புங்கள்! இன்னும் ஏன் தயக்கம்?" என்று பார்த்திபேந்திரன் பொரி பொரித்துக் கொட்டினான்.

சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி அவனைப் பார்த்து, "பார்த்திபேந்திரா! நீ இப்படித் துடிதுடிப்பாய் என்று எண்ணித்தான் நான் முன்னமே இந்தப் பெண் கொண்டு வந்த செய்தியை உன்னிடம் சொல்லவில்லை. நன்றாக யோசித்துச் செய்ய வேண்டிய காரியம். அவசரப்படுவதில் பயனில்லை!" என்றார்.

"யோசனை செய்ய வேண்டுமா? என்ன யோசனை? எதற்காக யோசனை? இளவரசே! நீங்கள் சொல்லுங்கள். இனி யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? இதற்குமுன் ஏதேனும் தங்களுக்குத் தயக்கமிருந்திருந்தாலும் இனித் தயங்குவதற்கு இடமில்லையே? பழுவேட்டரையர்களைப் பூண்டோடு அழித்துவிட வேண்டியதுதானே?"

அப்போது இளவரசர், "சேநாதிபதியின் மனத்தில் உள்ளதையும் தெரிந்து கொள்ளலாமே? ஐயா! தாங்கள் எதைப் பற்றி யோசிக்க வேண்டும் என்கிறீர்கள்?" என்று எவ்விதப் படபடப்புமின்றி நிதானமாய்க் கேட்டார்.

"தங்களைச் சிறைப்படுத்துவதற்கு... இந்த வார்த்தைகளைச் சொல்லவும் என் வாய் கூசுகிறது... ஆனாலும் சொல்ல வேண்டியிருக்கிறது. தங்களைச் சிறைப்படுத்த வந்திருப்பவர்கள் சக்கரவர்த்தியின் கட்டளையோடு வந்திருந்தால் நாம் என்ன செய்வது? அப்போதும் அவர்களை எதிர்த்துப் போரிடுவதா?"

இதைக் கேட்ட பார்த்திபேந்திரன் கடகடவென்று சிரித்து விட்டு, "அழகாயிருக்கிறது தங்கள் வார்த்தை! சக்கரவர்த்தி சொந்தமாகக் கட்டளை போடும் நிலையில் இருக்கிறாரா? அவரையேதான் பழுவேட்டரையர்கள் சிறையில் வைத்திருக்கிறார்களே!" என்றான்.

இச்சமயத்தில் வந்தியத் தேவன், குறுக்கிட்டு, "பல்லவ தளபதி கூறுவது முற்றும் உண்மை. நானே என் கண்களால் பார்த்தேன். சக்கரவர்த்தியைச் சிறையில் வைத்திருப்பது போலத்தான் பழுவேட்டரையர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய விருப்பமின்றி யாரும் சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாது; பேச முடியாது. நான் ஒரு வார்த்தை சொல்லத் துணிந்ததற்காக என்னை அவர்கள் படுத்திய பாட்டை நினைத்தால்...... அப்பா! சின்னப் பழுவேட்டரையரின் இரும்புக் கை பற்றிய இடத்தில் இன்னும் எனக்கு வலிக்கிறது!" என்று கூறி, தன் மணிக்கட்டைத் தடவிக் கொண்டான்.

"அப்படிச் சொல், வல்லவரையா! உன்னை என்னமோவென்று நினைத்தேன். இளவரசருக்கும் சேநாதிபதிக்



கும் இன்னொரு முறை நன்றாக எடுத்துச் சொல்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

இளவரசர், ''வேண்டாம்; அவர் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி விட்டார்!'' என்று கூறி, வந்தியத் தேவனைப் பார்த்து, ''ஐயா! நீர் அந்தப் பெண்ணைப் போய் அழைத்து வருவதாகச் சொன்னீரே! ஏன் இங்கேயே நின்று கொண்டிருக்கிறீர்? அவள் கொண்டு வந்த செய்தியை அவள் வாய்மொழியாகவே விவரமாகக் கேட்கலாம்! கொஞ்சம் திறுக்குப் பிடித்த பெண் போலத் தோன்றுகிறது. எப்படியாவது நல்ல வார்த்தை சொல்லி அவளை இங்கே அழைத்து வாருங்கள்!'' என்றார்.

''போகிறேன், இளவரசே! போய் அழைத்து வருகிறேன். ஆனால், பழுவேட்டரையர்களிடம் தாங்கள் சிறைப்படுவது என்பதை மட்டும் என்னால் சகிக்க முடியாது. என் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் அது நடவாத காரியம்!'' என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் சென்றான்.

''சேநாதிபதி! தங்களுடைய கருத்து என்னவென்று சொல்லவில்லையே?'' என்று அருள்மொழிவர்மர் கேட்டார்.

''என்னுடைய கருத்து இதுதான். பழுவேட்டரையர்கள் அனுப்பியிருக்கும் ஆட்களைத் தாங்கள் சந்திக்கக் கூடாது. பார்த்திபேந்திரர் கொண்டு வந்திருக்கும் கப்பலில் ஏறித் தாங்கள் உடனே காஞ்சிக்குப் போய் விடுங்கள். நான் தஞ்சாவூருக்குப் போகிறேன். அங்கே சக்கரவர்த்தியை நேரில் பார்த்து உண்மை நிலைமையைத் தெரிந்து கொள்கிறேன்....''

''தஞ்சாவூருக்குத் தாங்கள் போவது சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுப்பது போலத்தான். போனால் திரும்பி வர மாட்டீர்கள். அப்படியே அங்குள்ள பாதாளச் சிறையில் போய் விடுவீர்கள். சக்கரவர்த்தியைப் பார்க்கவும் தங்களால் முடியாது.....''

''என்ன வார்த்தை சொல்கிறாய்? என்னைச் சிறையில் அடைக்கக் கூடிய வல்லமையுள்ளவன் சோழ நாட்டில் எவன் இருக்கிறான்? சக்கரவர்த்தியை நான் சந்திக்கக் கூடாது என்று தடுக்கக் கூடிய ஆண்மை உள்ளவன் எவன் இருக்கிறான்? மேலும், அங்கே முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் இருக்கிறார்......''

''பிரம்மராயர் இருக்கிறார். இருந்து என்ன பயன்? அவருக்கே சக்கரவர்த்தியைப் பார்க்க முடிவதில்லை. இதோ அவருடைய சிஷ்யன் நிற்கிறானே, அவன் என்ன சொல்கிறான் என்று கேட்டுப் பார்க்கலாமே?''

சேநாதிபதி ஆழ்வார்க்கடியான் பக்கம் திரும்பி, ''ஆம்; இந்த வைஷ்ணவன் இங்கு நிற்பதையே மறந்துவிட்டேன். திருமலை! ஏன் இப்படி மௌனமாக நிற்கிறாய்? சற்றுமுன் இளவரசர் சொன்னது போல் நீயும் ஊமையாகி விட்டாயா?'' என்றார்.

''சேநாதிபதி! கடவுள் நமக்கு இரண்டு காதுகளைக் கொடுத்திருக்கிறார்; வாய் ஒன்றைத்தான் கொடுத்திருக்கிறார். 'ஆகையால் செவிகளை நன்றாக உபயோகப்படுத்து; பேசுவதைக் கொஞ்சமாக வைத்துக் கொள்' என்று என் குருநாதர் எனக்குச் சொல்லியிருக்கிறார். முக்கியமாக, பெரிய ராஜாங்க விஷயங்களைப் பற்றிப் பேச்சுகள் நடக்கும் இடத்தில் அந்த விரதத்தைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து வரச் சொல்லியிருக்கிறார்...''

''குருவின் வாக்கை நன்றாக நிறைவேற்றுகிறாய். நாங்களே இப்போது கேட்பதனால் சொல். உன்னுடைய யோசனை என்ன?''

''எதைப் பற்றி என் யோசனையைக் கேட்கிறீர்கள், சேநாதிபதி!''

''இத்தனை நேரம் பேசிக் கொண்டிருந்த விஷயமாகத்தான். இளவரசர் இப்போது என்ன செய்வது உசிதம்? இலங்கையிலேயே இருக்கலாமா? அல்லது காஞ்சிக்குப் போகலாமா?''

''என்னுடைய உண்மையான கருத்தைச் சொல்லட்டுமா? இளவரசர் அநுமதித்தால் சொல்லுகிறேன்.''

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த அருள்மொழி வர்மர் ஆழ்வார்க்கடியானை ஏறிட்டுப் பார்த்து, ''சொல், திருமலை! தாராளமாய் மனத்தை விட்டுச் சொல்!'' என்று தைரியப்படுத்தினார்.

''இந்த இலங்கைத் தீவிலேயே மிகக் கடுமையான கட்டுக் காவல் உள்ள சிறைச்சாலை எது உண்டோ, அதைக் கண்டு பிடித்து, அதற்குள்ளே இளவரசரை அடைத்துப்போட வேண்டும்! வெளியில் பலமான காவலும் போட வேண்டும்!''

''இது என்ன உளறல்?'' என்றார் சேநாதிபதி.

''விளையாட இதுதானா சமயம்?'' என்றான் பார்த்திபேந்திரன்.

''நான் உளறவும் இல்லை, விளையாடவும் இல்லை. மனத்தில் உள்ளதைச்

சொன்னேன். நேற்று இரவு இளவரசர் அநுராதபுரத்து வீதிகளின் வழியாக வந்து கொண்டிருந்தார். அவர் தலை மீது ஒரு வீட்டின் முன் முகப்பு இடிந்து விழுந்தது. பிறகு ஒரு வீட்டில் நாங்கள் படுத்திருந்தோம். நல்ல வேளையாக ஒரு காரியத்தின் பொருட்டு எழுந்து போய் விட்டோம். சற்று நேரத்துக்கெல்லாம் அந்த வீடு தீப் பற்றி எரிந்தது. இவை யெல்லாம் உண்மையா, இல்லையா என்று இளவரசரையே கேளுங்கள்!''

இருவரும் இளவரசரை நோக்கினார்கள். அவருடைய முக பாவம் ஆழ்வார்க்கடியானுடைய கூற்றை உறுதிப்படுத்ியது.

''இந்த அபாயங்கள் எல்லாம் யாருக்காக நேர்ந்தவை என்று கேளுங்கள். என்னையோ அல்லது வந்தியத் தேவனையோ கொல்லுவதற்காக யாராவது வீட்டைக் கொளுத்துவார்களா ?''

பார்த்திபேந்திரன் உடனே துள்ளிக் குதித்து, ''இளவரசரைக் கொல்லுவதற்குத்தான் யாரோ முயற்சி செய்கிறார்கள். இதனால் இளவரசர் என்னுடன் காஞ்சிக்கு வர வேண்டிய அவசியம் உறுதிப்படுகிறது!'' என்றான்.

''கூடவே கூடாது ! தங்களுடன் இளவரசரை அனுப்புவதைக் காட்டிலும் பழுவேட்டரையர்களிடமே பிடித்துக் கொடுத்து விடலாம்'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''வைஷ்ணவனே ! என்ன சொன்னாய் !'' என்று பார்த்திபேந்திரன் கத்தியை உருவினான்.

சேநாதிபதி அவனைக் கையமர்த்தி, ''திருமலை ! ஏன் அவ்விதம் சொல்லுகிறாய் ? பார்த்திபேந்திரப் பல்லவர் சோழ குலத்தின் அருந் துணைவர் என்று உனக்குத் தெரியாதா ?'' என்று கேட்டார்.

''தெரியும், சேநாபதி, தெரியும் ! சிநேகம் இருந்து விட்டால் மட்டும் போதுமா ?''

'' பார்த்திபேந்திரர் சிநேகத்துக்காகவே உயிரையும் கொடுக்கக் கூடியவர் என்பதை அறிவேன், திருமலை!''

'' அதுவும் இருக்கலாம். ஆனால் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு மறுமொழி கூறச் சொல்லுங்கள். நாங்கள் முந்தாநாள் மாலை தம்பள்ளைக்கு அருகில் போய்க் கொண்டிருந்த போது இவருடன் இரண்டு பேர் வருவதைப் பார்த்தோம்! அந்த மனிதர்கள் யார் ? இப்பொழுது அவர்கள் எங்கே என்று இவரைக் கேட்டுச் சொல்லுங்கள்.''

பார்த்திபேந்திரப் பல்லவன் சிறிது திடுக்கிட்டுப் போனான். கொஞ்சம் தயக்கத்துடனே கூறினான்: ''திரிகோண மலையில் அவர்களை நான் சந்தித்தேன். இளவரசர் இருக்குமிடத்தை எனக்குக் காட்டுவதாக அவர்கள் அழைத்து வந்தார்கள். அநுராதபுரத்தில் திடீரென்று மறைந்து விட்டார்கள். எதற்காகக் கேட்கிறாய், வைஷ்ணவனே ! அவர்களைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா ?''

'' தெரியும் ! சோழ குலத்தை அடியோடு ஒழித்துவிடச் சபதம் செய்திருப்பவர்களில் அவர்கள் இருவர் என்று எனக்குத் தெரியும். நேற்று அநுராதபுரத்தில் அவர்கள்தான் இளவரசரைக் கொல்லப் பார்த்தார்கள் என்று ஊகிக்கிறேன்.... ஆகா!



அதோ பாருங்கள் !'' என்று ஆழ்வார்க்கடியான் சுட்டிக் காட்டினான்.

அவன் சுட்டிக் காட்டிய இடம் அம் மண்டபத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்தது. நெருங்கிப் படர்ந்திருந்த மரங்களுக்கிடையில் ஓர் அழகிய யுவதியும் யௌவன வாலிபனும் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வந்தியத் தேவனும் பூங்குழலியுந்தான் என்பதும் ஊகிக்கக் கூடியதாயிருந்தது. பேசிக் கொண்டே யிருந்த வந்தியத் தேவன் சட்டென்று ஒரு சிறிய கத்தியைச் சுழற்றி வீசி எறிந்தான். கத்தி ஒரு புதரில் போய் விழுந்தது. 'வீல்' என்று ஒரு குரல் கேட்டது.

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

பூங்குழலியின் கத்தி

பாழடைந்த மண்டபத்திலிருந்து பூங்குழலியைத் தேடிக் கொண்டு சென்ற வந்தியத்தேவன் அவள் ஒரு மரத்தின் மேல் சாய்ந்து நின்று கொண்டிருப்பதைக் கண்டான். இலேசான விம்மல் அவளிடமிருந்து வந்து கொண்டிருந்தது.

குரலை மிகவும் நயப்படுத்திக் கொண்டு, ''பூங்குழலி!'' என்றான்.

சத்தம் கேட்ட பூங்குழலி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

''நீதானா?'' என்று சொல்லி மறுபடியும் திரும்பிக் கொண்டாள்.

''நான்தான்! என் பேரில் உனக்கு என்ன கோபம்?''

''உன் பேரில் எனக்கு எந்தவித கோபமும் இல்லை.''



''பின்னே ஏன் உனக்கு இவ்வளவு சிடுசிடுப்பு?''

''எனக்கு ஆண் பிள்ளைகளைக் கண்டாலே பிடிக்கவில்லை.''

''இளவரசரைக் கூடவா?''

பூங்குழலி திரும்பிக் கண்களில் கனல் எழும்படி வந்தியத் தேவனைப் பார்த்தாள்.

''ஆமாம்; அவரைத்தான் முக்கியமாகப் பிடிக்கவில்லை!'' என்றாள்.

''அப்படி அவர் என்ன குற்றத்தைச் செய்து விட்டார்?''

''என்னை அவருக்கு ஞாபகமேயில்லை. என்னை அவர் முகமெடுத்துக் கூடப் பார்க்க வில்லை.''

''உன்னை அவருக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறது. நான் உன்னைப் பற்றிக் கூறியதும், 'ஓ! சமுத்திர குமாரியை எனக்குத் தெரியாதா?' என்றார்.''

''பொய் சொல்லுகிறாய்.''

''நீயே நேரில் வந்து கேட்டுக்கொள்.''

''என்னை நினைவிருந்தால், ஏன் என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை?''

''அவர் பேசினார்; நீதான் மறுமொழி சொல்லாமல் ஓடி வந்து விட்டாய்.''

''அந்த மாதிரி பேச்சை நான் சொல்ல வில்லை. தெரிந்தவர்களைப் பார்த்தால் 'என்ன? ஏது?' என்று விசாரிப்பது கிடையாதா? நீ சொல்லுவது பொய்! அவர் என்னை முகமெடுத்தே பார்க்கவில்லை.''

''பூங்குழலி! அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.''

''என்ன காரணம்?''

''இளவரசருக்கு இப்போது ரொம்பக் கஷ்ட காலம்.''

''யார் சொன்னது?''

''எல்லா ஜோசியர்களும் சொல்லியிருக்கிறார்கள். குடந்தை ஜோதிடர் என்னிடமே சொன்னார்.''

''உன்னிடம் என்ன சொன்னார்?''

''இளவரசருக்குக் கொஞ்ச நாள் வரையில் கஷ்டத்துக்கு மேல் கஷ்டமாக வந்து கொண்டிருக்கும் என்று சொன்னார். அவரைச் சேர்ந்தவர்களுக்கும் கஷ்டங்கள் வரும் என்று சொன்னார். இது இளவரசருக்கும் தெரியும். ஆகையினால் அவர் யாரும் தன்னோடு சிநேகிதமாக இருப்பதை விரும்பவில்லை. தனக்கு வரும் கஷ்டம் தன்னோடு போகட்டும் என்று நினைக்கிறார்.''

''நீ மட்டும் ஏன் அவரோடு சிநேகமாயிருக்கிறாய்?''

''நீ சற்று முன் பார்க்க வில்லையா? என்னையும் சண்டை பிடித்துத் துரத்த அவர் பிரயத்தனப்படுகிறார். நடுச் சாலையில் ஒரு காரணமும் இல்லாமல் அவர் என்னோடு கத்திச் சண்டை போட்டார். நீங்கள் வந்ததினால் சண்டை நின்றது.''

''அவர் துரத்தினாலும் நீ அவரை விட்டுப் போக மாட்டாயா?''

''மாட்டவே மாட்டேன். அவருக்கு வரும் கஷ்டங்களை யெல்லாம் நானும் பகிர்ந்து அனுபவிப்பேன்.''

''அவரை உனக்கு அவ்வளவு பிடித்திருக்கிறதா ?''

''ஆமாம்; ரொம்ப ரொம்பப் பிடித்திருக்கிறது.''

''எதனால் பிடித்திருக்கிறது ?''

''காரணம் சொல்லத் தெரியாது. அவரைப் பார்த்தவுடன் அவர் பேரில் பிரியம் ஏற்பட்டு விட்டது.''

''எனக்கும் அப்படித்தான்!'' என்றாள் பூங்குழலி. உடனே தான் அவ்விதம் திறந்து சொல்லி விட்டதைப் பற்றி வருந்தி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

'' உனக்கு இளவரசரிடம் பிரியம் என்று எனக்குத் தெரியும். ஆகையினால் உன்னை அழைத்துப் போக வந்தேன். என்னுடன் வா !''

''வரமாட்டேன்!'' என்று பூங்குழலி அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

'' வராவிட்டால் பலவந்தமாக உன்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு போவேன்.''

''அருகில் நெருங்கினால் இதோ கத்தி இருக்கிறது; ஜாக்கிரதை !'' என்று பூங்குழலி தன் இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்துக் காட்டினாள்.

'' பாவிப் பெண்ணே ! எதற்காக என்னைக் குத்திக் கொல்ல வருகிறாய்? இளவரசரிடம் உன்னைப் பற்றி ஞாபகப் படுத்தினேனே, அதற்காகவா ?''

''நீ பொய் சொல்லுகிறாய்; அவரிடம் என்னைப் பற்றி நீ ஒன்றுமே சொல்லவில்லை !''

'' போனால் போகட்டும் ; இளவரசரைப் பிடித்துக் கொண்டு போக இரண்டு கப்பல்கள் வந்திருப்பதாகச் சொன்னாய் அல்லவா? அதை அவரிடம் வந்து சொல்லிவிட்டு அப்புறம் எப்படியாவது தொலைந்து போ !''

''எல்லா விவரங்களும் சேநாதிபதியிடம் சொல்லி விட்டேன்.''

''இளவரசர் உன்னிடம் நேரில் கேட்டு அறிய விரும்புகிறார்.''

''அவர் முன்னால் வந்தால் நான் ஊமையாகி விடுவேன்.''

'' ஊமைச்சிகளிடத்தில் இளவரசருக்கு ரொம்பப் பிரியம் !''

''சீச்சீ! நீ பரிகாசம் செய்கிறாய்!'' என்று சொல்லிப் பூங்குழலி கத்தியை ஓங்கினாள்.

''அப்படியானால் நீ என்னுடன் வரப் போவதில்லையா ?''

''இல்லை !''

''சரி; நான் போகிறேன்!'' என்று கூறி விட்டு வந்தியத்தேவன் இரண்டு அடி எடுத்து வைத்தான். மறுபடியும் சட்டென்று திரும்பிப் பூங்குழலியின் கையிலிருந்து அவளுடைய கத்தியைப் பிடுங்கி வீசி எறிந்தான் !

வீசி எறிந்த கத்தி வெகு தூரம் சுழன்று சுழன்று சென்று ஓர் அடர்ந்த புதரில் விழுந்தது.

கத்தி விழுந்த இடத்திலிருந்து 'வீல்' என்று ஒரு குரல் கேட்டது.

அது மனிதக் குரலா, ஏதேனும் ஒரு விலங்கு அல்லது பட்சியின் குரலா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

கத்தியைப் பிடுங்கியதும் வந்தியத்தேவனைக் கடுங் கோபத்துடன் பார்த்த பூங்குழலி மேற்கூறிய சத்தத்தைக் கேட்டதும் கத்தி விழுந்த இடத்தை ஆர்வத்துடன் நோக்கினாள். பிறகு,



இருவரும் வியப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மெள்ள மெள்ள நடந்து கத்தி விழுந்த இடத்துக்கருகிலிருந்த புதரை நெருங்கிப் பார்த்தார்கள்.

செடிகளிலும் தரையிலும் புது இரத்தம் சிந்தியிருந்தது.

மற்றப்படி அங்கு மனிதரும் இல்லை; விலங்கும் இல்லை. பூங்குழலியின் கத்தியையும் காணவில்லை !

'' பார்த்தாயா ? பூங்குழலி ! நான் கூறியதன் உண்மை இப்போதாவது தெரிகிறதா? இளவரசரை நாலா பக்கமும் அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன. எந்த நேரத்தில் எந்த இடத்திலிருந்து எப்படிப்பட்ட அபாயம் வருமென்று சொல்ல முடியாது. தற்செயலாக உன்னுடைய கத்தியைப் பிடுங்கி நான் விட்டெறிந்தேன். அதிலிருந்து இங்கே யாரோ பதுங்கிக் கொண்டிருந்தது தெரிய வந்தது. எதற்காகப் பதுங்கியிருக்க வேண்டும் என்று நீயே யோசித்துப் பார் ! இளவரசரைச் சமயம் பார்த்துத் தீர்த்துக் கட்டுவதற்காகத்

தான்! கோடிக்கரைக்கு நான் வந்ததற்கு முதல் நாள் இரண்டு பேரை உன் அண்ணன் படகேற்றி அழைத்துப் போனதாகவும் அவர்களைப் பற்றி உனக்குச் சந்தேகம் தோன்றியதாகவும் சொல்லவில்லையா? அதை ஞாபகப்படுத்திக் கொள்! இப்படிப்பட்ட சமயத்தில் இளவரசரிடம் பிரியம் உள்ளவர்கள் அவரை விட்டுப் போகலாமா?'' என்று வந்தியத்தேவன் மூச்சு விடாமல் பேசி நிறுத்தினான்.

''அவர் என்னைப் போகச் சொன்னால் என்ன செய்வது?'' என்று பூங்குழலி கேட்டாள்.

''அவர் போகச் சொன்னாலும் நாம் போகக் கூடாது!''

பூங்குழலி சற்று யோசித்துவிட்டு, ''இங்கே பதுங்கியிருந்தது யார் என்று கண்டுபிடிக்க வேண்டாமா?'' என்றாள்.

''அது நம்மால் முடியாத காரியம். இந்த அடர்ந்த காட்டில் எங்கேயென்று தேடிக் கண்டுபிடிப்பது? அதிக நேரம் தாமதித்தால் இளவரசருக்கு உண்மையாகக் கோபம் வந்து விடும். நம்மை விட்டு விட்டு எல்லாரும் போய் விடுவார்கள்! பேசாமல் என்னுடன் வா!''

'' சரி, வருகிறேன்!'' என்று பூங்குழலி கூறினாள்.

இருவரும் மற்றவர்கள் இருந்த மண்டபத்தை நோக்கி நடந்தார்கள்.

* * *

மண்டபத்திலிருந்தவர்கள் வந்தியத்தேவனும் பூங்குழலியும் அருகில் வந்ததும் முதலில் மேற்படி சம்பவத்தைப் பற்றியே கேட்டார்கள். ''எதற்காகக் கத்தியை எறிந்தாய்? 'வீல்' என்ற சத்தம் கேட்டதே, அது என்ன சத்தம்?'' என்று வினவினார்கள்.

''புதரில் ஏதோ ஒரு மிருகம், சிறுத்தையோ அல்லது நரியோ, பதுங்கியிருந்தது போல் தோன்றியது. அதனால் இவனுடைய கத்தியைப் பிடுங்கி வீசி எறிந்தேன். கிட்டப் போய்ப் பார்த்தோம். ஒன்றும் இல்லை'' என்றான் வந்தியத்தேவன்.

''அது போனால் போகட்டும்; இந்தப் பெண்ணிடம் கேட்க வேண்டியதைக் கேளுங்கள்!'' என்றார் சேநாதிபதி.

பூங்குழலி வந்ததிலிருந்து இளவரசரையே பார்த்துக் கொண்டிருந்தாள். இளவரசர் அப்போது அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

சீச்சீ! இந்த நெஞ்சு எதற்காக இப்படி அடித்துக் கொள்கிறது? தொண்டையில் வந்து ஏதோ அடைக்கிறதே. அது என்ன? கண்ணில் எதற்காகக் கண்ணீர் ததும்புகிறது! அசட்டுப் பெண்ணே! உன் தைரியம் எல்லாம் எங்கே போயிற்று? அலை கடலையும் பெரும் புயலையும் கண்டு கலங்காத உன் உள்ளம் ஏன் இப்போது இப்படித் தத்தளிக்கிறது? கொடிய பயங்கர வேங்கைப் புலியின் கொள்ளிக் கண்களை ஏறிட்டுப் பார்க்கும் துணிவு படைத்த உன் கண்கள் ஏன் இப்போது மங்கல் அடைகிறது! பெண்ணே! மறுபடியும் பைத்தியக்காரி என்ற பட்டம் சூட்டிக் கொள்ளாதே! இளவரசரை நிமிர்ந்து பார்! அவர் கேட்கும் கேள்விகளுக்குக் கணீர் என்று மறுமொழி சொல்லு! உன்னை என்ன செய்து விடுவார்? அவர் கருணை மிகுந்தவர், தயாளு என்று உலகமெல்லாம் சொல்கிறதே! பேதைப் பெண்ணாகிய உன்னை இளவரசர் என்ன செய்து விடுவார்!....


''சமுத்திர குமாரி! என்னை உனக்கு நினைவிருக்கிறதா?'' என்று அவர் கேட்டது ஆழ்கடலின் அடியிலிருந்து வரும் குரல் போல் அவள் காதில் தொனித்தது. (தொடரும்)

வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.

உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஸெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான ஸெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்...இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக் கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.







மற்றும் பாமாலிவ் டால்க் டீலக்ஸ் —
மயக்கும் 17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை

PT.C.B TAM.

துள்ளும் குழந்தைகள் நன்கு வளர்ந்திட

ருசித்துப் பருகட்டும் போர்ன்விடா!



ஓடி விளையாடும் குழந்தைகளுக்கு தினசரி உணவிலிருந்து கிடைக்கும் சக்தி போதுவதில்லை. எவ்வளவு சீக்கிரம் அவர்களுக்கு சக்தி கிடைக்கிறதோ அதே வேகத்தில் அது பள்ளிக்கூடத்திலும், விளையாடும் போதும் செலவழிந்து விடுகிறது. இழக்கும் சக்தியை மீட்டுத் தந்து குழந்தைகளைத் துள்ளும் ஆரோக்கியத்துடன் வளர்க்க, தினமும் ஒரு கப் போர்ன்விடா கொடுங்கள். தம் மக்கள் நலம் கருதும் தாய்மார்கள் அனைவரும் இதை ஆமோதிப்பார்களே!

பால், சர்க்கரை, மால்ட், கோகோ இவையாவும் திட்டமாகக் கலக்கப்பட்டதும், போஷாக்குச் சத்து நிறைந்ததுமான ஒரு இனிய பானம் போர்ன்விடா. ஆம், இது ஒரு காட்பரிஸ் தயாரிப்பு!



சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும்

காட்பரிஸ் போர்ன்விடா.

Bensons/0391/TAM

தபால் தலையின் கதை

இந்தியாவில் அமெரிக்கத் தூதராயிருந்த பங்கர் ஒரு சமயம் சென்னைக்கு விஜயம் செய்தார். அப்பொழுது சென்னையில் கான்சல் ஜெனரலாக இருந்த சைமன்ஸ், பங்கரையும் ஸ்ரீமதி பங்கரையும் தபால் தலைக் கண்காட்சியைக் காண அழைத்து வந்தார். ஏற்கனவே தபால் தலைக் கண்காட்சியை நிர்வகிக்கும் ராவ் அவர்களிடம் சைமன்ஸ், 'பங்கர் மூன்று நிமிஷங்களே கண்காட்சியைக் காண முடியும். பிறகு அவருக்கு வேறு முக்கிய அலுவல்கள் இருக்கின்றன' என்று தெரிவித்திருந்தார். ராவும் தலையசைத்தார். ஆனால் பங்கரும் ஸ்ரீமதி பங்கரும் தபால் தலைக் கண்காட்சிக்குள் நுழைந்து அரை மணியாகியும் வெளிக் கிளம்பவில்லை. ஸ்ரீமதி பங்கருக்குப் பறவைகளின் வாழ்க்கையை ஆராய்வதென்றால் (Bird watcher) கொள்ளை ஆசை. வகை வகையான பறவைகளைத் தபால் தலைகளில் கண்டதும் அந்த இடத்தை விட்டு அவர் நகரவில்லை. நேரமோ ஓடிக் கொண்டிருந்தது. சைமன்ஸ் துடிதுடித்துக் கொண்டிருந்தார். தம் மனைவியைச் சாக்கிட்டுக் கொண்டு ஸ்ரீ பங்கரும் கண்காட்சியிலேயே பொழுதைக் கழித்தார். ஒரு வழியாக முக்கால் மணி நேரம் கழித்து அனைவரும் தபால் தலைக் கண்காட்சியை விட்டு நகர்ந்தார்கள். ஸ்ரீ வி. என். எஸ். ராவ் பறவைத் தபால் தலைகள் அடங்கிய 'ஆல்பம்' ஒன்றை ஸ்ரீமதி பங்கருக்குப் பரிசளித்தார்.

தபால் தலைக் கண்காட்சியைக் காண்பதிலேயே இத்தனை ஆனந்த மிருந்தென்றால் தபால் தலை சேகரிப்பில் உள்ள ஆசையைச் சொல்லி முடியுமா? தபால் தலை சேகரிப்போர் அத்துறையில் தங்களைப் 'பைத்தியம்' என்று சொல்லிக் கொள்வதிலேயே பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்.

தபால் தலை சேகரிப்பில் ஈடுபட்டோரில் ரூஸ்வெல்டும், ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் பிரசித்தி.

இப்படிப் பெரும் புள்ளிகளைக் கவர்வதால் இதைப் 'பொழுது போக்கில் ராஜா, ராஜாக்களின் பொழுது போக்கு' என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் அதே சமயம் உலகில் லட்சோப லட்சம் சிறுவர்களுக்கும் ஏழை எளியவருக்கும் ஏற்ற பொழுது போக்காகவும் விளங்குவதே இதன் சிறப்பு

ஓர் இளம் பெண் 1841ம் வருஷம் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் உபயோகித்த தபால் தலைகளைக் கோரிக் கேட்டுக்கொண்ட விளம்பரம் கொடுத்தாள். "நான் அலங்கரித்துக் கொள்ளப் பயன்படுத்தும் அறையை, உபயோகித்த தபால் தலைகளை ஒட்டி அழகுபடுத்த விரும்புகிறேன். இதுவரை 16,000 தபால் தலைகளை ஒட்டியும் போதவில்லை. யாராவது நல்ல மனம் படைத்தவர்கள் உபயோகப்படுத்தப் பட்ட தபால் தலைகளை எனக்கு அனுப்பி வைத்தால் நன்றியுடையவளாக இருப்பேன்."

பிரிட்டிஷ் கினியில் 1856ம் வருஷத்தில் வெளியான ஒரு பென்னி நாணயத் தபால் தலையின் இன்றைய மதிப்பு 50,000 டாலர்களாகும். தபால் தலை அச்சடிப்பில் ஏதாகிலும் அசம்பாவிதமாக நேர்ந்துவிட்டால் அந்த ஸ்டாம்புக்கு ஏக மதிப்பு!

1916ம் வருஷம் வாஷிங்டன் உருவம் தாங்கி வந்த தபால் தலையில் ஒரு தவறு நேர்ந்து விட்டது. இந்த ஐந்து செண்ட் தவறான ஸ்டாம்பைத் தபால் தலை சேகரிப்போர் எப்படியும் பெற்றுவிட வேண்டும் என்று போட்டி யிட்டார்கள்! ஒவ்வொரு தவறான ஸ்டாம்பும் ஐம்பதிலிருந்து 1250 டாலர்கள் வரை விலை போயிற்று!


சென்னையில் தபால் தலை சேகரிப்போர் சங்கம் இரு நூறு அங்கத்தினர்களோடு சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. அவர்கள் இந்திய-அமெரிக்கச் சங்கத்தின் கூட்டுறவோடு சென்னை அமெரிக்கத் தகவல் நிலையக் கட்டிடத்தில் 'அமெரிக்காவில் தபால் தலைகள்' என்று ஓர் அரிய கண்காட்சியை வைத்திருக்கிறார்கள்.

சென்னை தபால் தலை சேகரிப்போர் சங்கத்தின் தலைவர் திரு ராவ். இந்திய சர்க்காருக்குத் தபால் தலை வெளியிடுவதில் ஆலோசகராக விளங்குகிறார்.

"உலக அரங்கில் மிருகங்கள், பறவைகள் ஆகிய தபால் தலைகளுக்குத்தான் அதிக மதிப்பு. தலைவர்கள் படம் உள்ள ஸ்டாம்புகள் அவ்வளவாகத் தபால் தலை சேகரிப்போரின் கவனத்தைக் கவருவதில்லை. வருஷத்தில் இருபது தபால் தலைகள் வெளியிட இந்திய சர்க்கார் முன்வந்தால் அவற்றில் ஐந்துக்கு அதிகமாகத் தலைவர்களின் படம் போடக் கூடாது; மற்றவைகளில் கலைச் சிறப்பு, பறவை, மிருகங்கள் ஆகியவை இடம் பெற வேண்டும் என்பது ஆலோசனைக் கமிட்டியின் முடிவு. ஆனால் நடைமுறையில் அரசியல் தலைவர்களின் படம் தாங்கிய தபால் தலைகள்தான் பெரும்பாலும் வெளிவருகின்றன. ஸ்டாம்பு வெளியிடுவதிலும் அரசியல் புகுந்து கொண்டிருப்பதற்கு இதுவே அத்தாட்சி! இந்தியாவில் பல்வித வண்ணங்களில் ஸ்டாம்பு தயாரிப்பதற்கு விரைவில் நாசிக்கில் இயந்திரங்கள் நிறுவப்பட இருக்கின்றன. வருங்காலத்தில் நம் தபால் தலைகளிலும் வண்ணப் படங்கள் இடம் பெறும்!" என்றார் வி. என். எஸ். ராவ்.

தபால் தலை சேகரிப்போர் சங்கம் பல பள்ளித் தலைமை ஆசிரியர்களிடம் சென்று இலவசமாக ஸ்டாம்புகள் வழங்கி, இம்முயற்சியில் மாணவர்களை ஈடுபடுத்தும்படி ஊக்கி வருகிறது.

- பி.எஸ்.எம்.






எடின்பரோ கோமகன், புரூக் பாண்ட் தேநீர்க் கோப்பையை வென்ற ஏர் இந்தியா விமானப் பணிப்பெண் வாலரி ரோஸரியோவைப் பாராட்டுகிறார். டிரான்ஸ் அட்லாண்டிக் ஆகாய விமானப் போட்டியில் வாலரி பரிசு பெற்றாள். லண்டன் போஸ்ட் ஆபீஸ் டவரிலிருந்து புறப்பட்டு நியூயார்க் எம்பயர் ஸ்டேட் பில்டிங்கை ஏழு மணி, இருபத்தொரு நிமிஷம் முப்பத்தொன்பதரை செகண்டில் அடைந்து விட்டாள். இந்த அரிய சாதனையைச் செய்த பெண்மணிக்கு எடின்பரோ கோமகனின் பாராட்டுக் கிடைத்ததில் அதிசயமென்ன?

❋

சென்னையில் ஹோமியோபதி வைத்தியர் மகாநாடு திரு எஸ். சீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழக முதன் மந்திரி மகாநாட்டில் தொடக்க உரையாற்றுகிறார். மகாநாட்டில் காலஞ்சென்ற டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்களின் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.



❋

பிரபல தமிழ் அறிஞரும் கவிஞருமான கல்கத்தா திரு ந. சிங்காரம் அவர்களுடைய மணிவிழாவில் திரு கி. வா. ஜகந்நாதன் பொன்னாடை அணிவித்துக் கவிஞரின் தமிழ்த் தொண்டைப் பாராட்டினார்.

கிருஷ்ண கான சபையில் சமீபத்தில் குமாரி ஆர். லக்ஷ்மியின் பரத நாட்டிய, குச்சிப்பூடி நடன நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தன. மேயர் திரு வேலூர் நாராயணன் தலைமை வகித்துக் குமாரியைப் பாராட்டினார்.







ராமாயணம்

ராஜாஜி

22. கைகேயி வியந்தாள்

ஒரு பக்கம் இயற்கை வேகம் ராமனைப் பற்றிய அன்பு. மற்றொரு பக்கம் செய்த பிரதிக்ஞையை எவ்வாறு என் போன்றவன் பொய்யாக்கலாம் என்கிற தருமசங்கடச் சிக்கல். கைகேயி முடிவில் எப்படியோ இரக்கம் கொள்வாள், தருமசங்கடம் தீர்ந்து விடும் என்று தசரதன் எதிர்பார்த்தான். ஆனால் அது இல்லையென்று இப்போது முடிவாகத் தெரிந்து விட்டது.

இனி ஒரே ஒரு கடைசி ஆசை— ''நான் தந்துவிட்ட வரப் பிரதிக்ஞையில் எவ்விதத்திலும் ராமன் கட்டுப்படவில்லை. என் பிரதிக்ஞையைப் பற்றி அவனுக்கென்ன தரும சங்கடம்? அவனுக்குப் பலம் இருக்கிறது. ஆதரவு இருக்கிறது. அவன் என் பேச்சைப் புறக்கணிக்கலாம். ஆனால், அவன் சுபாவத்துக்கு இது விரோதம். ஆயினும் ஒருவேளை தெய்வாதீனமாக என்னை எதிர்க்கும் எண்ணம் அவனுக்குத் தோன்றலாம். அப்படிச் செய்வானானால் என் சத்தியமும் என்னால் குறையின்றிக் காப்பாற்றப்பட்டதாகும். குல நீதி, தருமம், ஜனங்களுடைய விருப்பம் இவையும் அவன் எதிர்ப்பின் மூலம் வெற்றியடையலாம். ராமன் என் பேச்சைக் கேளாமல் போனால் எல்லாம் சரியாகிப் போகும்.''

இவ்வாறு தசரதன் எண்ணினான். பித்ரு வாக்கிய பரிபாலன தருமத்தை ராமன் கைவிட மாட்டான் என்கிற விஷயத்தைத் தசரதன் மறந்து விட்டு இவ்வாறு குழப்பமும் துக்கமும் நிறைந்த தன் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டதாகத் தோன்றுகிறது.

தன்னுடைய மரணத்தை எப்படியும் நிச்சயமாக எதிர்பார்த்தான். இந்தத் தருமசங்கடத்தில் இது அவனுக்குக் கொஞ்சம் ஆறுதல் தந்தது. பின்னால் வரப்போகும் கஷ்டங்களைத் தன்னுடைய கண்களால் பார்க்க வேண்டியதில்லை யல்லவா?

மரணம் அருகில் வந்து நிற்பதைக் கண்டுவிட்டதும் பூர்வ நிகழ்ச்சிகள் ஞாபகத்துக்கு வந்தன. சிறு வயதில் தான் செய்த பாவம் ஞாபகத்துக்கு வந்தது. ''அதன் வினையை இப்போது அனுபவிக்கிறேன். ரிஷி குமாரனைக் கொன்று அவனுடைய வயோதிகப் பெற்றோர்களுக்கு எத்தகைய பெருந் துக்கம் உண்டாக்கினேன்! அது வீண் போகுமா? நானும் புத்திரனைப் பிரியும் சோகத்தை அனுபவித்தால் அந்தப் பாபம் தீரும்'' — இவ்வாறு தன் உள்ளத்தைத் தசரதன் சமாதானப்படுத்திக் கொண்டான்.

எப்படியாயினும் கொடிய மனைவி தன்னிடம் பெற்றுவிட்ட வாக்கை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தீர்மானித்து விட்டான். ஆனபடியால் காரியக்கிரமத்தை யெல்லாம் கைகேயிக்கே விட்டு விட்டான்.

* * *

பொழுது விடிந்தது. முகூர்த்த காலம் நெருங்கி விட்டதென்று வசிஷ்ட முனிவரும் சிஷ்யர்களும் பொன் பாத்திரங்களில் புண்ணிய நதிகளின் ஜலமும், இன்னும் பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய பொருள்களும் எடுத்துக் கொண்டு அரண்மனை நோக்கி நகரத்து ராஜ வீதியில் சென்றார்கள். தெருவெல்லாம் மகோத்சவத்துக்காக அலங்கரிக்கப்பட்டு எங்கும் ஜனங்கள் நிறைந்து நின்றார்கள். 'எப்போது? எப்போது?' என்று குதூகலமாகப் பேசிக் கொண்டிருந்த ஜனங்கள், வசிஷ்ட முனிவரும் அவருடைய சிஷ்யர்களும் செல்வதைப் பார்த்ததும் அடங்கா மகிழ்ச்சியடைந்தார்கள். நீர்க் குடங்கள், தானியங்கள், ரத்தினங்கள், தேன், தயிர், நெய், பொரி, தர்ப்பைப் புல், சமித்து, புஷ்பம், பால், கனிகள், யானை, குதிரை, ரதம், வெண் குடை, சாமரம், காளை, புலித்

தோல் ஆசனம் இவையெல்லாம் வாத்திய கோஷத்துடன் செல்வதைக் கண்டதும் ஜனங்களுடைய ஆரவாரமும் உற்சாகமும் முன்னை விட அதிகமாயின.

வசிஷ்டர் அரண்மனை வாயிலில் சுமந்திரனைக் கண்டார். ''எல்லாரும் காத்திருக்கிறார்கள். எல்லா ஏற்பாடுகளும் செய்தாயிற்று என்று அரசனுக்கு உடனே தெரிவிக்க வேண்டும்'' என்றார்.

சுமந்திரனும் கைகூப்பி வணங்கி அரசன் படுத்திருந்த படுக்கையறைக்கு வெளியிலிருந்து கொண்டு வழக்கப்படி மங்கள ஸ்துதி செய்து விட்டு வசிஷ்டருடைய பிரார்த்தனையைத் தெரியப்படுத்தினான்.

''அரசனே, இந்திரனுக்குச் சமமானவனே, இந்திரனுடைய சூதனான மாதலியைப் போல் நான் உம்மை எழுப்புகிறேன். எல்லாத் தேவர்களும் உமக்கு வெற்றி தருவார்களாக. பெரியோர்களும், படைத் தலைவர்களும் நகரத் தலைவர்களும் தரிசனத்துக்காகக் காத்திருக்கிறார்கள். நிசி தேவி மறைந்தாள். காலையில் செய்ய வேண்டியது சகலமும் உம்முடைய ஆணையை எதிர்பார்த்து நிற்கிறது. அரசர்க்கரசே! எழுந்தருள வேண்டும்! வசிஷ்ட பகவான் பிராமணர்களுடன் காத்திருக்கிறார்'' என்றான்.

அச்சமயம் அரசனோ பேச முடியாமல் சங்கடத்தின் உச்சியை அடைந்திருந்தான். ஆகவே, அரசனுக்குப் பதிலாகக் கைகேயி தைரியமாகச் சுமந்திரனிடம் சொன்னாள்:

''சுமந்திரனே! மகாராஜா ராத்திரி முழுவதும் ராம பட்டாபிஷேகத்தைப் பற்றியே பேசிக் கொண்டு தூங்காமல் கழித்தார். இப்போதுதான் அயர்ந்து கொஞ்சம் தூங்குகிறார். சீக்கிரம் சென்று ராமனை அழைத்து வாரும்'' என்று சமத்காரமாகப் பேசிச் சுமந்திரனை ராமனிடம் அனுப்பினாள்.

தசரதன் தன் யோசனைக்கு ஒப்புக் கொண்டு விட்டான்; ஆயினும் அதைச் செய்து முடிக்கும் ஆற்றல் அவனுக்கு இல்லை. ஆனபடியால் இனிச் செய்ய வேண்டியதையெல்லாம் தானே செய்ய வேண்டும் என்று கைகேயி தனக்குள் தீர்மானித்து விட்டாள்.

* * *

சுமந்திரன் ராமனுடைய அரண்மனைக்குச் சென்றான். சீதையும் ராமனும் மகோத்சவத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயம் சுமந்திரன், ''மன்னனும் கைகேயி அரசியும் உம்மை உடனே வரச் சொன்னார்கள்'' என்று சங்கதியைத் தெரிவித்தான்.

ராமன் உடனே புறப்பட்டான். இந்தத் தாமதமும் நடவடிக்கைகளும் கண்டு எல்லோருக்குமே கொஞ்சம் சந்தேகம் உண்டாயிற்று. ஆனாலும், அவர்களுக்கு விஷயம் விளங்கவில்லை.



அதைப் பற்றிப் பேசவும் மனமில்லை. எல்லாம் நல்லதாகத்தான் முடியும் என்று அவரவர்கள் செய்ய வேண்டியதைச் செய்து கொண்டு போனார்கள்.

தெருக்களெல்லாம் உற்சவ அமர்க்களம். முகூர்த்தமோ அடுத்து வந்து விட்டது. இதனிடையில் அரண்மனை அந்தப்புரத்தில் ஜனங்கள் கொஞ்சமும் எதிர்பாராத காரியம் நடந்துகொண்டிருந்தது.

ஏன் வினைத் தாமதம் செய்கிறார்கள்? ஒருவேளை ஏதோ செய்ய வேண்டிய கிரியைகளும் முறைகளும் நீடித்துக் கொண்டு போகிறது போலிருக்கிறது என்று ஜனங்கள் சமாதானப் படுத்திக் கொண்டு காத்திருந்தார்கள்.

வீதிகளில் ஜனக் கூட்டம் வர வர அதிகரித்து வந்தது.

சுமந்திரன் ராமனை அழைத்து வந்தான். கூட்டமாக நின்ற ஜனங்களை மெதுவாக ஒதுக்கி வழி செய்து கொண்டு அவர்கள் சென்றார்கள். அந்தப்புரத்தில் தந்தையின் படுக்கை யறையில் ராமன் நுழைந்தான். நுழைந்ததும் பாம்பின் மேல் கால் வைத்தாற் போல் பயந்து திடுக்கிட்டான். அங்கே தந்தையின் நிலையைப் பார்த்து ராமனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அரசன் ஏதோ பெருந் துக்கத்தில் மூழ்கிக் கிடந்தான். அவனுடைய முகம் மல்லிகைப் புஷ்பம் வெய்யிலில் உலர்ந்து போனால் எப்படி இருக்குமோ அப்படியிருந்தது.

தந்தையின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். பிறகு கைகேயியின் பாதங்களையும் தொட்டு அவளையும் வணங்கினான்.

''ராம'' என்று ஒரு வார்த்தை தீன சுரத்தில் தசரதன் சொல்லி விட்டுச் சும்மா இருந்து விட்டான். பேசவில்லை. ராமனுடைய முகத்தை நேராகப் பார்க்க அரசனால் முடியவில்லை.

தன்னுடன் பேசாமலும் தன் முகத்தைப் பாராமலும் படுத்துக் கிடந்த தந்தையின் நிலையைப் பார்த்து ராமன் வியப்பும் பயமும் அடைந்தான்.

தாங்க முடியாத வேதனையிலிருந்த அரசனைப் பார்த்து ஒன்றும் விளங்காமல் திகைத்து ராமன், ''அம்மா! இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது! எவ்வளவு கோபமாக இருந்தாலும் என்னிடம் எப்போதும் இனிய பேச்சு பேசுவாரே தந்தை! ஏதாவது நானும் அறியாமல் தவறு செய்து விட்டேனா? ஏதாவது உடம்பில் திடீரென்று அசௌக்கியம் ஏற்பட்டு விட்டதா? யாராவது ஏதாவது அவருக்குக் கோப மூட்டும் படியான சொல் பேசி விட்டார்களா? தயவு செய்து நடந்ததை எனக்குச் சொல்ல வேண்டும். இதை என்னால் பொறுக்க முடியவில்லை'' என்றான்.


இப்படி ராமன் துக்கத்திலும் வியப்பிலும் மூழ்கிக் கேட்ட கேள்விக்குக் கைகேயி கூச்சம் கொஞ்சமுமின்றித் தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளும் சமயம் வந்துவிட்டதென்று பேசினாள்.

''அரசருக்கு யார் பேரிலும் கோபமில்லை. ஏதோ அவர் மனத்திலுள்ள விஷயத்தை உன்னிடம் சொல்லப் பயப்படுகிறார். அவ்வளவுதான்; நீ மனம் நொந்து கொள்வாய் என்று உன்னிடம் விஷயத்தைச் சொல்லப் பயப்படுகிறார். அதனால் பேச முடியாமலிருக்கிறார். முன்னொரு சமயம் என்னிடம் சந்தோஷப்பட்டு எனக்கு வரம் தந்தார். இப்போது, ''ஏன் தந்தேன்'' என்று பாமரர்களைப் போல் அரசர் வருத்தப் படுகிறார். இது அவருக்குத் தகாதல்லவா?'' என்றாள். (தொடரும்)

அம்புலிக்கு அப்பால் ......


பூர்வ கதை

வருங்கால இந்தியாவில் பேராசிரியர் சந்திரசேகர் விண்வெளித் துறையின் தலைவர். அவர் மகள் ராதிகாவுக்குக் கோபி மீது காதல். பிரபாகருக்கு இதனால் கோபி மீது பொறாமை. முரளி கோபியின் அந்தரங்க நண்பன். பச்சைக் கிரகத்துக்குக் கோபியை அனுப்பப் பேராசிரியர் தீர்மானிக்கிறார். தன்னுடன் வரப் பிரபாகரையே தேர்ந்தெடுக்கிறான் கோபி. விண்கல இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஒருவனாகப் பூமியிலிருந்து தொல்லை தருவதை விடத் தன்னுடனேயே வந்தால் தனக்கு வரும் ஆபத்து அவனுக்கும் உண்டே என்று கோபி கணக்குப் போடுகிறான். பச்சைக் கிரகத்தை முதலில் சென்றடைபவர்கள் அகிலத்தையே ஆளும் சக்தி பெறுவார்கள். அப்படி அங்கு ஒரு நூதனமான மூலப் பொருள் உள்ளதென விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இதனால் யுரேனஸ் சர்க்கிள் என்ற ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும் அதே பச்சைக் கிரகத்தை முதலில் சென்றடையப் போட்டி போடுகிறார்கள். அவர்கள் அளித்த பல தொல்லைகளைக் கடந்து கோபி பிரபாகருடன் பச்சைக் கிரகத்துக்குப் பயணமாகிறான். பொறாமை காரணமாகக் கோபி தூங்குகையில் பிரபாகர் விண்கலத்தின் திசையைத் திருப்பி விடுகிறான். எல்லையில்லா அண்டப் பெரு வெளியில் பல நாட்கள் நீந்திய விண்கலம் கடைசியில் அவர்களை ஒரு புது உலகில் கொண்டு வந்து சேர்க்கிறது.





கால்கேட் மூலம், வாய்நாற்றத்தைத் தடுத்து நாள்முழுதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள் !




ஏனெனில்: ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் க்ரீம் வாய் நாற்றத்தையும் பற்சிதைவை விளைவிக்கும் கிருமிகளையும் 85 சத விகிதம் வரை அகற்றுகிறது.

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறதென்றும் உணவு உட்கொண்டஉடனேயே கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால் இது வரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. கால்கேட் மட்டுமே இந்த நிரூபணம் பெற்றது !

அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையே தனி. கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள்தவறாது பல் துலக்க விரும்புவதில் வியப்பென்ன!


நீங்கள் பற்பொடியை விரும்பினால், இப்பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பா பல மாதங்களுக்கு வரும்.




இன்றே !
வாங்குங்கள்
ஸுபர் சைஸ்...அது
சிக்கனமானது !

தூய்மையான இன் மூச்சோடு வெண்மையான பற்களும் பெறவே... மற்றெந்தப் பற்பசையையும் விட உலகிலே அதிக மக்கள் கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்.

DC.G.38 TAM


கோபி-பிரபாகரின் கூட்டு முயற்சி பலனளித்தது. அந்தப் புதிய உலகை விண்கலம் ஒரு வட்டப் பாதையில் சுற்றி வர ஆரம்பித்தது.
அம்புலிக்கு அப்பால்... கதை: புஷ்பா (17) படம்: விஜயா
பரிச்சயமில்லாத சூழ்நிலையில் இறங்கவிருந்த அவர்கள் பாதுகாப்புக்கு விசையை இடை நிறுத்தினார்கள்.
பிரபாகர்! நாம் வைகியோவில் ஏறிப் போக வேண்டியதுதான்!
புதிய உலகைச் சுற்றிவர விண்வெளியிலே ஒரு தானியங்கி நிலையமாக விண்கலத்தை இயங்க விட்டு விட்டு வையத்துக்கு விரையும் வாகனத்தில் (வைகியோ) ஏறிக் கொண்டனர் கோபியும் பிரபாகரும்.
ஆல்ரைட், கோபி!
பிரபாகர் ஒரு பித்தானை அழுத்தியதும் விண்கலத்தின் ஒரு கதவு திறந்து கொண்டது.....
... வைகியோ அதிலிருந்து வெளிப்பட்டுச் சீறிப் பாய்ந்தது.


தரை மட்டத்துக்கு 10,000 அடி உயரத்தில்....
தொடரும்....

முப்பது

அவருக்கு 30 வருடங்களாக இன்பம் ஊட்டி வருகிறது பார்லே பிஸ்கெட்...




...ஆனால் இப்போதுதான் அவர்களுக்கு கிடைக்கின்றன பல நேசர்கள்—அத்துடன் அவற்றைப்பிரிந்து இன்புற ஒரு பெரிய குடும்பம்-அவர் சுவைத்து மகிழ்வது **ஜெ:ப்ஸ், ஓர்லே, சீஸ்லிங்ஸ், ஸ்பின்-ஹெஜ்**—பாரதத்தின் முதன்மையான உப்பு பிஸ்கெட்டுகள்—குறிப்பாக **க்ரூகோ மற்றும் மொனேகோ**—பாரதத்திலே உச்ச விற்பனையுடைய இனிப்பு மற்றும் உப்பு பிஸ்கெட்டுகள். ஆனால் அவர் கருத்து உங்களுக்கு வழி காட்டத் தேவையில்லை—அவை யாவற்றையுமே நீங்கள் ருசித்துப் பாருங்கள். உங்கள் சுவைக்குகந்ததை நீங்களே கண்டறிவீர்கள். அவை யாவுமே பாரதத்தின் மிக நவீனமான பிஸ்கெட் தொழிற்சாலையில் உன்னதமாகத் தயாரிக்கப்பட்டவை.


பார்லே

பிஸ்கெட்


வாங்குக இன்றே, பார்லே நன்றே!



க்ரூகோ




மொனேகோ




ஓர்லே



ஸ்பின்-ஹெஜ்



ஜெ:ப்ஸ்



சீஸ்லிங்ஸ்

everest/566 a/PP tam


வேஷங்கள்
இந்திரா பார்த்தசாரதி



"யார் அவன்?
அஞ்க 'கோல்'
போட்டும்
அலட்சியமா
இருந்தான்னியே ?"



அத்தியாயம் 1

கரோல்பாக்கிலிருந்து லோதி காலனிக்குக் குடிபெயர்ந்த சங்கரனுடைய ஒரே பொழுதுபோக்கு 'பார்க்கு'க்குப் போவது. கரோல்பாக் அவனுக்குப் பிடிக்க வில்லை. நெரிசல், ஆரவாரம், கண்ணைக் குருடாக்கும் வெளிச்சம்!

லோதி காலனியில் இரண்டு பார்க்குகள் உண்டு. ஒன்று குழந்தைகளுக்காக, மற்றொன்று எல்லோருக்காகவும். குழந்தைகளுடைய பார்க்கில் ரிடையரான பெரியவர்கள் அடிக்கடி கூடுவார்கள். அவர்கள் தர்மத்தைப் பற்றி விவாதிக்கும்போது போடும் கூச்சல் பலமாக இருக்கும். சில சமயங்களில் சண்டையும் ஏற்படுவதுண்டு.

சங்கரன் வழக்கம் போல் இன்னொரு பார்க்கில் உட்கார்ந்தான். சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது....

ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு ஒரு பையன் சிறுவர்கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கூனிக் குறுகிய உருவம். தோள்கள் இரண்டும் ஒன்றோடொன்று இரகசியம் பேசுவது போல் நெருங்கி யிருந்தன. புள்ளி இட்டாற் போன்ற கண், வாய், எடுப்பான மூக்கு. முகத்தில் மூக்குத்தான் இருந்தது. கை நடுக்கத்தில் எடுக்கப்பட்ட புகைப் படம் போல் நீண்ட, கோணலான முகம். அந்தப் பையனுக்கு வயதை நிர்ணயித்துச் சொல்ல முடியாது. பதினைந்தும் சொல்லலாம், இருபத்தைந்தும் சொல்லலாம்.

அவன் விளையாட்டைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். சிறுவர்கள் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சங்கரன் தன் இடத்தை விட்டு எழுந்திருந்து, அந்தப் பையன் இருக்குமிடத்தை நோக்கிச் சென்றான். அவன் பின்னால் போய் நின்றான்.

அந்தப் பையன் தனக்குத் தானே பேசிக் கொண்டிருந்தான். ''அப்புறம், அவன் காரிலே ஏறப் போனான். அஞ்சு கோல் போட்ட அகம்பாவம் கொஞ்சம்கூட மூஞ்சியிலே இல்லே... கை குலுக்க வந்த யாரையுமே இலட்சியம் பண்ணலே....''

''யாரு?'' என்று கேட்டான் சங்கரன் மெதுவாக. இவ்வாறு கேட்டு விட்டு இதமாகப் புன்னகை செய்தான்.

அந்தப் பையன் திடுக்கிட்டுத் திரும்பினான். கண்களில் கோபம் சுடர் விட்டது.

''யாரு நீங்க?''

''உன் மாதிரிதான் நானும். என்னுலேயும் விளையாட முடியாது.''

இவ்வாறு சொன்ன சங்கரன் கொஞ்சம் தள்ளாடியவாறு கீழே உட்கார்ந்தான். வலது காலிலிருந்து 'பூட்சை' எடுத்தான். குட்டி அணில் உட்கார்ந்திருப்பதுபோல் வளைந்திருந்தது பாதம்.

வெம்மை வீசிய கண்கள், கனிந்து தணிந்தன.

''என்ன கேட்டீங்க?''

''யார் அவன்? அங்க கோல் போட்டானும் அலட்சியமா இருந்தான் வியே......''

அந்தப் பையனின் முகம் வெட்கத்தினுல் சிவந்தது. புனிதமான அந்தரங்கம் போலிருக்கிறது.

''சொல்லக் கூடாதா, யாரு?''

''இது என் பொழுதுபோக்கு...''

''எது?''

''என் மனசுக்குள்ளே ஒரு 'ஹீரோ'வைக் கற்பனை பண்ணிண்டிருக்கேன். விளையாட்டிலும் சரி, படிப்பிலும் சரி, அவன்தான் ஃபஸ்ட்...''

''வெரி குட்... நீ வால்மீகின்னு சொல்லு....''

''அப்படீன்னு?''

''வால்மீகியும் இப்படித்தான் ஒரு 'ஹீரோ'வைக் கற்பனை பண்ணினுர்.. அவன் பெயர் ராமன்....''

''வால்மீகியும் பார்ப்பதற்கு என் மாதிரி அவலட்சணமா இருந்தாரா?''

சங்கரன் பதில் சொல்லவில்லை. மூக்கின் மேல் திரும்பத் திரும்ப வந்து உட்கார்ந்த ஈயை விரட்டினுன்.

''சொல்லுங்க மாமா... விளையாட முடியாமெ, படிப்பிலே சைபரா, உடம்பு அசிங்கமா... இப்படியா இருந்தார் வால்மீகி?....''

சங்கரன் அந்தப் பையன் முதுகில் இலேசாகத் தட்டினுன். புன்னகையுடன் கேட்டான்: ''உன் பேரென்ன?''

''கோபு... உங்க பேரு?''

''சங்கரன்.... நீ எங்கே இருக்கே?''

''பதினுரும் பிளாக். வீட்டு நம்பர் 259, கிரவுண்ட் ஃப்ளோர்... நீங்க?''

''பத்தாம் பிளாக். 174, ஃபஸ்ட் ஃப்ளோர்...''

''ஃபஸ்ட் ஃப்ளோரா?'' என்று கேட்ட கோபு, சங்கரன் காலைப் பார்த்தான்.

சங்கரன் பூட்சைப் போட்டுக் கொண்டு 'லேசை' இறுக்கினுன்.

''வேறே இடம் கிடைக்கலே. என்ன செய்யறது?''

அப்பொழுது, சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்த இடத்தில் ஒரு நாய்க் குட்டி ஓடியது. இரண்டு மூன்று சிறுவர்கள் அதன் மீது கல் எறிந்தார்கள். அது குரைத்துக் கொண்டே சங்கரன் உட்கார்ந்திருந்த பக்கம் ஓடி வந்தது.

கோபு பற்களைக் கடித்தான். ''ப்ருட்ஸ்'' என்றுன்.

சங்கரன் அவனைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

''எதுக்குச் சிரிக்கிறீங்க?''

''நீயும் விளையாட முடிஞ்சு அங்கே விளையாடிக் கொண்டு இருந்தியானு, நீயும் அவங்க மாதிரி கல்லை விட்டு எறிஞ்சிருப்பே...''

''நீங்க?''

''நானுந்தான்...''

அச்சமயம், ஓர் இளைஞனும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து கொண்டு இவர்களைக் கடந்து சென்றுர்கள்.

எதிர்த்தாற்போல், திடீரென்று ஆரவாரம் பெருகியது. கோல் போட்ட ஒரு பையனை நாலைந்து பேராகத் தூக்கிக்கொண்டு கூத்தாடினுர்கள்.

''அசிங்கமா இருக்கு...'' என்றுன் கோபு.

''எது?'' என்று சங்கரன் கேட்க நினைத்தான். கேட்கவில்லை.

கோபு எழுந்திருந்தான். சங்கரன் கைகளைப் பக்கவாட்டமாகப் பலமாக ஊன்றிக் கொண்டு எழுந்திருந்தான்.

''உங்களுக்கு ஏன் இப்படி ஆச்சு, மாமா?'' என்று கேட்டான் கோபு.

''யாரைக் கேட்கிறதுன்னு தெரியலே, உனக்குத் தெரியுமா?''

கோபு பதில் சொல்லவில்லை. நகங்களைக் கடித்துக் கொண்டு நின்றுன்.

''உங்கப்பா பேரென்ன, கோபு?'' என்றுன் சங்கரன். இருவரும் 'பார்க்'கை விட்டு வெளியே வந்தனர்.

''ரமணி.''

''மினிஸ்டிரியிலே இருக்காரா?''

''ஆமாம்... காமர்ஸ் மினிஸ்டிரி... எங்கப்பாவைத் தெரிஞ்சு இருக்கனுமே உங்களுக்கு?... அவரைத் தெரியாதவா யாரும் கிடையாது...''

அப்பாவைப் பற்றி இவ்வளவு பெருமையாகப் பேசுகிறுனே பையன் என்று நினைத்த சங்கரன், அவன் நம்பிக்கையை வீணடிக்க விரும்பவில்லை.

''தெரியும்.... கேள்விப்பட்டிருக்கேன்'' என்று பொய் சொன்னுன்.

''என்ன கேள்விப்பட்டிருக்கீங்க?... ஃப்ராட் நம்பர் ஒன்னுன்னு?''

சங்கரன் திடுக்கிட்டான்.

''என்ன கோபு, அப்பாவைப் பத்தி இப்படியா பேசுவா?''

கோபு கொஞ்ச நேரம் பேசவில்லை. அப்பாவைப் பற்றி எவ்வளவு பெருமையாகப் பேசுகிறான் என்று நினைத்து முடிப்பதற்குள், கோபு கேட்ட கேள்வி சங்கரனை அயரவைத்தது. ஒரு வேளை... அந்த ஜெகப் புரட்டன் ரமணிதான் இவனுடைய அப்பாவோ? வாய் ஜாலமும், அடாவடிப் போக்குமுடைய அந்த ரமணியைப் பற்றி அறியாத தென்னிந்தியர்கள் யாரும் தில்லியில் இருக்க முடியாது. தடியெடுத்த பெரிய மனிதன்!

அவனுடைய பிள்ளைதானா இந்தக் கோபு?

"எங்கப்பாவைப் பத்தி மத்தவங்க என்ன பேசறான்னு எனக்குத் தெரியாதா?"

"உங்கப்பா ஏதோ அஸோஸியேஷன்லே செக்ரடரி இல்லே..."

"ஆமாம்... வைதிக சமாஜம்...ஆனா செய்யறதெல்லாம் அக்கிரமம். அவர் மாதிரி வேஷம் யாராலேயும் போட முடியாது."

"நீ உன் வயசுக்கு மீறிப் பேசறே... இப்படித்தான் பார்க்கறவாகிட்டே யெல்லாம் உங்கப்பாவைப் பத்திப் பேசுவியா?"

"அவருக்கும் என்னைக் கண்டாப் பிடிக்காது. நான் பொறக்கக் கூடாதுன்னு என்னென்னவோ மருந்தெல்லாம் எங்கம்மாவுக்குக் கொடுத்தாராம், எங்கப்பா... அப்படியும் பொறந்துட்டேன்... அதுவும் இப்படி... நான் இப்படிப் பொறந்ததுக்கே அவர்தான் காரணம்.... ஐ ஹேட் ஹிம்... ஐ ஹேட் ஹிம்...."

கோபுவின் குரல் உயர்ந்துகொண்டே போயிற்று.

"கோபு...." என்று சொல்லிக் கொண்டே அவன் தோள்களைத் தொட்டான் சங்கரன். விசுவரூபமான ஒரு வெறுப்பெதிரே அவன் குரல் மிகவும் பலஹீனமாய் ஒலித்தது.

"உலகம் நமக்கெல்லாம் இல்லே. சில பேருக்குத்தான். எனக்கு இல்லே. உங்களுக்கு இல்லே. எங்கம்மாவுக்கு இல்லே. எங்க அப்பாவுக்கு... அதோ நாயைப் பிடிச்சுண்டு ஓடறானே, அந்தப் பையனுக்கு...."

அப்பொழுது பஸ் வந்து நின்றது. எல்லாரும் முண்டியடித்துக் கொண்டு ஏறினார்கள். ஏற முடியாத ஒருவர் முணுமுணுத்தார்.

"சே... 'க்யூ'வும் கிடையாது, ஒன்றும் கிடையாது. இதென்ன ஊரோ, சனியன் பிடித்த ஊர்..."

"என் கையைப் பிடிச்சுக்கோங்கோ. பஸ் கிளம்பறத்துக்குள்ளே 'க்ராஸ்' செய்துடலாம்..." என்றான் கோபு.

இருவரும் வீதியைக் கடந்து எதிர்ப் பக்கமாகச் சென்றார்கள். துணிகளுக்கு 'இஸ்திரி' போடும் ஒருவன் வண்டியைத் தள்ளிக் கொண்டு வேகமாக வந்தான். வழியை விட்டு ஒதுங்கினர் இருவரும்.

"கொஞ்சம் ஒதுங்காட்டா மோதிடுவா, கண் மண் தெரியாமெ...விய வஸ்தை கெட்ட ஊர்..." சைக்கிளிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த ஒரு சாஸ்திரி சங்கரனைப் பார்த்துப் புன்முறுவல் செய்துகொண்டே சொன்னார்.

இதற்கு ஏதாவது உசிதமாகத் தானும் சொல்ல வேண்டுமோ என்று சங்கரன் ஒரு கணம் யோசித்தான்.

சைக்கிளைத் தள்ளிக் கொண்டே கோபுவின் அருகில் வந்தார்.

"என்னடா கோபு, அப்பா சௌக்கியமா?" என்று அவர் கோபுவைக் கேட்டார்.

கோபு தலையை ஆட்டினான். பதில் சொல்லவில்லை.

"உங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கு .... எங்கேன்னுதான் தெரியலே..." என்றார் சாஸ்திரிகள், சங்கரனைப் பார்த்து.

சங்கரன் முகத்தில் ஒரு குறுநகை படர்ந்தது. பேச வேண்டுமென்பதற்காகக் கொக்கி போட்டு இழுக்கிறார்.

"இந்த எழவெடுத்த ஊருக்கு வந்து ஞாபக மறதிதான் மிச்சம். பணமோ, சுகமோ கிடையாது..." என்றார் சாஸ்திரிகள்.

"ஏன் மாமா பொய் சொல்றேள்? சௌத் எக்ஸ்டென்ஷன்லே வீடு கட்டியிருக்கேளே..." என்றான் கோபு.

"போடா ராஜா... பய இருக்கிற இருப்பிலே பேசறதைப் பார்த்தேளா?" என்றார் சாஸ்திரிகள். அவர் சிரித்தாலும் கோபு சொன்னது அவருள்ளத்தில் சென்று தைத்திருக்க வேண்டுமென்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அவர் முகம் சிவந்து விட்டது.

"நான் இருக்கிற இருப்புக்கு என்ன?" கோபுவினால் தன் குரலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஓங்கி ஒலித்தது. தெருவில் சென்ற இரண்டொருவர் அவர்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள்.

சாஸ்திரிகள் கொஞ்சம் பயந்து விட்டார்.

"என்னடா கோபு, நான் ஏதோ விளையாட்டுக்குச் சொன்னா?..."

''எது மாமா விளையாட்டு? நான் அவலட்சணமா இருக்கேன்னு சொல்றதா?''

''சரி, சரி, சமர்த்துத்தான் போ'' என்று சொல்லிக் கொண்டே சைக்கிளில் ஏறினார் சாஸ்திரிகள்.

கோபுவின் முகம் எல்லையற்ற கோபத்தினால் சிவந்திருந்தது. கண்களில் நீர் கரை தட்டியது.

சங்கரனும் கோபுவும் பேசாமல் சிறிது தூரம் நடந்தனர்.

''எங்கப்பா இவங்க எதிரிலே என்னை அலட்சியமாப் பேசறதினாலே, இவங்களும் என்னை இப்படிப் பேசறாங்க'' என்றான் கோபு. அவன் குரல் உடைந்து கமறியது.

''நாம்ப எப்போ ஒரு குறையோடே பொறந்துட்டோமோ, நமக்குச் சிரிக்கத் தெரியணும் கோபு... அதுதான் நம்மைக் காப்பாத்தும்...'' என்றான் சங்கரன் புன்னகையுடன்.

''எனக்குப் படிப்பு வரல்லே, பார்க்க அசிங்கமா இருக்கேன்... இதுதான் எங்கப்பாவுக்கு யார் வந்தாலும் பேச்சு... எங்கம்மாவுக்காகப் பார்க்கிறேன், இல்லாட்டா... இல்லாட்டா...''

அவன் கண்கள் பெரிதாகிக் கொண்டே போயின. பற்களைக் கடித்ததினால் கன்னங்கள் இறுகின. சாஸ்திரிகள் பயந்து ஓடியது ஆச்சரியமில்லை என்று பட்டது சங்கரனுக்கு.

''நான் இப்படிப் பொறந்தது, அப்பாவுக்கு வேணும், நன்னா வேணும்...''

''கோபு...'' சங்கரன், தன் குரலை உயர்த்தி அவனை அதட்டினான்.

கோபம் மாறி அழுகை தொடங்கியது.

அவன் அழுவதைச் சங்கரன் தடுக்கவில்லை. அழுது தன் உணர்ச்சிச் செறிவைத் தளர்த்திக் கொள்ளட்டும் என்று பேசாமல் இருந்தான்.

''மாமா... ஒண்ணு செய்யறேளா?'' என்றான் கோபு சிறிது நேரத்துக்குப் பிறகு.

''என்ன?''

''எங்காத்துக்குக் குடி வாங்கோ... ஒரு ரூம் காலியா யிருக்கு... உங்களுக்கும் கிரவுண்ட்ஃப்ளோர் சௌகர்யம்.''

சங்கரன் முகத்தில் குறுநகை படர்ந்தது.

''என்ன மாமா...?''

'' 'உங்களுக்கும் கிரவுண்ட் ஃப்ளோர் சௌகர்யம்'னு என்ன அர்த்தம்? நான் நொண்டிங்கிறே?...''

''மாமா...!'' கோபு, அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''பரவாயில்லே, நான் உன் மாதிரி அழ மாட்டேன். நீ சும்மா சொல்லு.''

''நான் உங்களுக்காக உங்களை வரச் சொல்லல்லே எங்காத்துக்கு. எனக்காகச் சொன்னேன். உங்களைக் கண்டா எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''ஒருத்தருக்கொருத்தர் அநுதாபப் பட்டுக்கலாம்... அப்படித்தானே?''

''மாமா... உங்களுக்கு இஷ்டமில்லேன்னா...'' அவன் தொண்டை அடைத்தது.

''அசடு... சும்மா சொன்னேன்... உங்கப்பாவைக் கேக்காமே நீ என்னை 'ஆத்துக்குக் குடிவாங்கோன்னு' என்ன அர்த்தம்?''

''நீங்களா வந்து கேளுங்கோ எங்கப்பாவை... நான் சொன்னதாகச் சொல்ல வேண்டாம்... நான் சொன்னேன்னு தெரிஞ்சா வீட்டைத் தர மாட்டார் உங்களுக்கு. அவ்வளவு அன்பு என்மேலே எங்கப்பாவுக்கு!''

சங்கரனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. அவனுக்கு 'கிரவுண்ட் ஃப்ளோரா'க இருந்தால் நல்லது என்றுதான் பட்டது. ஆனால் ரமணியின் வீட்டுக்குக் குடி போவது என்பது அவனுக்குக் கொஞ்சம் அச்சத்தைத் தந்தது. ஒதுங்கிப் போகும் தன் சுபாவத்துக்கும், உலகத்துக்குத் தான் இருப்பதை ஆவேசமாக அறிவித்துக்கொண்டு வாய்ஜாலத்தையே தன் மூலதனமாக வைத்து வாழும் ரமணிக்கும் ஒத்து வருமா?...

இப்பொழுது அவன் இருக்கும் வீட்டுக்காரர் மிகவும் நல்லவர். இரண்டு மனைவிகள். முதல் மனைவிக்குக் குழந்தை இல்லை என்ற காரணத்தால் இரண்டாந்தாரம் கொண்டார். கொடுக்கும் தெய்வம் இரண்டு கண்களையும் விழித்துக் கொண்டு கடாட்சித்தது. அதிர்ஷ்டம் பதினொன்றில் போய் முடிந்தது. மூத்தவளுக்கு ஐந்து. இளையவளுக்கு ஆறு. குழந்தைகள் சங்கரனையும் தங்கள் குடும்பத்தில் ஒருவனாக ஏற்றுக் கொண்டு அவன் அறையிலேயே விளையாடின. சாமான்களை உடைத்தன. அவனுக்குக் குற்றம் சாட்ட மனம் வருவதில்லை. அப்படிச் சொன்னால், மூத்தவள் குழந்தையா யிருந்தால் இளையவள் அடிப்பாள். இளையவள் குழந்தையா யிருந்தால் மூத்தவள் அடிப்பாள். ஆகவே 'கிரவுண்ட் ஃப்ளோர்' கிடைத்தால் அதையே ஒரு காரணமாகச் சொல்லித் தன் அறையைக் காலி செய்து விடலாம் என்று சங்கரன் ஏற்கனவே நினைத்ததுதான்.

''என்ன மாமா வர்ரீங்களா சொல்லுங்கோ...?''

சங்கரன் ரமணியைப் பற்றி நினைத்துப் பார்த்தான். ஏதோ ஒரு கச்சேரியின்போது அவன் செய்த ஆர்ப்பாட்டம், சங்கரன் ஞாபகத்துக்கு வந்தது. தன்னைப் போன்ற பெரிய மனிதர்களைச் சரியாக நடத்தவில்லை என்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தான் ரமணி. ஆள் நல்ல உயரம், பருமன். மூக்கு, காது, உதடுகளெல்லாம் தடித்திருந்தன. அகன்ற, பெரிய, முட்டை வடிவ முகம்.

''சரி, பார்ப்போம்'' என்றான் சங்கரன்.

''பார்ப்போம்னு சொல்லாதிங்கோ. கட்டாயம் வாங்கோ. நாளைக் காலம்பற வாங்கோ.''

''சரி...''

''எங்கப்பாவுக்குக் கொஞ்சம் திமிர் ஜாஸ்தி. தூக்கி எறிஞ்ச மாதிரி பேசுவார்.... அதுக்கெல்லாம் நீங்க தயாரா இருக்கணும்...''

''உன் மனசிலே ஒரு ஹீரோவைக் கற்பனை பண்ணியிருக்கேன்னியே அவன் இப்படியெல்லாமா பேசுவான் உன் மாதிரி?'' என்று கேட்டான் சங்கரன் சிரித்துக் கொண்டே.

''அவனுக்கு அப்பா கிடையாது..''

''என்னது?''

''ஆமாம். அவனுக்கு அப்பா கிடையாது. அம்மா மட்டும்தான். அவனுக்கு அம்மாதான் தெய்வம். அவ்வளவு நல்லவள் அவன் அம்மா...''

''உங்கம்மா மாதிரி...''

''ஆமாம்... இன்னொன்னு தெரியுமோ, உங்களுக்கு?...எங்கம்மாவுக்கும் அப்பாவைக் கண்டாப் பிடிக்காது!''

சங்கரன் சற்று அதிர்ச்சியடைந்தான். என்னென்னவோவெல்லாம் பேசுகிறான் இந்தப் பையன்!

''எங்கம்மா ஒரு பூவை மோந்து கூடப் பார்க்க மாட்டா, வாடிடும்னு. எங்கப்பா அதைக் காலிலே போட்டு மிதிச்சு, நுசுக்கிடுவார்...''

''பெரிய கவிஞன் பாஷையிலே பேச ஆரம்பிச்சிட்டியே?'' என்றான் சங்கரன்.

''இது நான் சொல்லலே... எங்க தாத்தாவுக்கு எங்கம்மா பேரிலே உசிரு. அவர் எங்கப்பாவுக்கு முன்னே ஒரு லெட்டர்லே இப்படி எழுதியிருந்தார். எங்க தாத்தா ரொம்பப் படிச்சவர். ப்ரொபசராம். கணக்கிலே புலின்னு பேரு.... எங்கப்பாவைத் தேர்ந்தெடுக்கிறதிலே மட்டும் 'தப்புக் கணக்குப் போட்டுட்டேன்'னு சொல்லுவாராம்.''

கோபுவின் முகம் தாத்தாவைப் பற்றிப் பேசும்போது மிகவும் பிரகாசம் அடைந்தது.

''எங்க தாத்தாவுக்கு எங்கம்மா ஒரே பொண்ணு. பின்னே கிடையாது. அவர் செத்துப் போனப்புறம், ஆத்திலே இருந்த புத்தகங்களை அப்பா வித்துட்டார். எங்கம்மாவுக்கு ஒரே வருத்தம். அம்மாவுக்குப் புஸ்தகம்னு சாப்பாடு வேண்டாம், ஒண்ணும் வேண்டாம்...''

கன்னு மார்க்கெட் அருகே மீன்கள் விற்கும் கடையின் பக்கத்தில் இருவரும் நின்று கொண்டிருந்தார்கள். நெடி மூக்கைத் துளைத்தது.

''சரி, வரட்டுமா...? முதல் நாளிலேயே இவ்வளவு பேசிட்டியின்னு, அப்புறம் பாக்கி நாளுக்கு என்ன பண்ணுவே...?'' என்றான் சங்கரன்.

''சரி மாமா... குட் நைட்... நாளைக்குக் காலம்பற உங்களை எதிர்பார்ப்பேன். கட்டாயம் வாங்கோ...''

அன்றிரவு சங்கரனுக்குத் தூக்கம் வரவில்லை. மாலை அனுபவம் ஒரு கனவு போலிருந்தது. ''ஐ ஹேட் ஹிம், ஐ ஹேட் ஹிம்...'' கோபுவின் குரல் அவன் காதருகே ஒலித்துக் கொண்டிருந்தது. அந்தக் குரலில் பளிச்சிட்ட கத்தியின் கூர்மை...! அவன் முகத்தில் கனல் விட்ட ஆத்திரம்... ஒரு பையன் தன் தந்தையை இந்த அளவு வெறுக்க முடியுமா?...

ரமணியின் வீட்டுக்குக் குடி போவது சரியான யோசனையா?... ஆனால் ஒன்று: 'பஸ்ட் ஃப்ளோரிலேயா இருக்கேள்?' என்று கேட்டு விட்டுக் காலைப் பார்க்கிறவர்களுக்கு இனி தங்கள் அனுதாபத்தைப் பார்வையில் தெரிவிக்கும் வாய்ப்புக்கூட இல்லாமல் போய் விடும்.... பாவம், அவர்கள் அனுதாபத்துக்குரியவர்கள்!... (தொடரும்)

உவகை தரும் உவமை

பெரும் படைக் கூட்டம் முழுவதையும் தனி ஒருவனாகவே எதிர்த்து நின்று அடக்கிய மாவீரனின் ஆற்ற



லானது, ஒரு குடம் பாலையும் அடக்கிய ஒரு துளி மோரைப் போன்றதாகும்!

-புறநானூறு - மதுரைப் பூதனின நாகனார்

யாரைப் பாராட்டுவது? இரு தரப்பாரையும்தான் பாராட்ட வேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறது.

அமெரிக்க அரசாங்கம் வைத்தியத் துறையில் ஓர் ஆராய்ச்சிப் பணிக்குச் சென்னையில் உள்ள ஆந்திர மஹிளா சபாவுக்கு நாலரை லட்சம் ரூபாய் தருகிறது என்றால் சென்னை டாக்டர்களின் திறமைக்கு ஒரு பாராட்டாக எடுத்துக்கொள்வதா அல்லது ஆந்திர மஹிளா சபா அங்கத்தினர்களின் சமூக சேவைப் பணிக்கு ஒரு பாராட்டாக எடுத்துக் கொள்வதா என்ற பிரச்னை எழுகிறது. இரு சாராரும் செய்துள்ள அரும் பணிக்கும் அவர்களின் திறமைக்கும் ஓர் அரிய நற்சான்று என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அமெரிக்க அரசாங்கத்தின் கவனத்தையும் உதவியையும் கவரும்படியாக அவர்கள் என்ன பணியாற்றி யிருக்கிறார்கள்?

சென்னையில் உள்ள ஆந்திர மஹிளா சபா அதாவது ஆந்திர மாதர் சங்கம் தோன்றிக் கிட்டத்தட்ட முப்பத்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இத்தனை ஆண்டுகளாகக் கல்வித் துறையில், மருத்துவத் துறையில், சமூக நலப் பணித் துறையில் அது செய்து வந்துள்ள தொண்டு மிக மிக விரிவானது. பாராட்டுக்குரியது. ஸ்ரீமதி துர்க்கா பாய் தேஷ்முக் தலைமையில் இயங்கி வரும் இச் சங்கம் தனது ஒப்பற்ற சமூக நலப் பணி மூலம், சென்னை ராஜ்ய சர்க்கார், மத்திய சர்க்கார் ஆகியவற்றின் கவனத்தையும் பல கொடையுள்ளம் படைத்த செல்வர்களின் கவனத்தையும் செல்வத்தையும் கவர்ந்துள்ளது.

இளம் குழந்தைகளுக்குக் கைகால் நீட்டவோ, மடக்கவோ முடியாதபடி இளம் பிள்ளை வாதம், முடக்கு வாதம் போன்றவை ஏற்பட்டுப் பெரும் அவதியுறும் காட்சியைக் காண்கிறோம். இவற்றை நவீன சஸ்திர சிகிச்சை மூலமும், சில உடற்பயிற்சி வைத்திய முறைகள் மூலமும் ஓரளவு குணப்படுத்த வாய்ப்புள்ளது.

ஸ்ரீமான் ஹநுமந்த ராவ் தம்பதியினருக்கு இப்படி ஒரு குழந்தை முடக்குவாதத்தினால் கஷ்டப்பட்டு இறைவனடி சேர்ந்தான். அந்தத் துயரத்திலிருந்தும் ஒரு நன்மை இறைவன் அருளால் விளைந்தது. நூற்றுக் கணக்கான இத்தகைய கால் கை வராத குழந்தைகளின் நோயைக் குணப்படுத்த—வைத்திய உதவி நல்க — ஸ்ரீமதி துர்க்காபாய் தேஷ்முக் அவர்களிடம் 1961ம் ஆண்டில் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கினார். அதுமுதல் ஆந்திர மஹிளா சபையில் குழந்தைகளின் இச் சிகிச்சைக்காக "ஆர்த்தோபீடியக் ஸெண்டர்" ஆரம்பமாயிற்று.

இளம் பிள்ளையின்



தசை நரம்புப் பிடிப்பு வாத சிகித்சையிலும் எலும்பு முறிவு வளர்ச்சி வைத்தியத்திலும் பெரும் புகழ் ஈட்டியுள்ள சென்னை அரசாங்க டாக்டர் நடராஜன் அவர்கள் மேற்பார்வையில் இச் சிகிச்சைப் பிரிவு சென்ற ஏழு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

சென்னை அரசாங்கப் பொது மருத்துவ மனையில் அதாவது ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஆர்த்தோபீடியக் சஸ்திர சிகிச்சை டாக்டர் நடராஜனும் மூளை சம்பந்தப்பட்ட நோய்களில் சஸ்திர சிகித்சை செய்யும் டாக்டர் பி. ராமமூர்த்தி அவர்களும் இணைந்து பணியாற்றி வருகிறார்கள். ஒரே ஆபரேஷன் தியேட்டரில் இருவரும் வேலை செய்யும் வாய்ப்பும் நேர்வதுண்டு. இதன் விளைவாக சிகித்சைத் துறையில் பல கருத்துப் பரிவர்த்தனைகள் ஏற்படும். அப்படியொரு கருத்துப் பரிவர்த்தனை சமீபத்தில் நிகழ்ந்தது.

கை கால் நீட்ட முடியாமல் விரைத்துக் கொள்வது போன்ற நோய்களுக்குப் பல காரணங்கள் இருப்பினும் ஒரு காரணம் மூளையில் ஏதோ ஒரு சிறு பகுதி பழுது பட்டோ, பாதிக்கப்பட்டோ இருப்பதால் இத்தகைய விரைப்பு தசை நார்களுக்கு ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மிகவும் நுட்பமும் சிக்கலும் வாய்ந்த மூளையில், எந்தப் பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதுதான் மிகச் சிரம சாத்தியமான காரியம். இதைக் கண்டுபிடிப்பதும், கண்டுபிடித்துச் சிகிச்சை அளிப்பதும் சாகஸச் செயல்கள். அந்தச் சாகஸச் செயல்கள் புரிய டாக்டர் பி. ராமமூர்த்தியும் அவரது சகாக்களும் தகுதி வாய்ந்தவர்கள் என்பதில் அமெரிக்க அரசாங்க வைத்தியக் குழுவினர் திருப்தியடைந்த பிறகே நிதி உதவி அளித்திருக்கிறார்கள். நாம் பெருமைப்படக் கூடிய விஷயமல்லவா?

மூளை சம்பந்தமான சஸ்திர சிகித்சைக்கு வேண்டிய நவீன யந்திரங்களும் அதைக் கையாளும் திறமை மிக்கவர்களும் சென்னை அரசாங்க ஆஸ்பத்திரியில் உண்டு. நோயாளி சென்னை அரசாங்க ஆஸ்பத்திரியில் சிகித்சை பெற்றவுடன், அதனைத் தொடர்ந்து பல உடற்பயிற்சிகள் அளித்து வைத்தியம் செய்ய வேண்டிய பொறுப்பு ஆந்திர மஹிளா—சபா ஆர்த்தோபீடியக் சென்டரைச் சேருகிறது.

கை வழங்க வராமல் அவதியுறும் குழந்தைகள் அவ்வாறிருக்கக் காரணம் "மூளையில் ஒரு சிறு பகுதி நோயுற்றிருப்பதனால் தானா?" என்று பல துறை வைத்தியர்கள் சேர்ந்து முன்னதாக ஆராய வேண்டியிருக்கிறது. அதன் காரணமாகத்தான் என்று தெரிந்த பின் மூளை சஸ்திர சிகிச்சை நிபுணர் மண்டை ஓட்டைக் கீறியோ, துளையிட்டோ அப்பழுதுபட்ட பகுதிக்கு இஞ்செக்ஷன் செய்கிறார். அதன் விளைவாகப் பிடிப்புத் தளர்கிறது. பிறகு மெள்ள மெள்ள அக் குழந்தையை நடக்கவும் உட்காரவும் கல்வி கற்கவும் பழக்க வேண்டியிருக்கிறது. மூளை சஸ்திர சிகித்சைக்கு முன்பும் சஸ்திர சிகித்சை நடந்த பின்பும் செய்யவேண்டிய பரிசோதனைகளுக்கும், பலன் நாளுக்கு நாள் எப்படி ஏற்பட்டு வருகிறது என்பதைக் கணித்து வருவதற்கும்தான் அமெரிக்க நிதி உதவுகிறது.

இது ஓர் ஆராய்ச்சித் திட்டம். சென்னை டாக்டர்கள் இவ்வாராய்ச்சியின் மூலம் இந்த மூளை சிகித்சையினால் நிரந்தரமான பலன் உண்டு என்று நிரூபித்து விட்டார்களானால் அகில உலக வைத்திய சாஸ்திர அறிவுக்குத் தொண்டு செய்தவர்கள் ஆவார்கள்.

எலும்பு-தசைகள் வைத்தியர் டாக்டர் எம். நடராஜன், அவர் துணைவர் டாக்டர் ஆர். ஐ. சீனிவாசன், மூளை சஸ்திர வைத்தியர் பி. ராமமூர்த்தி, டாக்டர் வி. பாலசுப்பிரமணியம், டாக்டர் சீனிவாஸ் ஆகியோர் இப்பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர். டோக்கியோவுக்குச் சென்று இத்துறை வைத்தியத்தில் பயிற்சி பெற்று வந்த டாக்டர் வி. பாலசுப்பிரமணியம் சென்னையில் இப் புது சஸ்திர சிகிச்சை முப்பத்தைந்து குழந்தைகளுக்குச் செய்து கணிசமான வெற்றி கண்டிருக்கிறார்.

மூளையில் எந்த இடம் பழுதாகி இருக்கிறது என்று நிச்சயிப்பதுதான் டாக்டர்களுக்கு ஒரு சிரமமான காரியமே தவிர சஸ்திர சிகித்சையைப் பொறுத்தவரை மிக எளிய காரியமே. மற்ற பல ஆபரேஷன்கள் போல் பயமில்லாதது என்கிறார் டாக்டர் பி. ராமமூர்த்தி.

ஆந்திர மஹிளா சபா தொண்டர்கள் இப்படிப்பட்ட பரிதாபத்துக்குரிய குழந்தைகளுக்கு அன்னையாகவும் தந்தையாகவுமிருந்து பராமரிப்பதில் தேர்ந்தவர்கள். இதனாலன்றோ அமெரிக்க அரசாங்கம் இப்பராமரிப்புப் பணிக்கு நாலரை லட்சம் ரூபாய் உதவியிருக்கிறது! ஆந்திர மாதர் சங்கம், தமிழகச் சிறுவர்களுக்குச் சேவை செய்கிறது. அதனைப் பாராட்டி அமெரிக்கா உதவுகிறது!

அன்புக்கு மொழி, இனம் முதலிய வரம்புகள் ஏது?

—எஸ். வி. எஸ்.

முன் பக்கம் : டாக்டர் ஆர். ஐ. சீனிவாசன் கால் நடக்க வராமல் கஷ்டப்படும் சிறுவனுக்குப் பயிற்சியும் சிகித்சையும் அளிக்கிறார்.

★

சென்ற ஜூலை 14-ம் சென்னையிலுள்ள அமெரிக்க கான்ஸல் ஜெனரல், அமெரிக்க அரசாங்கத்தின் நிதி உதவி செக்கை சென்னை நிதி மந்திரி திரு மதியழகனிடம் அளிக்க, அவர் அதை ஸ்ரீமதி துர்க்காபாய் தேஷ்முக்கிடம் சமர்ப்பிக்கிறார்.





தீராத விளையாட்டு

கு. அழகிரிசாமி

முன் கதை

நடராஜ முதலியாரின் அருமைப் புதல்வன் ரங்கராஜன். அவன் சகோதரி சுந்தரி திருச்சியில் வாழ்க்கைப் பட்டிருப்பவள். அருணாசல முதலியார் நடராஜ முதலியாரின் சகோதரர். அவர் சாத்தூர் அருகேயுள்ள நிலபுலன்களைக் கவனித்துக் கொண்டிருப்பவர், நடராஜ முதலியாரின் நிலங்கள் உள்பட. எனவே அடிக்கடி மதுரைக்கு வந்து போவார். அவரது மகள் தங்கமும் அடிக்கடி மதுரைக்குத் தகப்பனுடன் வருவதுண்டு. அவள் இன்னும் திருமண மாகாதவள்.

தங்கமும் சுந்தரியும் மதுரைச் சித்திரைத் திருவிழாவுக்கு வந்திருந்தவர்கள், ரங்கராஜனுடைய திருமணப் பேச்சை எடுத்துக் கேலி செய்கிறார்கள். இதற்கு ஏற்றாற்போல் மதுரை அரசடி விநாயகர் கோவில் தெருவில் உள்ள விஜயா, கலா இருவரும் ரங்கராஜனுடைய கவனத்தைக் கவர்கிறார்கள்.

அருணாசல முதலியார் சாத்தூரில் உள்ள நிலங்களை விற்க ஏற்பாடு செய்கிறார். பிருக்கிலுள்ள புதுப்பணக்காரர் சுப்பையா அதை வாங்க நினைக்கிறார். அதன் பயனாக ரங்கராஜனுக்கு ஒரு தடவை சன்னுபெபுதூர் போய் வரும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அங்குள்ளவர்களோடு பேசிப் பழகியதில் தன் தாயாரின் நல்லியல்புகளை மேலும் நன்கு உணர்கிறான். நிலபுலன்களை விற்றாலும் வீட்டை விற்கக்கூடாது என்ற எண்ணம் தோன்றுகிறது. ஆனால் அருணாசல முதலியார் அதற்குச் சம்மதிக்கவில்லை.

விஜயா குடும்பத்தோடு ரங்கராஜனுக்கு நெருங்கி உறவாடும் வாய்ப்பு ஏற்படுகிறது. தங்கத்துக்கு ரங்கராஜன் விஜயாவோடு பழகுவது கட்டோடு பிடிக்கவில்லை. விஜயாவோ ரங்கராஜனின் தாயார் ஜானகி அம்மாளோடு கூட ஒட்டி உறவாடிப் பழகுகிறாள். சுந்தரி ஊருக்குப் புறப்பட்டுப் போகக் கார் வழங்கி உதவுகிறாள்.

ரங்கராஜன் வக்கீல் சன்னத் பெற்றுத் தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று சித்தப்பா அருணாசல முதலியார் கட்டாயப்படுத்தவே, தனது வக்கீல் நண்பன் முத்துக்குமாரின் ஆலோசனையைப் பெற்று வக்கீல் சன்னத் வாங்கச் சென்னைக்குப் பிரயாணமாகிறான். தன் எதிர்கால வாழ்க்கையைப்பற்றியும் விஜயாவின் அழகு குண நலன்கள் பற்றியும் நிறைய சிந்திக்கிறான் ரங்கராஜன். ஆனால் அவனது சித்தப்பா அருணாசல முதலியாரோ அவன் விஜயாவோடு உறவாடுவதை அறவே கத்தரித்து விடத் திட்டம் போடுகிறார்.

சென்னையில் தன் நண்பன் ராஜகோபாலனோடு சந்தோஷமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த ரங்கராஜனுக்கு இது தெரிய நியாயம் ஏது?

சென்னையிலிருந்து ரங்கராஜன் மதுரைக்கு வருவதற்கு ஒரு நாள் தாமதமாகிறது. அவன்தந்தை நடராஜ முதலியார் அவனைக் காணாமல் துடிதுடித்துப் போகிறார். அவர் மட்டும் என்ன, விஜயாவும்தான் இருப்புக் கொள்ளாமல் துடிக்கிறாள். அதுபற்றித் தாயார் மூலம் அறிந்ததும், "அவளுக்கு நல்ல மனசு இல்லையா?" என்று அப்பாவிபோல் தாயாரிடம் கேட்கிறான் ரங்கராஜன்.



அத்தியாயம் 22

ரங்கராஜன் சென்னையில் இருக்கும் போது அருணாசல முதலியார் மதுரைக்கு வந்து போன சமாசாரத்தை ஜானகியம்மாள் அவனிடம் கூறினாள். அவர் தன் கணவரோடு விஜயாவைப் பற்றி அந்தரங்கமாகப் பேசியது பற்றி அவனுக்கு எதுவுமே தெரியாது. அதனால் கிரயப் பத்திரங்கள் ரிஜிஸ்தர் செய்வதற்கு அவன் தந்தையோடு சாத்தூருக்கு விரைவில் செல்ல வேண்டியிருக்கும் என்பதை மட்டும் தெரிவித்தாள். ரங்கராஜன் அக்கறையில்லாமல் இந்தத் தகவலைக் கேட்டுக் கொண்டான். நடராஜ முதலியார் உடனே சாத்தூருக்குப் போகத்தான் வேண்டும் என்று நினைத்தாலும் மகனை அவசரப் படுத்தவில்லை. சென்னையிலிருந்து அவன் திரும்பி வந்தது, அவருக்குக் காணாமல் போன புதையல் கிடைத்த மாதிரி இருந்தது. சாத்தூருக்கு அழைத்துக் கொண்டு போய் அருணாசல முதலியாரும் அவனுக்குப் புத்திமதி சொல்ல ஆரம்பித்து விட்டால், அவன் மனம் நோகக் கூடும் என்றும், மனம் நொந்து எங்காவது போய்விடக்கூடும் என்றும் பயந்து சாத்தூருக்குப் போகும் விஷயத்தைக் கொஞ்சம் ஆறப் போட்டார்.

ரங்கராஜன் முத்துக் குமாரைப் போய்ச் சந்திக்க நினைத்தான். ஆனால் அதற்குமுன் விஜயாவைத் தன் வீட்டிலேயே சந்தித்து விட்டான்.

''நீங்க இங்கே ரெண்டு நாள் இல்லாதது அம்மாவுக்குப் பைத்தியம்



ப்ளூ ஸீல் டால்க்

ஹெக்ஸக்ளோரோபின் கலந்தது.

சாதாரண பவுடர்களில் இல்லாத தனி வலிமை வாய்ந்தது.

அது வியர்வை நாற்றத்திலிருந்து பாதுகாத்து உங்களை நாள் முழுதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.

ப்ளூ ஸீல் டால்க்கில் உள்ள வலிமைவாய்ந்த ஹெக்ஸக்ளோரோபின், வியர்வை நாற்றத்தை ஏற்படுத்தும் கிருமிகளிலிருந்துஉங்களை பாதுகாக்கிறது.

அதன் பட்டுப்போன்ற மென்மை, உங்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டுகிறது. அதன் சிறப்பான இனிய மணம் உங்களை நாள் முழுவதும் நறுமணத்துடன் திகழச்செய்கிறது.

நினைவிருக்கட்டும். வியர்வை நாற்றத்திலிருந்து பாதுகாக்கவும், புத்துணர்ச்சி அளிக்கவும், ப்ளூ ஸீல் டால்கைவிட சிறந்த பவுடர் வேறெதுவுமில்லை

சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்கார்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ் ஏயில் இணைக்கப்பட்டது)



ப்ளூ ஸீல் டால்க் ஹெக்ஸக்ளோரோபின் கலந்தது.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸின் இன்னொரு தரமான தயாரிப்பு!

P 4959A

பிடிச்ச மாதிரி ஆயிட்டது'' என்றாள் விஜயா.

ஜானகியம்மாளும் அப்போது சிரித்துக் கொண்டு அருகில் நின்றாள்.

ரங்கராஜன் உடனே, ''அதனாலே தான் அம்மா ஒரு நாளைக்குப் பத்துத் தடவை உங்க வீட்டுக்கு வந்து உன் கிட்டே 'ராஜாவைக் காணல்லியே! ராஜாவைக் காணல்லியே'ன்னு கவலைப்பட்டிருக்கிறாள்! அப்படித்தானே?'' என்று கேட்கவும், விஜயா வெட்கத்தினால் குனிந்தாள். இருந்தாலும் சுதாரித்துக் கொண்டு, ''எங்க வீட்டுக்கு வந்துதான் கவலைப்படணுமா? அவங்க தவிச்சது எனக்குத் தெரியும். உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று சொல்லிச் சமாளித்தாள். அவள் முகம் வெட்கத்தினால் சிவந்திருந்ததைப் பார்த்து ரங்கராஜன் அடைந்த ஆனந்த பரவசத்துக்கு அளவே இல்லை.

''அம்மாவுக்கு நீங்க ஒரு தந்தியாவது கொடுத்திருக்கலாம்'' என்று விஜயா சொல்லிக் கொண்டிருக்கும் போதே வெளியே, ''அம்மா!'' என்ற ஒரு முரட்டுக் குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்த ரங்கராஜன், ''விருந்தாளி வந்துட்டாரம்மா...!'' என்றான்.

வாசலில் அந்தப் பைத்தியக்காரன் நின்று கொண்டிருந்தான்.

''இவன் உங்க வீட்டுக்கே தினமும் வர்றானே, எதுக்கு?'' என்று விஜயா கேட்டாள்.

''அந்த ரகசியம் அவனுக்குத்தான் தெரியும். எனக்கு ஒரு யூகம்தான்'' என்றான் ரங்கராஜன்.

''என்ன யூகம்?''

''முந்தின ஜன்மத்திலே அவன் என் அண்ணனாகப் பிறந்திருப்பான் போலத் தெரியுது. அதனாலேதான் அம்மாவையே தேடி வர்றான்.''

இதைக் கேட்டு ஜானகியம்மாள் சிரித்துக் கொண்டே உள்ளே போனாள். விஜயாவுக்கோ அவன் சொன்னதை நினைக்கவே அருவருப்பாக இருந்தது.

''நீங்க இப்படி விளையாட்டுப் பண்ண வேண்டாம்.''

''விளையாட்டில்லே. நிஜமாத்தான் சொல்றேன்.''

''அம்மா வயித்திலே இப்படிப் பிள்ளை எந்த ஜன்மத்திலும் பிறந்திருக்க முடியாது. இந்த அசிங்கத்தை அம்மாவோடு சேர்த்து வைச்சுத் தயவு செய்து இனி மேல் பேசாதீங்க!''



மொழிப் பிரச்னையைத் தீர்க்க ஒரே வழி! நமது தலைவர்கள் இந்தியாவின் பதினாறு மொழிகளிலும், ஆங்கிலத்திலும் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்துவிட வேண்டும்.

ஆதாரம்: ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்''
தகவல்: ''ரமணன்''

விஜயாவின் அருவருப்பைப் பார்த்து அவனுக்குச் சிரிக்கவும் தோன்றியது; கடிந்து கொள்ளவும் தோன்றியது. ஆனால் இரண்டையுமே செய்யாமல், ''சரி, நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரணும்'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

''இருங்க. அவன் போனப்புறம் போகலாம்'' என்று தடுத்தாள் விஜயா.

''ஏன்?''

''வேண்டாம்.''

''சகுனத் தடைன்னு சொல்றியா?''

''அப்புறம் என்ன?''


''நீ இப்படிச் சொன்னதாகத் தெரிஞ்சால், அம்மா ரொம்பக் கோபப் படுவாள்'' என்றான் ரங்கராஜன்.

''இதை நான் நம்பத் தயாராயில்லே. அம்மாவுக்குக் கோபம் வர்றதாவது!... அந்தத் தங்கமான மனசிலே கோபம் எப்படிப் பிறக்கும்?''

''விஜயா! அம்மா மனசும் தங்கம் தான்! நீ சகுனத் தடைன்னு சொல்றதை நான் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், உன் தங்கமான மனசுக்காக இந்த ஒரு தடவை நீ சொல்றபடி செய்யறேன். அப்புறமா வெளியே போறேன்'' என்று சொல்லி விட்டு உள்ளே திரும்பினான்.

பைத்தியக்காரன் போன பிறகு, ரங்கராஜன் அவளிடம் சொல்லிக் கொண்டு முத்துக்குமாரின் வீட்டுக்குப் புறப்படும் போது, ''நாளை உங்க அப்பாவைப் பார்க்கிறேன். எனக்கும் பார்க்க வேண்டும் என்கிற ஆசை தான்'' என்று சொன்னான்.

''நாளை பார்க்க முடியாது. இன்னிக்கு ராத்திரி மெட்ராஸுக்குப் போறார். திரும்பி வர நாலு நாட்கள் ஆகும்'' என்றாள் விஜயா.



ஒருவர்: தோட்டத்திலே காய்கறி போட்டீங்களே, என்னவெல்லாம் வந்தது ?''

மற்றவர்: ஆடு வந்தது, மாடு வந்தது... அவ்வளவுதான் !

— சுதாகரன்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''சரி, அப்புறமாப் பார்க்கிறது'' என்று சொல்லி விட்டு வெளியே சென்முன் ரங்கராஜன்.

முத்துக்குமாரின் வீட்டுக்குச் சென்று சென்னைக்குப் போனதையும், சன்னத் வாங்கியதையும், ராஜகோபாலனைச் சந்தித்ததையும் சுருக்கமாகச் சொன்னுன் ரங்கராஜன். முத்துக் குமாரும் தான் பயிற்சி பெற்ற பெரிய வக்கீலிடமே ரங்கராஜனும் சிறிது காலம் பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னுன்.

''அடுத்தாற்போல் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதான்!'' என்று முத்துக்குமார் சொன்னதும், ரங்கராஜனுக்குத் திடீரென்று விஜயாவின் ஞாபகம் வந்து விட்டது. அவள் குடும்பத்தைப் பற்றி முத்துக்குமாருக்குத் தெரிந்திருக்கக் கூடும் என்றும் நினைத்தான். சிறிது யோசனை செய்து விட்டுப் பேச்சைத் தக்கவிதமாக ஆரம்பித்தான் :

''நாங்க இப்போ குடியிருக்கிற வீட்டை நாங்களே விலைக்கு வாங்கிறதா இருந்தோம். ஆனல் எங்க தெருவுக்குப் புதுசா வந்திருக்கிற ஒருத்தர் — பெரிய பணக்காரர்—அதை வாங்கப் போறதாத் தெரியுது. உங்களுக்குத் தெரிந்திருக்குமே, ஆர். கே. ராமலிங்கத்தை.......!''

''ஆமாம். கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் உங்க தெருவிலேயா இருக்கிறார் இப்போ ? சொக்கி குளம் பங்களாவிலே இப்போ இல்லேன்னு மட்டும் எனக்குத் தெரியும்'' என்முன் முத்துக் குமார்.

''எப்படி அவர் ?''

''எனக்கு நேரடியாத் தெரியாது. ஆனல், நல்ல மனுஷன்னு கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனையும் ரெண்டொரு தடவை பார்த்திருக்கிறேன். ரொம்ப 'சிம்பி'ளாத்தான் இருப்பார். பணக்காரர் மாதிரி தெரியாது. ஆனல் பரம்பரையாப் பணக்காரக் குடும்பம். அந்த நல்ல மனுஷனுக்கு ஒரு மகன்! அருமந்த குமாரன்! எப்பவும் இப்படித்தானே ! 'வாத்தியார் பிள்ளை முட்டாள், வைத்தியர் பிள்ளை நோயாளி' என்கிற மாதிரி அந்த நல்ல மனுஷனுக்குப் பிள்ளையாகப் பிறந்தவன் ஒரு ரௌடிப் பயலாப் போயிட்டான்.''

''அப்படியா ?''

''அவன் சகவாச தோஷத்தாலே கெட்டுப் பணத்தையும் காலி பண்ணிக்கிட்டிருந்தான். கடைசியிலே எதிர் வீட்டிலே ஒரு குடும்பப் பெண்ணுக்கு ஆசை காட்டி அவளைச் சினிமாவிலே சேர்த்து விடறதாகச் சொல்லிக் கடத்திக் கொண்டு போயிட்டான். போனவன் அவளை எங்கேயோ நட்டாத்திலே விட்டுட்டுத் திரும்பவும் இங்கேயே வந்திருக்கிறுன். ஆனல் அவர் அவனை வீட்டுக்குள்ளேயே விடவில்லை. 'கெட் அவுட்'டுன்னு ஒரே வார்த்தையிலே வெளியே தள்ளிக் கதவைச் சாத்திப்பிட்டார். அவனும் எங்கேயோ தொலைஞ்சு போனுன். பாருங்க, அவர் எப்படிப் பட்ட நல்ல மனுஷன் என்கிறதை இதிலேயே தெரிஞ்சிக்கிடலாம். ஆனல் அவர் ஒரு தப்புப் பண்ணிட்டார்ன்னு தோணுது: சிறு வயசிலே அவனைக் கண்டிச்சு வளர்க்காமல் தன்னிச்சையா விட்டிருக்கிறுர். அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே எங்கே வளையும்? ஒரேயடியா நிமிர்ந்துட்டது.''

இதைச் சொன்ன முத்துக் குமார் வேறொரு செய்தியையும் சொன்னுன்: ஆர். கே. ராமலிங்கம் கலப்புக் கலியாணம் பண்ணிக் கொண்டவர் என்றும், அவர் நல்லவராக இருக்க மகன் கெட்டவனைத் தல எடுத்திருப்பதைப் பார்க்கும் போது, அவனுடைய தாயார் ஒருவேளை கெட்டவளாக இருப்பாளோ, அவளுடைய குணந்தான் அவனிடம் படிந்து விட்டதோ என்று நினைக்கத் தோன்றுவதாகவும் கூறினுன்.

ரங்கராஜன் ஆச்சரியத்தில் மூழ்கி, ''அந்த அம்மாவை நானே பார்த்துப் பேசியிருக்கிறேன். அவள் ரொம்பவும் நல்லவளா இருக்கிறுளே! நீங்க சொல்ற மாதிரி தோணலையே ! அவள் பெண்களும் நல்லவங்களாகத்தான் இருக்கிறுங்க !'' என்முன்.

''அவங்களை உங்களுக்குத் தெரியுமா?''

''ஒரு நாள் ஒரு சந்தர்ப்பத்திலே பார்த்தேன். கொஞ்ச நேரம் பேசிக்

உங்களுடைய நல்வருகையை எதிர் பார்க்கிறோம்...



இப்பொழுது நான் உங்களை அழைப்பது பாங்கர் என்ற முறையில் அல்ல. ஆனால் அலஹாபாத் பாங்கின் பல்லாயிரக்கணக்கான மனமகிழ்ச்சி கொண்ட வாடிக்கையாளர்களில் நானும் ஒருவன் என்ற முறையில்தான். நீங்களும் இந்த பழமையான மிகப் பெரிய பாங்கில் என்னுடன் சேர்ந்து அங்கம் வகித்து மகிழ வாருங்கள்.

i தக்க மரியாதை, ii திறமையும், பொறுப்பும், விரைவும், iii தனி கவனமும் கொண்ட சேவை. இத்தனையும் அலஹாபாத் பாங்கில் எப்பொழுதும் எதிர்பார்க்கலாம். இந்த நாட்டில் 103 ஆண்டுகளுக்கு மேலாக பாங்கு தொழில்துறையில் சிறந்த அனுபவம் பெற்றுள்ள பாங்கு.

*

- சேமிப்புக்கணக்குகள்
- செக்கிங் டிபாசிட்டுகள்
- நடப்புக்கணக்குகள்
- தவணை டெபாஸிட்டுகள்
- பாதுகாப்பு டெபாஸிட்டு லக்கர்கள்
- அக்கிய நாட்டு செலாவணி வசதிகள்
- பயிர்விவசாயப் பொருளுதவி
- சிறு தொழில்துறைக் கடன் உதவி

மிகப் புராதன இந்திய ஜாயின்ட் ஸ்டாக் பாங்க்

ஸ்தாபிதம் 1865

அலஹாபாத் பாங்க் லிமிடெட்

(சார்ட்டர்ட் பாங்குடன் இணைக்கப் பெற்றது)

ரெஜி. ஆபீஸ்: 14, இந்தியா எக்ஸ்சேஞ்ச் ப்ளேஸ், கல்கத்தா-1

கெ. எம். கஜுரப்பா, சேர்மன்

GRASIM

STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.


THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.

3. ம. பொ. சி.யும் மகாத்மாவும்

1946ல் காந்திஜி சென்னை வந்து ஹிந்திப் பிரசார சபைக் கட்டடத்தில் தங்கியிருந்தார். திரு ராஜாஜி, திரு ம. பொ. சிவஞானத்தை அழைத்து வந்து காந்தியடிகளுக்கு அறிமுகப்படுத்தினார். "இவர், கள் இறக்குபவர் குலத்தில் பிறந்தவரே ஒழிய உங்கள் மாதிரி இவர் கள்ளுக்கு விரோதி!" என்று ராஜாஜி கூறினார்.

காந்திஜி சிரித்துக் கொண்டே, "நான் தித்திப்புக் கள்ளின் விரோதி அல்லவே;





முதல் சந்திப்பு

புளிப்புக் கள்ளின் விரோதிதான். சிவஞானம் உடல் மெலிந்து காணப்படுகிறார். அவர் தித்திப்புக் கள்ளான 'நீரா'வை அருந்தினால் அவர் உடல் தேறி விடும்" என்றார்.

மேலும் ராஜாஜி காந்திஜியிடம், "இவர் என் கோஷ்டிக்கு வக்கீல்" என்றார். "அதனால்தான் அவரைத் தனியாக என்னிடம் அறிமுகப்படுத்த அழைத்து வந்தீர்கள் போலிருக்கிறது" என்று காந்திஜி கூறி விட்டுச் சிரித்தார். "ராஜாஜி அவர்கள் நானே நினைக்காத ஒரு நேரத்தில் தாமாகவே நினைத்து அடிகளாரிடம் என்னை அழைத்துச் சென்றதை இன்றளவும் மிகுந்த நன்றி உணர்வுடன் போற்றி வருகிறேன்" என்றார் ம. பொ. சி.

(ம.பொ. சி. நேரில் தெரிவித்தது) - ரஜுன்

கொண்டிருந்தோம்" என்று சொல்லி ரங்கராஜன் மழுப்பினான்.

"என்னவோ!" என்று சொல்லி அந்தப் பேச்சையே முடித்து விட்டான் முத்துக் குமார்.

ரங்கராஜன் வீட்டுக்குத் திரும்பி வந்ததும் விஜயாவின் தந்தை கலப்புக் கல்யாணம் செய்து கொண்டவர் என்ற விவரத்தைத் தன் தாயாரிடம் அவசரம் அவசரமாகக் கூறினான்.

ஆனால் ஞானபியம்மாள் கொஞ்சமும் பரபரப்பு அடையாமல், "எனக்குத் தெரியுமே!" என்றாள்.

ரங்கராஜனால் ஆச்சரியத்தைத் தாங்கவே முடியவில்லை.

"தெரியுமா? எப்படித் தெரியும்?" என்று கேட்டான் அவன்.

"உங்க அப்பாதான் சொன்னார், ராஜா."

"அப்பாவா சொன்னார்? அப்பாவுக்கு ஊர் விஷயம் ஒண்ணு விடாமல் தெரியும் போலிருக்கே! இதையெல்லாம் அவருக்கு யார் சொல்றா?.... அம்மா! இந்தச் சமாசாரத்தைத் தெரிஞ்சிருந்தும் எனக்கு ஏன் நீ சொல்லல்லே?"

''வேணும்னுதான் சொல்லல்லே. அந்தப் பொண்ணு நல்ல பொண்ணா இருக்கிறாள். ஒரு சுந்தரி திருச்சிக்குப் போயிட்டதுக்கு இவள் எனக்கு ஆயிரம் சுந்தரியா இருக்கிறாள். இந்தப் பத்தரை மாத்துத் தங்கத்தை நீயோ உங்க சித்தப்பாவோ ஒரு மாதிரி நினைக்கப்படாதே என்கிறதுக்காகத் தான் சொல்லல்லே. அப்பாவும் சொல்ல வேண்டாம்னு சொல்லிட்டார். ஒருத்தரைப் பத்திக் கேவலமா நினைக்கிறது அவருக்கு எப்பவுமே பிடிக்காது....''

அம்மாவும் அப்பாவும் விஜயா விஷயத்தில் எவ்வளவு பெருந்தன்மையாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணி மகிழ்ந்தாலும், ''இதில் கேவலம் என்ன இருக்கு?'' என்று கேட்டு அம்மாவின் மனசைப் பூரணமாக அறியமுயன்றான் ரங்கராஜன்.

''தாயும் தகப்பனும் வேறே வேறே ஜாதியா இருந்தா அதைச் சில பேர் குறைவாப் பேசுவாங்கன்னு உங்க அப்பாதான் சொன்னார். அதனாலேதான் உங்க சித்தப்பாகிட்டேகூட அவர் சொல்லல்லையாம்.''

அப்பொழுது ரங்கராஜன் மனம் துணிந்து, அம்மாவை இன்னும் பூரணமாகப் புரிந்துகொள்வதற்காக வெளிப்படையாகவே ஒரு கேள்வியைக் கேட்டான்:

''அம்மா! நான் ஒரு விஷயத்தைக் கேட்கிறேன். நீ மனசில் நினைக்கிறதை அப்படியே சொல்லணும். கேட்கட்டுமா?.... ஒரு வேளை விஜயா என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறான்னு வச்சுக்குவோம்; நானும் சம்மதிச்சிட்டதாக வச்சுக்குவோம். அப்போ எங்களை நீ ஆசீர்வாதம் பண்ணுவையா?''

''ராஜா! அதை அப்போ பார்க்கலாம். இப்போ என்ன அவசரம்? நீ சாப்பிடு. நேரமாயிட்டது'' என்று ஜானகியம்மாள் வழக்கம் போல் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''சாப்பிடுறேன். நீ முதலிலே நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு......''

''விஜயாவுக்கு அப்படி நோக்கம் இருக்கா? அவள் என் மேலே பிரியமா இருக்கிறதைப் பார்த்துட்டு நீ அப்படி நினைச்சிட்டியா?''

''நான் எப்படி நினைச்சேனோ, எப்படி நினைக்கல்லையோ, அதைப் பத்தி எதுக்கு? ஒரு வேளை அப்படி நாங்க கல்யாணம் பண்ணிக்கிடறதா இருந்தால், நீ ஆசீர்வாதம் பண்ணுவியா என்கிறதுதான் என் கேள்வி.''

''சும்மா இரு ராஜா. கல்யாணம் பெரிய விஷயம். உங்க அப்பா, சித்தப்பா, மாமா, உன்னோட தங்கை — இப்படிப் பல பேர் இஷ்டப்பட்டுச் சம்மதிச்சு நடக்க வேண்டிய காரியம். அதை யோசனை பண்ணிக்கிட்டு என்னைக் கேளு. நான் பதில் சொல்றேன்.''

அம்மா நழுவிச் செல்வது போல் ரங்கராஜனுக்குத் தோன்றியது.

''நீ பேசுறதைப் பார்த்தால் இந்தக் கல்யாணம் நடக்கப் போறதே இல்லைன்னு நீ நினைக்கிறதும் தெரியுது; விஜயாவைப் பத்தி நீயும் குறைவா நினைக்கிறே என்கிறதும் தெரியுது'' என்று ரங்கராஜன் சொல்லி வாய் மூடவில்லை; அந்த அம்மாள் பதறிப் போய் விட்டாள். ஒரு கணத்தில் அவள் கண்களும் கலங்கி விட்டன.

''ராஜா! அவளைப் பத்தி நான் அப்படி நினைப்பேன்னு சொல்றதுக்கு உனக்கு எப்படி மனசு வந்தது?.... பாவம்டா! மத்தவங்க யாரும் அவளை அப்படி நினைக்கிறதாத் தெரிஞ்சாலே, என் உயிர் போயிடும். இல்லேன்னா, இந்த விஷயத்தை இத்தனை நாளும் உன்கிட்டே சொல்லாமல் இருந்திருக்க மாட்டேன்.''


தாயாரின் கண்ணீரைப் பார்த்து ரங்கராஜனுக்கும் கண் கலங்கியது.

''அம்மா! நீ ரொம்ப உணர்ச்சி வசப்படறே! நான் ஒரு பேச்சுக்குக் கேட்டேன். மத்தப்படி நாங்க கல்யாணம் பண்ணிக்கிறதா ஒப்பந்தம் ஒண்ணும் பண்ணிக்கல்லே. அவளைப் பத்தி நீ என்ன நினைக்கிறே என்கிறதைத் தெரிஞ்சுக்கிறதுக்காகத்தான் கேட்டேன்.''

''நான் அவளைப் பத்தி ஒண்ணுமே நினைக்கல்லே. அவளைப் பார்த்துப் பார்த்துச் சந்தோஷப்பட்டுக்கிட்டிருக்கிறேன். அவ்வளவுதான். எதைப் பத்தியும் ஏன் நினைக்கணும்?''

தாயாரை அடிக்கடி மதுரை மீனாட்சியம்மனோடு ஒப்பிட்டுத் தெய்வமாகப் பாவித்துக் கொண்டிருக்கும் ரங்கராஜன், 'இவள் கண் கண்ட தெய்வம்' என்று நினைத்துக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். ஆசீர்வாதம் பண்ணுவதைப் பற்றி அவன் மேற்கொண்டு கேட்க விரும்பவில்லை. எந்தத் தெய்வமும் நல்லதை ஆசீர்வாதம் பண்ணத்தான் செய்யும்; ஒன்றும் சொல்லாமல் தெய்வம் மௌனம் சாதித்தாலும் அதுவும் நல்லதுக்குச் செய்யும் ஆசீர்வாதமாகத்தான் இருக்க முடியும் என்று நினைத்த ரங்கராஜனுக்கு, அம்மாவை இனி எதுவும் கேட்பது அநாவசியம் என்பது போல் தோன்றி விட்டது.

(தொடரும்)



Criterion - ICT 2147 TM



வாசுவுக்கு வந்த கடிதங்கள்

— ராஜப்பா —



வாசு அண்ணாவுக்கு வந்திருந்த தபாலை அப்பா பிரித்தார். அம்மா உட்பட நாங்கள் யாவரும் ஆவலுடன் அவரைச் சூழ்ந்து கொண்டோம்.

அப்பா சொன்னார்:

''ரப்பர் தொழிற்சாலை இண்டர்வ்யூவுக்குப் போயிருந்தான் அல்லவா? அதில் தகவல் இலாகாவிலே அஸிஸ்டெண்டாக 'செலக்ஷன்' ஆகியிருக்கு. முந்நூற்றைம்பது ரூபாய் சம்பளம்.'' — அப்பா சொல்லிவிட்டு ஒருவித உணர்ச்சியும் இன்றி நின்றார்.

அம்மா தொடர்ந்தாள்:

''ஓஹோ. அதுவா! அன்றைக்கு அந்த இண்டர்வ்யூவுக்குப் போகும்பொழுது சமையலாக நேரமாகி விட்டது. வெறும் வயிற்றோடு போனான். திரும்ப மூன்று மணி ஆயிற்று. பாவம்!''

அக்கா தொடர்ந்தாள்:

''நம்ப வாசுதான் கடைசி 'ஆசாமி'யாம். பசி மயக்கம் தாங்காமல் துடித்துக்கொண்டு நின்றபோது பியூன் வந்து உள்ளே அழைத்துப் போனானாம்....''

நான் ஆரம்பித்தேன். ''அப்பா! அப்பா! அண்ணாவுக்கு அதிகாரி கேட்ட கேள்விகள் சரியாகக் காதில் விழவே இல்லையாம். இருந்தாலும் மளமள வென்று பேசி முடித்ததும் அதிகாரி இரண்டே நிமிஷத்தில் அண்ணாவை அனுப்பி விட்டாராம். 'எனக்கு எங்கே கிடைக்கப் போகிறது, அந்த உத்தியோகம்?' என்று அண்ணா அவநம்பிக்கையோடு இருந்தார் அப்பா.''

ஆக, வாசு அண்ணாவுக்கு ஒரே வாரத்தில் நான்கு இடங்களிலிருந்து வேலைக்கு அழைப்பு வந்து விட்டதில் எங்களுக்கு மிகவும் பெருமை. 'அதிர்ஷ்டக் கட்டை' என்று சொல்லி வந்த அப்பா வாய் திறக்கவில்லை. 'வேலையும் போதும் வந்தாக வேண்டும்' என்று சொல்லிச் சமாதானம் அடையும் அம்மா மௌனமாகச் சிலை போல் நின்றாள். வேலைதான் இப்பொழுது வந்து விட்டதே!

மைதிலி இதற்குமுன் வந்த 'ஆர்டர்' ஒன்றைக் கொண்டு வந்து அப்பாவிடம் காட்டினாள்.

''விமானக் கம்பெனியில் பிரயாண இலாகாவிலேயிருந்து நானூறு ரூபாய் சம்பளத்தில் அண்ணாவுக்கு வேலை கிடைச்சிருக்கு...'' என்று சொல்லிக் கொண்டே கொடுத்தாள் அப்பாவிடம்.

அம்மாவுக்கு என்ன ஆத்திரமோ, தெரியவில்லை. ''போதும், உன் பெருமை! அந்த இண்டர்வியூவுக்குப் போகத்தானே உன் பர்ஸிலிருந்து ஒரு ரூபாய் எடுத்துக் கொண்டான், பஸ் சார்ஜுக்கு. அதற்காக. அவனிடம் நீ என்ன சண்டை போட்டாய்!''

''ஏம்மா.... இதையே சொல்லிச் சொல்லி என்னை வாட்டறே!'' என்று மருகினாள் மைதிலி.

வாசு அண்ணாவும் ஒரு பி. ஏ. படித்தவன்தான். பத்து வருடங்கள் ஒரு கம்பெனியில் பொறுப்பான உத்தியோகத்தில் இருந்து, நானூற்றைம்பது ரூபாய் வரை சம்பாதித்து, அப்பாவுக்கு உதவியாகக் குடும்பத்தை நிர்வகித்து, என்னையும் தம்பி பாபுவையும், தங்கை மைதிலியையும் ஆளாக்கி விட்டவன்தான்.

'கல்யாணத்தை ஒத்திப் போடுகிறானே' என்ற வருத்தம்தான் அவனிடம் அம்மாவுக்கு. அதைத் தவிர வருடத்தில் மூன்று பட்டுப் புடவைகளை வாசு தவறாமல் வாங்கி வரும் பெருமை அவளுக்கு அளவுக்கு அடங்காது.

திடீரென்று கம்பெனி ஆட்குறைப்பில் அண்ணாவுக்கு வேலை போயிற்று. போதாத காலம் யாரை விட்டது? அப்பாவும் ரிடையராகி விட்டார். கேட்க வேண்டுமா குடும்பப் பூசல்களுக்கு? படித்துக் கொண்டிருந்தநானும் மைதிலியும் தலைதூக்கி ரயில்வேயிலும், தபால் இலாகாவிலும் புகுந்து கொண்டோம்.

என்ன இருந்தாலும் பெரியவர்கள் கை தாழ்ந்து விட்டது. ரூபாய் நோட்டைப் புதிதாகப் பார்க்க ஆரம்பித்த எங்களுக்கு அவ்வளவு இலகுவில் மொத்தத்தையும் வீட்டில் கொடுக்க மனம் வருமா?

இருந்தும் நான் கொஞ்சம் பெரியவன் என்ற காரணத்தால் சற்றுப் பொறுப்புடன் செலவுகளைச் சுருக்கி நடந்து கொண்டேன். மைதிலி சுரூர்! டெலிபோன் இலாகாவிலே வேலை அவளுக்கு. 'ஏ ஃபார் ஆப்பிள் பி ஃபார் பாம்பே என்றால் எம் ஃபார் 'மணி' தான்.... ஆகவே அவள் கடும் போர்வழி. முசுடு.... முன்கோபி.

வாசு அண்ணாவும் இந்தப் பதினைந்து மாத காலத்தில் வேலை வேலை என்று அலையாத அலைச்சல் அலைந்தும், தாங்கி வழிந்து கொண்டு பதில் கிடைத்ததே தவிர, ஓரிடத்தில் உருப்படியாக ஒரு வேலை கிடைக்கவில்லை. என் அண்ணா படிக்காதவனா—முன் அனுபவம் இல்லாதவனா... நடந்துகொள்ளத் தெரியாதவனா? என்ன காரணமோ... முப்பது வயதுக்குள்ளாகக் கேட்டிருந்த இடங்களுக்கெல்லாம் மனு எழுதியும், சிபாரிசு தேடியும், போஸ்டல் ஆர்டருக்குச் செலவழித்தும் தனியாய்த் தவித்தும் வேலை கிடைக்கவில்லை.

''....அம்மா கல்யாணம் செய்துகொள்ளச் சொல்லிச் சொல்லிப் பறந்தாயே.... ஒண்டிக் கட்டை தான்! வெறும் ஆளாய்ச் சாப்பிட எத்தனை வேதனையாக இருக்கு தெரியுமா?'' என்று ஒவ்வொரு வேளை இலை முன் உட்காரும்போதும் அண்ணா வேதனைப்படுவான்.

''இராத்திரி இராத்திரியாகவே இருந்து விடாது வாசு! எப்படியும் பொழுது விடியத்தான் வேண்டும். சாப்பிடும்போது எதையும் நினைத்துக் கலங்காதே!'' என்று பெற்றவள் சமாதானம் கூறியும் அண்ணாவுக்குச் சாப்பாடு விஷமாக இருந்தது.

எங்கோ அலைந்து விட்டு வேலை கெட்ட வேளையில் வீடு திரும்பி, 'எல்லோரும் தூங்கி விட்டார்கள், எழுப்ப வேண்டாம்' என்ற சாக்கில் இரவில் உபவாசம் இருந்த நாட்கள் அநேகம். அப்பா மறுநாள் காலை விஷயமறிந்து அலறுவார்.

அந்த அண்ணாவுக்கு வேலை கிடைத்து விட்டதென்றால் எங்கள் வீட்டில் எவ்வளவு மன நிறைவு ஏற்பட வேண்டும்?

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அண்ணா ஏற்கனவே வேலை பார்த்து வந்த கம்பெனி அதிகாரி வெகு விரைவில் அண்ணாவின் கோரிக்கையைப் புனராலோசனை செய்து சாதகமாக ஏதேனும் செய்ய இயலுமானால் செய்வதாகவும் தபால் எழுதி யிருப்பதை அப்பா தற்போதுதான் பார்த்தார்.

வாக அண்ணாவிடம் அந்தத் தகவலைச் சொன்னால்...? தனக்கும் விடிவு காலம் வருமா என்று ஏங்கிய அண்ணா காதுக்கு மட்டும் இந்த விவரங்கள் எட்டினால்...?

மைதிலி என் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். பாபு ஒன்றுமே பேசா மல் அம்மா அருகில் நிற்கிறான்.

அப்பா கையிலிருந்து அண்ணாவுக்கு வந்துள்ள மூன்று தபால்களை வாங்கிப் பார்க்கத் துடி துடிக்கும் என்னைப் பார்த்து அப்பா சொன்னார்:

''ஜகதா! இந்த மூன்று ஆர்டர்கள் அனுப்பி யிருக்கும் கம்பெனிகளுக்கும் தபால் எழுத வேண்டும்.''

''என்னவென்று எழுதுவது அப்பா?'' என்றேன் நான். இரண்டு நிமிட மௌனத் துக்குப் பின் அப்பா சொன்னார்:

''...தங்கள் கடிதத்துக்கு மிக்க நன்றி. தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள மனுதாரர் சென்ற வாரம் காலமாகி விட்டார்!'' அப்பா இப்படிச் சொல்லிவிட்டுக் குலுங்கக் குலுங்க அழுதார். நானும் மைதிலியும் அக்காவும் அடக்கிக் கொண்டோம்.

அம்மா கண் கலங்காமல் நிற்கிறாளே! அம்மா சொன்னாள்:

''ஆமாம், எழுதிவிடு ஜகதா! அவனைப் போல் அலை மோதிக் கொண்டிருக்கும் வேறு எவனுக்காவது அவன் உயிரோடிருக்கும் போதே 'ஆர்டர்' போய்ச் சேரட்டும்!'' — ஹூம்! மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு எவ்வளவு விரக்தி ததும்ப அவள் சொல்லி யிருக்க வேண்டும் இந்த வார்த்தைகளை!

அண்ணாவுக்கு வந்த மூன்று தபால்களும் அவனைப் போலவே அக்கினிப் பிரவேசத் துக்குத் தயாராகி விட்டன!



பல் விபத்து !

இரண்டு மாத லீவில் என் கணவருடனும் மூன்று பிள்ளைகளுடனும் காரில் தெற்கே முழுதும் சுற்றிப் பார்க்க விசாகப்பட்டினத்தி லிருந்து கிளம்பினோம். எல்லா க்ஷேத்திரங் களையும் தரிசித்துவிட்டுத் திரும்பும்போது மதுரையில் அக்கா வீட்டில் ஒரு வாரம் தங்கினோம். என் மூத்த மகன் சாப்பிட்ட பின் தண்ணீர் குடிக்கும்போது இரண்டு பொய்ப் பற்கள் தண்ணீருடன் தொண்டைக்குள் போய் நெஞ்சில் மாட்டிக் கொண்டுவிட்டன. வலியால் துடிதுடித்தான். ஒருவருக்கும் என்ன செய்வது என்று தோன்றவில்லை. என் அக்கா ரொம்பவும் தைரியசாலி. காரில் என் கணவருடன் மதுரையில் உள்ள சர்க்கார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனான். எக்ஸ்ரே எடுத்தும் பற்கள் இருக்குமிடம் அதில் காணப் படவில்லை. வலியால் பையன் துடித்ததால் டாக்டர்கள் நாலைந்து பேர்களாக யோசனை செய்து ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போய் மயக்கம் கொடுக்காமலே வாய் வழியாக ரப்பர் குழாயைச் செலுத்தி அதன் மூலமாகப் பற்களைத் தேடினார்கள். மயக்கம் கொடுக்கக் கூடாத நிலையில் பற்கள் சிக்கி யிருந்தன. சற்று நேரத்தில் பற்கள் சாமணத்துக்கு அகப்பட்டும் வழுக்கிக் காற்றுக் குழாயில் அடைத்துக்கொண்டு விட்டது. உடனே பையனின் உயிருக்கே ஆபத்தாகப் போய்விட்டதால் பற்களை உள்ளேயே திரும்பத் தள்ளிவிட்டார்கள். அரை மணி கழித்துத் திரும்பவும் முயற்சி செய்து பற்களை ரொம்பச் சிரமப்பட்டு வெளியில் எடுத்து விட்டார்கள். பையன் பிழைத்து விட்டான். மறு நாள் வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். மருந்துகள் கொடுத்து ''இனி ஊருக்கு நீங்கள் போகலாம். நான்கு நாட்கள் நீராக ஆறிய ஆகாரம் கொடுங்கள்'' என்று சொல்லி டாக்டர்கள் அனுப்பினார்கள். காற்றுக் குழாயில் பற்கள் மாட்டிக் கொண்டு பையன் இறந்து விடுவான் என்ற பயத்தினால் உடம்பெல்லாம் ஜில்லிட்டுப் போய்ப் பிரமை பிடித்து உட்கார்ந்து கொண்டிருந்த எங்களுக்கு நாலு மணி நேரம் கழிந்த பின் ஆபரேஷன் அறையிலிருந்து நடந்து வந்த மகனைப் பார்த்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஈடாக எதைச் சொல்ல முடியும்!

பற்கள் கட்டிக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும் என்ற நல்ல நோக்கத்துடன் இதை எழுதினேன்.

—லக்ஷ்மி ஸ்ரீனிவாஸன்

காமம் தொலைத்த ராமன்

ரா. கணபதி

[சென்றவாரத் தொடர்ச்சி]

அயோத்யாபுரியை வந்தடைந்தார் துளஸி.

ஸ்ரீராம மந்திரத்தை அடைந்தார்.

ஒரு புறம் ஜானகியும் மறுபுறம் இலக்குவனுமாக மந்தஹாஸ முகத்துடன் வீற்றிருந்தான் தசரத நந்தனன். மனித மனத்தைக் கண்ட கண்ட திசைகளில் தலைதெறிக்க இழுத்துச் செல்லும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஞானேந்திரியங்கள் ஐந்துமான பத்துப் புரவிகளை — தச அசுவங்களை — விவேகம் என்ற ரதத்தில் பூட்டிய தச — ரதனுகிய ஆன்மாவுக்கு ஆனந்தம்தரும் தசரத நந்தனன் அவன்! அவன் எதிரே இந்திரியங்களை எல்லாம் அடக்கிய ஜிதேந்திரியனுன மாருதி ஆனந்த வாரிதி சொரிந்து கொண்டு நிற்கிறன்.

வானரங்கள் உடல் நசைக்குப் பெயர் போனவை. சலனத்துக்கும் பெயர்போனவை. அதிலும் இவன் ஓயாமல் சலித்துக் கொண்டிருக்கும் வாயுவாம் மாருதத்தின் புத்திரன்— அதனுலேயே மாருதி! இத்தனை இயற்கையான இடையூறுகளையும் கடந்து பக்தியில் சலிக்காமல் நிற்கும் ஜிதேந்திரியன் அவன், நைஷ்டிக பிரம்மசாரி அவன்!

ஜானகி ராவணனுல் அபகரிக்கப்பட்ட பின் தாசரதி புலம்பியது கொஞ்ச நஞ்சமல்ல. விரகத் தீயில் ஏறக்குறைய பழைய துளஸி போலவே துடித்தான். அப்படிப்பட்டவன் லங்காபுரியில் ஜயராமனுகி வைதேஹியைப் பார்த்தபோது பாசம் என்பது அவன் உள்ளத்தில் அடியோடு நாசமாகி யிருந்தது. மாற்றுன் இல்லத்தில் பத்து மாதம் இருந்த மைதிலியிடம் 'என்னையன்றி வேறு எங்கு வேண்டுமானுலும் போ' என்று பசையின்றிக் கூறிஞன். அப்படி ராஜதர்மத்துக்காக அவனது சொந்த வாழ்வு பஸ்மமாகிப் பெண்ணுசை அறவே அற்றிருந்ததற்குக் காரணம் என்ன? இடைக்காலத்தில் ஆஞ்சநேய ஸ்வாமியின் பரிசயம் அவனுக்குக் கிட்டியது தானே என்று வியந்தார் துளஸி.

''ஹநுமந்த! மீண்டும் என் உள்ளம் பெண் மோகத்தில் மோசமடையாமல் விமோசனம் தருவாய்'' என்று அஞ்சனு புத்திரனை மனமுருகப் பிரார்த்தித்து, அவனுக்கே தொழும்பு பூண்டார் துளஸி.



ராம மந்திரத்திலிருந்து அவர் திரும்புகையில் மாருதியின் மாற்றுருவம் போன்ற நரஹரியானந்தரைக் கண்டார். 'ஹரி' என்றல் சிம்மம் என்று பொருள் கொண்டு, நரசிம்மத்தை நரஹரி என்பர். 'ஹரி' என்பது வானரத்தையும் குறிக்கும். நரஹரியானந்தர் துளஸியின் கண்களுக்கு அநுமனுகவேதான் தெரிந்தார்.

அவரை அடுத்து, ''எனக்கு நீரே குரு: உபதேசித்து அருளும்'' என வேண்டினர்.

தாஸனுக இருக்கவே ஆசைப்பட்ட மாருதி குரு ஸ்தானம் என்ற பெருமையை வகிக்க விரும்பவில்லை. ''உன் மனையாளே குரு: அடுத்தபடி உன் மனமே குரு'' என்று கூறி விடுவிடு என நடந்தார்.

அநாமதேயனுக வாழ விரும்பிய எளிய ஆஞ்சநேயன், துளஸி தம்மை அடையாளம் கண்டுகொள்ள அவகாசம் தராமலே வேகமாக நடையைக் கட்டினுன்.

ஆனுல் அவனது நடையைத் தடை செய்யும் ஒன்று அங்கு நிகழ்ந்தது. அருகே ஓரிடத்தில் ஸ்ரீமத் ராமாயண ப்ரவசனம் நடந்து கொண்டிருந்தது. ஐயன் சரிதை ஓதப்படும் இடம்தோறும் கண்ணீர் சொரிந்து நின்று கேட்பவன் அல்லவா மாருதி? எனவே கதை கேட்கும் அடியார் கணத்திடை புகுந்தார் நரஹரியானந்தர்.

ராமகதையில் அப்படி இயல்பாகக் கவர்ந்திழுக்கப்பட்ட நரஹரியானந்தர் அநுமனே

காந்திஜி விரும்பிய கீதம்

என்ற அநுமானம் துளஸிக்கு ஸ்திரமாயிற்று. நரஹரி புறப்பட்டார். இனி இவரை விட்டு விடக் கூடாது என்று அப்படியே தமது உத்தரீயத்தை வீசி நரஹரியைக் கட்டினுர் துளஸி.

அப்படியும் திமிறிக் கொண்டு நடந்தார் நரஹரி. உத்தரீயத்தின் மறு முனைகளைப் பற்றிக் கொண்டிருந்த துளஸி அவருடனேயே தரையில், கல்லிலும், முள்ளிலும் உருண்டு உருண்டு வந்தார்.

அப்போது ஏற்பட்ட ரத்தக் கசிவுகளின் மூலம் அவரது பண்டைய ரஜோ குண ப்ரவிருத்தி முற்றிலும் வெளியேறிவிட்டது.

ஆஞ்சநேயனின் நேயமான நெஞ்சில் ஈரம் செறிந்தது.

''குழந்தாய், உன்னை மிகவும் படுத்தி விட்டேன்'' என்று கூறித் துளஸியைத் தடவிக் கொடுத்தார். சஞ்சீவி பருவதத்தைக் கொண்டு வந்த மகா வீரனின் ஸ்பரிசமே மூலிகையாக இருந்தது.

அதற்கும் மேற்பட்ட மூலிகையாக ஆஞ்சநேயன் துளஸிக்கு ஸ்ரீராமன் மகிமையை உபதேசித்து, சாக்ஷாத் பிரபுவின் திவ்ய தரிசனத்தையும் கண் குளிர, அகம் குளிரச் செய்து வைத்தான்.

சீதையும், இலக்குவனும், பரதாழ்வாரும், சத்ருக்னனும் புடைசூழ நான்கு வேதங்களோடு கூடிய ஓங்காரம் போல ராகவன்

தரிசனம் தந்ததும் துளஸியின் உள்ளம் உருகியது. கள்ளம் கருகியது. அன்பு வெள்ளம் பெருகியது.

ராமன் அவர் அகத்தில் நிறைந்த கணமே காமம் என்பது அணுவளவும் மீதமின்றி பஸ்மீகரமாயிற்று.

தான் ராமனின் அடிமை என்ற ஒருணர்வு தவிர வேறு சிந்தை யேதும் அற்று பிரானின் திருவடிகளில் தண்டனிட்டு எழுந்தார். 'நான்' என்பது அடியோடு போய், அடிமை யாகிற தாஸத்வம் வந்தவுடன் வெறும் துளஸி, துளஸிதாஸராகிவிட்டார்!

எதிராளியை எதிர்பாராமல் தானே முத லில் பேசும் 'பூர்வபாஷி'யும், மெத்து மெத்து என்று மதுரமாக, மனோகரமாகப் பேசும் 'மிருதுபாஷி'யுமான ஸ்ரீ ராமசந்திரன் துளஸி தாஸரிடம் சொன்னான்:

''செல்வி மமதாவின் மனோரதம் இன்று பூர்த்தி ஆகும். நீ துளஸியாகவே ஆகவேண் டும், எனக்கு உடலால் துளஸி மாலை புனைந்து சூட்டி, வாக்கால் என்னைப் பற்றி மணம் கமழப் பேசி, மனத்தில் என் நினை வாகிற பிருந்தாவனத்தை நீ வளர்க்க வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள். துளஸி! வால்மீகரும், கம்பநாடனின் ராம காதையும் போல் நீ ஹிந்தி மொழியில் என் சரிதத்தை வழங்குவாய். அந்தச் சொன் மாலையே எனக்குத் திருத்துழாயாக இலங்கும்.''

துளஸிதாஸர் விம்மி விதிர்விதிர்த்தார். ''பிரபு! உன்னை எண்ணிய மாத்திரத்தில் சொல்லே குழன்று விடுகிறது. படிப்பேதும் இன்றி, உடலின்பம் ஒன்றிலேயே உழன்ற நான் எப்படி உன்னைப் பாடுவேன்?'' என்று மனம் உருகிக் கேட்டார்.

''சொல்லின் செல்வனும், நவ வியாகரண பண்டிதனுமான ஆஞ்சநேயன் அருள் இருக் கத் தயக்கமேன்?'' என்று வினவி மறைந் தான் பிரபு.

ஃ ஃ ஃ

புனித காசியை அடைந்தார் கோஸ்வாமி துளஸிதாஸர். காசியில் மரிப்போரின் வலக் காதில் விசுவேசுவரனே ஸ்ரீ ராம நாமத்தைக் கூறிப் பிறவிக் கடலிலிருந்து கடத்துவிக் கிறான், அல்லவா? எனவே அந்த திவ்ய க்ஷேத்திரத்தைச் சேர்ந்தார் துளஸி.

கங்கைக் கரையில் அமர்ந்தார்.

பலர் வந்து அவரைத் தொழுதனர்.

தொழாமலே அழுத கண்ணுடன் அவரை நோக்கி நின்றார் ஒரு பெரியவர். பதவியிலும் பெரியவர் அவர் என்பதை ஆடை அணிகள் தெரிவித்தன.

''தாங்கள் யார்? அழக் காரணம் என்ன?'' என்று பரிவுடன் வினவினார் கோஸ்வாமி துளஸி.

''நான் ... நான் ... ஆத்மாராமன்...'' என்று கூறி மேலே பேச முடியாமல் தொண்டை அடைக்க நிறுத்தினார் கிழவர்.

இளம்பிறைபோல் தண்ணென்று புன் னகை புரிந்து கொண்டார் துளஸிதாஸர்.

''ஆத்மானந்தத்திலேயே ரமிப்பவன் அல் லவா ஆத்மா ராமன்? தாங்கள் ஏன் கண் ணீர் விடவேண்டும்?'' என்றார்.

''இதுவும் ஒருகால் ஆனந்தபாஷ்பமாகவே இருக்கலாம். ஆனால் எனக்கு நிச்சயமாகச் சொல்லத் தெரியவில்லை. நான் ஏன் அழு கிறேன் என்றால் நீ... இல்லை நீங்கள்... என் மகன்...'' என்று தொடங்கினார் அந்தக் கிழவர்.

கதாநாயகர்களின் பிறப்பு மர்மம் வெளி யாகிறபோது வாசகர்களுக்கே பேரார்வம் உண்டாவதுண்டு. ஆனால் இங்கோ கதா நாயகருக்கே அவரது பிறப்பு மர்மம் வெளி யாகும்போது எவ்வித உணர்ச்சிக் கொந் தளிப்பும் உண்டாகவில்லை. அவரைப் பொறுத்தமட்டில் அவருக்குப் பிதா மட்டு மின்றி சகல பந்துக்களுமே ராமன்தான்— அவரது ஆவிக்குள் இன்பம் பாய்ச்சும் ஆத்மாராமன்தான்!

ஆயினும் அந்த வயோதிகரின் மனப் பளு குறைவதற்காக அவரை மேலும் பேச வைத்துக் கேட்கலானார் துளஸி.

முதியவர் மொழிவார்: ''நான் நீண்ட காலமாகப் பாதுஷாவின் பிரதான மந்திரி யாக இருந்து வருபவன். எனக்கு ஒரே மகனாக நீ பிறந்தாய். ஆனால் நீ மூல நட்சத் திரத்தில் பிறந்ததால் குடும்பத்தையே நிர் மூலமாக்க வந்தாயோ என உன்னிடம் வெறுப்புக் கொண்டேன். அதற்கேற்ப, நீ பிறந்த ஓரிரு தினங்களிலேயே உன் அன்னை மாண்டு போனாள். அதற்குப் பின் உன்னை ஒரு தாதியிடம் கொடுத்து வளர்க்கச் செய்து உன் தொடர்பை நான் நீக்கிவிட்டேன். அவ்வப்போது உன் செவிலித்தாயிடமிருந்து உன்னைப் பற்றிச் செய்தி வரும். அவளையே நீ உன் சொந்தத்தாயாக எண்ணி வந்தாய் என்றறிந்தேன். நாளா வட்டத்தில் நீ நல்ல வழிகளில் பழகவில்லை என்றும் காமுகனாக அலைகிறாய் என்றும் கேட்டேன். அதிலிருந்து உன்னைப் பற்றிய எண்ணத்தையே ஒழித்து விட்டேன். ஆனால் உன்னைப் பெறாத அந்தப் புண்ணியவதியான செவிலித் தாயோ நீ அவளை விட்டுப் பிரிந்து சென்ற பின்னும் உனக்காகக் கவலை கொண்டாள். நீ மனைவி வீடு சென்று அங்கிருந்து வேறு எங்கோ போய் விட்டதாக அறிந்து மனமுடைந்தாள். உன் இருப்பிடம் தெரியாமல் சில காலத்தில் உன் இளம் மனைவி மாண்டு போனாள். அதை அடுத்து உன் வளர்ப்புத் தாயும் இவ்வுலகை விட்டுப் போய்விட்டாள். நீ எப்படிப்பட்ட துராத்மாவாக இருந்தாலும், பரஸ்பரம் நீங்கள் இருவரும் தாயும் மகனுமாக இருந்த தால், உன் கையால் தனக்கு என்றும் தண் ணீரும் இறைக்க வேண்டும் என்ற ஆசை யைக் கூறிவிட்டு அவள் கண்ணை மூடினாள்.

''அதிலிருந்து எனக்குப் பாதுஷாவிடம் உள்ள செல்வாக்கை யெல்லாம் திரட்டி, உளவு நிபுணரைக் கொண்டு உன் இருப் பிடத்தைத் தேடித் தேடி அலைந்தேன். இன்று தான் கண்டேன்.

''ஒரு காலத்தில் உன்னை மகன் என்று சொல்லிக் கொள்ள நான் வெறுத்தேன். இன்று நீ என்னைத் தந்தை என்று சொல்லிக் கொள்வதற்கு வெறுக்கக் கூடிய நிலையில்...''

''ராம ராம'' என்று கூறிக் காதுகளைப் பொத்திக் கொண்டார் துளஸிதாஸர்.



திருமதி சியாமளா ராஜகோபால்

தோற்றம்: 4-1-1915
மறைவு : 4-8-1968

"தெய்வந் தொழாஅள் கொழுநன்
தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை."

அமைதியாக எழுந்து சென்று கங்கையில் மூழ்கி, செவிலித் தாய்க்கும், சத்ருவான தாரத்துக்கும் நீர்க்கடன் அளித்தார்.

''அவ்விருவருக்குக் கிடைத்த பாக்கியத்தை எனக்கும் அளிப்பாய், மகனே! பிதா என்ற முறையில் உன் பொருட்டு என் கடமையை ஆற்றவிடினும், நீ கருணையோடு எனக்குப் பிதிர்க் கடன் வழங்கி உய்வு தருவாய்!'' என்று வேண்டிக் கொண்டார் ஆத்மாராம்.

''மூலத்தில் பிறந்த உன்னால் நம் குலம் நிர்மூலமாகும் என எண்ணினேன். ஒரு விதத்தில் அது மெய்யாயிற்று. ஆனால் அதற்காக நான் வருந்தவில்லை. இதோ எனது இந்த அந்திம நேரத்தில் நான் செய்த வேதாப்பியாசத்தின் பலனும், தான தர்மத்தின் பலனும் என் அகக் கண்ணைத் திறந்து வைக்கின்றன. அதன் மூலம் அற்புதங்களை அறிகிறேன். மூலத்தில் பிறந்த உன்னோடு ராஜாப்பூர் நகரத்தைச் சேர்ந்த பராசர கோத்திர பிராமண பரம்பரை ஒன்று நிர்மூலமாயினும், நீயே உத்தர பாரதம் முழுவதற்கும் பக்தி விருக்ஷத்தின் ஜீவ மூலமாக-உயிர் தரும் வேராக — இருக்கப் போகிறாய் என்று காண்கிறேன்.''

நிறைந்த மனவெழுச்சியில் ஆத்மாராமின் நயனங்கள் மூடிக் கொண்டன.

அவை திறக்கவே யில்லை.

துளஸிதாஸரிடம் அவர் விரும்பிய பிதிர்க் கடன் அப்போதே அவருக்குக் கிடைத்து விட்டது.

கங்கா தீர்த்தத்தையே பார்த்துக் கொண்டிருந்தார் துளஸி. மரித்துப் போன எத்தனை எத்தனையோ ஆன்மாக்களுக்கு நிறைவு தருகிற நீர் அது! அது உதித்த ஸ்தானத்தின் விசேஷம்!

இவரது 'மூல'த்தைத் தந்தை கூறினார். இவரோ கங்காதேவியின் மூலஸ்தானத்தை தியானித்தார்.

மானஸ ஸரோவரம் என்கிற தூய திருப் பொய்கையிலிருந்துதான் கங்கா தேவி பிறக்கிறாள்! மனுஷ்யர் கை படாத தெளிந்த திரு நீர் மானஸம். அலை எழாத அடங்கிய ஸரஸ் அது!

அதைச் சிந்தித்த துளஸியின் உள்ளமும் மானஸமாகவே தூய்மையாக, தெளிவாக, நிச்சலனமாக ஆயிற்று.

உடனே அதில் ஆஞ்சநேயனின் அருள் பிரதிபலிக்கத் தொடங்கியது. அடுக்கடுக்காக ஸ்ரீமத் ராமாயணக் காட்சிகள் துளஸிதாஸரின் அகப் பொய்கையில் நடந்தேறின. பொய்கை அமிருதமாயிற்று. ராம அமிருதமாயிற்று.

துளஸியின் வாக்கும் மாருதியின் அனுக்கிரகத்தில் அமிருதமாயிற்று. உள்ளே கண்ட அமைதியான ராம சரித மானஸம் வெளியே கங்கையாக அலை அடித்துக் கொண்டு காவிய ரூபம் பெற்றது.

இந்தக் காவிய கங்கை பெருகத் தொடங்கியது விக்கிரம சகாப்தம் 1631ல் ஸ்ரீராம நவமி தினத்தில் என்பர். அன்றிலிருந்து சுமார் நானூறு ஆண்டுகளாக உத்தர பாரத மெங்கணும் வேதமாக விளங்கி வருகிறது



பேச்சுத் துணை!

''பணம் பேசறதும், பேசறது''ன்னு நீங்க அடிக்கடி சொல்லுவீர்களே, நிஜமாகவா?''

''நிஜம்தான்!''

''அப்படீன்னா தினமும் ஆபீசுக்குப் போகச்சே கொஞ்சம் பணம் கொடுத்துட்டுப் போங்க. பேச்சுத் துணைக்கு.'' - சீதா

துளஸிதாஸரின் ஹிந்தி ராமாயணம்—''ராம சரித மானஸம்.''

துளஸிதாஸரின் பெருமை அவர் எந்த வறட்டுச் சித்தாந்தத்தையும் சேராததுதான்: மாருதியின் அருள் எப்படியெல்லாம் வளர்த்ததோ அப்படியெல்லாம் வளைந்து நெகிழ்ந்து வளர்ந்தார் துளஸி.

அவர் ராம சரிதத்தைக் கூறியதால் விஷ்ணு பரத்துவத்துக்கு வாதப் போர் புரியவில்லை. தமது ராமாயண மாளிகையின் படிக்கட்டுகளாக (ஸோபான்) அவர் அமைத்துள்ள ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் சிவபெருமானை வாயாரத் துதிக்கிறார். ''எனக்கு சிவனைப் போல் பிரியமானவர் வேறெவரும் இல்லை. சிவத்ரோகிகள் தம்மை எவ்வளவுதான் எனது பக்தர்களாகச் சொல்லிக் கொண்டாலும் உண்மையில் அவர்கள் கனவிலும் என்னை அடைய முடியாது. சிவனை மதிக்காமல் என்னிடம் பக்தி செய்ய விரும்பும் மூடர்கள் நரகமே செல்வர். என் பக்தன் என்று சொல்லிக் கொண்டு சிவத்வேஷம் செய்பவனும்; அதே போல் சிவபக்தன் என்று சொல்லிக் கொண்டு என்னை துவேஷிப்பவனும் — இருவருமே நரகத்தில் உழல வேண்டியதுதான்'' என்று ஓரிடத்தில் ராமனையே பேச வைக்கிறார், துளஸியாகிய சிவ — விஷ்ணு அத்வைதி. ஸ்ரீ பகவத்பாத சங்கரரின் ஜீவ — பிரம்ம அத்வைதத்தையும் அங்கங்கே கோடி காட்டுகிறார். எல்லாத் தத்துவங்களுக்கும் பிறப்பிடமான மானஸ ஸரோவரம் அல்லவா அவரது உள்ளமும், அதில் உதித்த காவிய உரையும்?

ஃ ஃ ஃ

வேட்கை என்கிற தாகத்தை நீக்க துறவி தான் தூய வைஷ்ணவன் என்று 'வைஷ்ணவ ஜனதோ' பாடல் கூறுகிறது. புலன்களின் தேட்டத்தைத் தாகம் (த்ருஷ்ணா) என்கிறார் பாடலைத் தந்த நரஸி மேதா. பெண் இன்பம் என்கிற தீராத தாகத்தில் தவித்த துளஸியின் துறவை இந்த வைணவ இலக்கணத்துக்கு இலக்கியமாக அளிக்கிறார் கனு தேசாய்.

தாகம் தீர்ப்பது பொய்கை. துளஸிதாஸர், ராமகாதை என்ற மெய்ப் பொருள் தத்துவமாகிற பொய்கையில் — ராம சரித மானஸத்தில் — முழுகிய ஹம்ஸம் அல்லவா?



யார் ஐயா சொன்னது?

மூதந்தன்

சாதாரணமாக வாழ்க்கை வரலாறுகள் படிக்கச் சுவையற்றனவாய் இருக்கும் என்றுதான் நான் இதுவரை நம்பிக் கொண்டிருந்தேன். அந்த நம்பிக்கையைத் தகர்த்தெறியும் வகையில் சமீபத்தில் ஒரு வாழ்க்கை வரலாறு படித்தேன். அந்த வரலாற்றுக்குரியவரான தணிகாசலம் பள்ளிப் பருவம் முதல் இன்று வரையில் என் நண்பர். எனவே, அவருடைய வாழ்க்கையில் பல சம்பவங்கள் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அவற்றையே புத்தகத்தில் படித்ததும் எனக்கு ஏற்பட்ட ஆச்சரியத்துக்கு அளவே யில்லை.

நண்பர் தணிகாசலத்தின் வாழ்க்கைச் சம்பவங்கள் சிலவற்றையும், வரலாற்று ஆசிரியர் அவற்றை எப்படிக் குறிப்பிட்டிருக்கிறார் என்பதையும் கீழே தந்திருக்கிறேன்.

உண்மையில் நடந்தது:

1. தணிகாசலத்துக்கு ஆறு வயதாக இருக்கும் போது வழக்கப்படி அவன் ஒரு நாள் மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துப்போனான். மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கும் போது ஒரு குச்சு நாய் அவனைக் குறி பார்த்துக் கொண்டு துரத்தி வரவும், அதைக் கண்டு பயந்து 'ஐயோ, செத்தேன்!' என்று கூச்சல் போட்டுக் கொண்டே பக்கத்திலிருந்த ஒரு மாமரத்தை நோக்கித் தாவினான் தணிகாசலம்.



2. அவனுக்கு அப்போது வயது பன்னிரண்டு. ஒரு நாள் மாலை பள்ளியிலிருந்து திரும்பும் போது அந்த ஊர் மசூதி வழியாக வந்து கொண்டிருந்தான். வெள்ளைப் புள்ளியும் கருப்புப் புள்ளியும் கலந்த மணிப்புறா ஒன்று மசூதிச் சுவரில் உட்கார்ந்து தானியத்தைக் கொறித்துக் கொண்டிருப்பதைக் கண்டவுடன், 'லபக்' கென்று அதைப் பிடித்து, வேட்டிக்குள் மறைத்து வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டான் தணிகாசலம்.



வாழ்க்கை வரலாற்றின்படி

1. ஆறும் வயதிலிருந்தே இவருடைய பொதுநலத் தொண்டு ஆரம்பமாகி விட்டதென்று கூறலாம். ஒரு நாள் இவர் தனிமையை நாடி (அப்போது முதலே சிந்திப்பதற்காகத் தனிமையை நாடிச் செல்வது இவரது வழக்கம் என்று அறிந்தேன்.) ஊரின் புறத்தேயுள்ள ஓரிடத்துக்குச் செல்லவும் அப்போது அவ்வூர்வாசிகளுக்கு நெடு நாட்களாகத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த ஓர் ஓநாய் சிந்தனை வயப்பட்டிருந்த இவர் மீது பாய்ந்தது. அஞ்சா நெஞ்சினரான இவர் தம் கையில் வைத்திருந்த குறுந்தடி ஒன்றின் உதவி கொண்டு அந்த ஓநாயைக் கொன்று தீர்த்தார். அதுவும் ஒரே அடியில்! ஊர் மக்கள் அனைவரும் இவருடைய வீரத்தைப் போற்றி, 'ஓநாயின் தொல்லை நீங்கியது' என நிம்மதியாக வாழத் தொடங்கினார்கள்.



2. தணிகாசலம் அப்போது பன்னிரண்டே பிராயத்தினர். அந்த வயதிலும் அவர் மனத்தில் கருணையானது காட்டாற்று வெள்ளம் போல் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. ஒரு சமயம் பள்ளி வாசலைச் சேர்ந்த மணிப்புறா ஒன்றைக் கழுகு ஒன்று குறி பார்த்துப் பாய்ந்த போது தம்முடைய உயிரையும் பொருட்படுத்தாமல் உயரமான சுவரின் மீது தான் ஏறி, புறாவை மீட்டு, தம் வேட்டிக்குள்



மருதியைச் சேர்ந்த அலாவுதீன் சாஹிபு எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் மேற்படி புறாவைத் திருப்பித் தர மறுத்து விட்டதால் அவனுக்குப் 'புறாத் திருடி' என்ற புனைபெயரும் அப்போது முதல் ஏற்பட்டு வழங்கலாயிற்று.

3. அப்போது நான்காம் பாரம் படித்துக் கொண்டிருந்தான் தனிகாசலம். படிப்போ ஏறவில்லை. அவனுடைய நாட்டமெல்லாம் வேறு எங்கோ இருந்தது. ஒரு நாடகம், நாட்டியம், சினிமா விடமாட்டான். நடிகர்கள் யாராவது அந்த ஊருக்கு வருகிறார்கள் என்றால் அவர்கள் புறப்பட்டுப் போகும் வரையில் அவர்கள் தங்கியிருக்கும் விடுதி வாசலிலேயே பழி கிடப்பான். இறுதிப் பரீட்சையின்போது ஒரு நாள் இப்படித் தவம் கிடந்துவிட்டு அரை மணி நேரம் கழித்துப் போனான். அவனிடம் கணித வினாத் தாள் கொடுக்கப்பட்டது. அதை அப்படியே விடைத் தாளில் எழுதிக் கொடுத்து விட்டு அடுத்த கால் மணிக்கெல்லாம் பள்ளியை விட்டு வெளியேறினான் தனிகாசலம்.




4. சிவகாமி என்றொரு பெண். எடையைக் குறைத்துப் போட்டு ஏமாற்றுவதில் கைதேர்ந்த ஏகாம்பரம் என்கிற மளிகைக் கடைக்காரர் மகள் அவள். அரும்பு மீசை இளைஞனான தனிகாசலத்துக்கு அவள் மீது 'காதல்' ஏற்பட்டது. பலவிதங்களில் முயன்று பார்த்தான். முதலில் அவளுக்குக் கடிதம் எழுதினான். அவற்றைக் கசக்கி அவன் முகத்திலேயே விட்டெறிந்தாள் சிவகாமி. தெருவிலே அவளைச் சந்திக்கும் போது பேச்சுக் கொடுத்துக் கன்னத்தில் அறை வாங்கிக் கொண்டான். பிறகு நண்பனைத் தூது விட்டான். ஏகாம்பரம் கொடுத்த உதையில் தூது போனவன் நேரே ஆஸ்பத்திரியைத்தேடிக்கொண்டு போனான், பல் கட்டிக் கொள்வதற்காக. கடைசியில் வேறு வழியின்றி, ஏகாம்பரத்தின் மளிகைக் கடையிலேயே இலவசமாகப் பொட்டலம் கட்டிக் கொடுக்க முன் வந்தான் தனிகாசலம். 'தன்னைவிடத் தனிகாசலம் ஏமாற்று வித்தைகளில் தேர்ச்சி பெற்றிருந்ததைக் கண்டு, இப்படிப்பட்ட ஆளை நாம் கட்டாயம் வளைத்துப் போட்டாக வேண்டும்' என்ற எண்ணத்துடன், ஏகாம்பரம் தம் மகள் சிவகாமியை அவனுக்கே மணம் செய்து கொடுக்க



மறைத்து வீடு கொண்டு வந்து சேர்த்து விட்டார். ஏமாற்றமடைந்த கழுகு அதற்குப் பிறகு இவரை எங்கு கண்டாலும் தன் கூரிய அலகினால் கொத்தித் துன்புறுத்தத் தொடங்கியது. ஒரு புறாவுக்காக இத்தகைய கஷ்டங்களை மேற்கொண்ட இவரை, 'புறா காத்த புண்ணியவான்' என்று அந்த ஊர்க்காரர்கள் கொண்டாடத் தலைப்பட்டார்கள்.

3. ஏட்டுப் படிப்பில் என்றுமே இவர் மனம் சென்றதில்லை. உலக அறிவு பெற வேண்டுமென இவருடைய உள்ளம் துடித்தது. அதைத் தேடி அலைந்தார். கலை ஆர்வம் மிகுந்தவராய், ரசிகராய் விளங்கினார். இறுதிப் பரீட்சையும்வந்தது. எல்லோரையும் கலங்க வைக்கும் கணிதப் பரீட்சைக்கு அரை மணி நேரம் கழித்துச் சென்றாலும் அடுத்த கால் மணி நேரத்துக்குள்ளேயே ஆசிரியர்கள் அனைவரும் மூக்கில் விரல் வைக்கும்படி விடைத் தாளில் எழுதிக் கொடுத்துவிட்டு வெளியேறினார் நம் அரும் பெரும் தலைவர் தனிகாசலம் அவர்கள்.



4. குமரப் பருவத்தில் அடியெடுத்து வைத்ததுமே இவரது வாழ்க்கையிலும் காதல் அரும்பியது. நேர்மையையும், நாணயத்தையும் தராசின் இரு தட்டுகள் போலப் பாவித்து வந்த வணிகப் பெருமகனார் ஒருவரின் மகள்பால் இவரது மனம் சென்று லயித்தது. ஆனால், சிவகாமி என்ற பெயர் கொண்ட அவ்வம்மையாரோ இவரை உடனே ஏற்றுக்கொள்ளாமல் பல சோதனைகளை நடத்திப் பார்த்தார்கள். அவற்றிலெல்லாம் வெற்றி கண்டு அன்னாரின் தந்தையின் ஆசியும் பாராட்டும் பெற்று அம்மையாரின் கரம் பற்றினார் நம் தலைவர் பெருந்தகை அவர்கள்.



5. திருமணமான பிறகு தணிகாசலம் சிறிது காலத்துக்குப் பண்ட் ஆபீஸ் ஒன்றில் வேலை பார்த்து வந்தான். சிறு வயதிலிருந்தே நேர்மைக்கும் அவனுக்கும் வெகு தூரமானதால், அந்தச் சுபாவத்தையொட்டி பண்ட் ஆபீஸ் பணத்திலும் கை வைத்து விட்டான். பத்தாயிரம் ரூபாய் வரையில் பம்பாய் அல்வா கணக்காக விழுங்கி விட்டான். நிர்வாகிகள் போலீசில் புகார் செய்தார்கள். விசாரணை நடந்து, அவன் ஜெயிலுக்குப் போக வேண்டிய கட்டமும் வந்து விட்டது. நல்ல வேளையாக மாமனாரின் குறுக்கீட்டால், மனைவியின் நகைகளை விற்றுப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி ஏற்பாடாகியது. அவனுக்குக் கொடுப்பதற்கிருந்த 'கிராஜுவிடி' தொகையையும் பிடித்துக் கொண்டு நிர்வாகிகள் அவனை வெளியே அனுப்பி வைத்தார்கள்.

5. பிறர் துன்பம் கண்டு மனம் நெகிழும் உயர் பண்பாளர் நம் தலைவர் என்று முன்பே கூறினோம். அதற்கு இதோ இன்னுமோர் எடுத்துக்காட்டு.

ஒரு பண்ட் ஆபீஸில் நம் தலைவர் பணி புரிந்து வந்தபோது அவருடைய சக ஊழியர்களில் ஒருவர் பெருந் தொகை யொன்றைக் கையாடல் செய்து விட்டார். நிர்வாகிகள் போலீஸில் புகார் செய்து அந்த நபரைச் சிறைக்கு அனுப்பவும் முன்வந்து விட்டார்கள். இந்தச் சமயத்தில் தலைவரவர்கள் குறுக்கிட்டுக் குற்றவாளிக்குப் பதிலாகத் தாமே இந்தப் பணத்தைக் கட்டுவதாகவும் குற்றவாளி மீது கருணை காட்ட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். அதன்படியே தம் அருமை மனைவியாரின் நகைகளை விற்று அந்தக் கடனைத் தீர்த்தார். அந்தத் தொகையும் போதாமல் போகவே தாம் வேலையை விட்டு விலகுவதாகக் கூறித் தமக்குக் கிடைக்கவிருக்கும் 'கிராஜுவிடி' பணத்தையும் ஈடுசெய்து கொள்ளும்படி சொல்லி விட்டு வெளியே வந்தார். என்னே அவருடைய கருணை உள்ளம்! என்னே அவருடைய பெருந் தன்மையான போக்கு!

யார் ஐயா சொன்னது, வாழ்க்கை வரலாறுகள் சுவையற்றவை என்று?

'நூபுர'த்தின் நாதம்!

எல்லாத் துறைகளிலும் கலப்படம்தானே மலிந்து கிடக்கின்றது? பரத நாட்டியம் மட்டும் விலக்கா என்ன? சுத்தமான கலப்படமற்ற பரத நாட்டியத்தை எங்கே காண முடிகிறது என்று எண்ணுபவர்களுக்கு, ''இதோ இங்கே காணுங்கள்'' என்று சொல்லுவது போல இருந்தது குமாரி கமலினி நாகராஜனின் பரத நாட்டிய நிகழ்ச்சி. சமீபத்தில் நடந்த இவருடைய நாட்டிய நிகழ்ச்சி ரம்யமாகவும் குளிர்ச்சியாகவும், கலையம்சம் நிரம்பியும் இருந்தது.



அலாரிப்பு தொடக்கத்திலிருந்து ''நீநாம ரூப முலகு'' வரையிலும் - மங்களத்துக்குக்கூட அடவுகளும் நட்டு அபிநயங்களும் பிடித்துக் காட்டினர். ரசிக்கும்படியான நிகழ்ச்சி. ஆனந்தபைரவியில் அமைந்த ஸ்வர ஜதியும் யமன் கல்யாணி ''கிருஷ்ணா நீ'' என்ற கிருதியும் மிக உயர்தரமான வகையில் நாட்டியத்தில் உருப்பெற்று வெளி வந்தன. 'தெருவில் வாரானோ' என்ற பரத நாட்டியத்துக்கே அமைந்த உருப்படி அபிநயங்கள் குறைவாக இருந்தாலும் மிகப் பொருத்தமாகவும் கண்ணியமாகவும் இருந்தன. தந்தோனா தில்லானாவில் ஜதிகளின் நடனச் சிறப்பும், ஆண்டாள் திருக் கல்யாணத்தின் அபிநய உணர்வும் பாராட்டும் வண்ணம் இருந்தன.

எல்லா நடனங்களும் மத்திம கால பிரமாணத்திலேயே இருந்தமையாலும், கவனத்தை ஈர்க்கும் புறக் கவர்ச்சி அம்சங்கள் இல்லாததாலும் ஜதிகளையும் அபிநயங்களையும் ரசிக்க முழு அவகாசம் இருந்தது. பரத நாட்டியத்தின் சாஸ்திரிய சம்பிரதாயத்தை வழுவாது அனுசரிக்கும் பெரியவர், நட்டுவனார் சிக்கில் ராமசுவாமி பிள்ளையிடம் சுமார் பதினைந்து ஆண்டுகள் பரதம் பயின்று புதுதில்லியில் ''நூபுர'' என்ற நடனப் பள்ளியை வைத்து ஐந்து ஆண்டுகளாக நடத்தி வரும் குமாரி கமலினி, தில்லியில் பல நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்திப் புகழ் பெற்றிருப்பதுடன், வடக்கத்திய பெண்கள், தில்லிவாழ் அயல் நாட்டுப் பெண்கள் பலருக்கும் பரத நாட்டியத்தைப் பயிலுவித்து நமது கலைச் செல்வத்தை மற்றவர்களுக்கும் வாரி வழங்கிக் கொண்டு வருகிறார். பி. ஏ. ஹானர்ஸ் படித்துக் கொண்டிருக்கும் குமாரி கமலினியின் பரதக் கலை புதுதில்லி சூழ்நிலையில் மேலும் மேலும் சோபித்து மேல் நாடுகளுக்கும் செல்ல வாய்ப்பு உள்ளது. தமிழர்கள் பெருமைப்படலாம்.

- எம். எஸ். சிவஸ்வாமி

இரவிலே கடுமையாகும் இருமலை நிறுத்த அதிகச் சக்தி வாய்ந்த மருந்து!



இருமலைக் கட்டுப்படுத்தும் கேந்திரம் சிலிர்க்கிறது



ஃபார்முலா 44 இருமலைக் கட்டுப்படுத்தும் கேந்திரத்திற்கு இதமளிக்கிறது



இருமல் தொடங்கும் கட்டுப்பாட்டுக் கேந்திரத்திலேயே உடனடியாகவும், அதிக சக்தியுடனும் செயல் புரிகிறது விக்ஸ் ஃபார்முலா 44. எனவே உங்கள் இருமல் நின்று விடுகிறது.

அதேசமயம், இந்த கனிவான இருமல் மிக்சரில் சேர்ந்துள்ள மருந்துப்பொருள்கள் உள்ளே ஊடுருவி, சுவாசக் குழாய்களின் அடைப்பை நீக்குகின்றன. வலிதரும் மார்புச் சளியை அகற்றி தொண்டை எரிச்சலுக்கும் இதமளிக்கின்றன.

அதிகச் சக்தி வாய்ந்த விக்ஸ் ஃபார்முலா 44 அருந்தி இரவில் கடுமையாகும் இருமலிலிருந்து விரைவிலே நிச்சயமான நிவாரணம் பெறுங்கள். அயர்ந்த உறக்கமும் உங்களுக்குக் கிடைக்கும்.

விக்ஸ் ஃபார்முலா 44 கஃப் மிக்சர்

சைச்

ஜலத்தை ஜலத்தால் எடுக்கலாம்!



நீங்கள் குளிக்கும்போது உங்கள் காதில் நீர் புகுந்துவிட்டால் அவதிப்படுகிறீர்கள் அல்லவா? கவலைப்படாதீர்கள். பின்வருமாறு செய்யுங்கள்: ஜலம் புகுந்த காது மேல் நோக்கி இருக்கத் தலையைப் பக்கவாட்டில் சாய்த்துக் கொள்ளுங்கள். ஒரு கையால் நீங்களாகவோ அல்லது மற்றவரின் உதவி கொண்டோ சிறிது ஜலத்தை எடுத்து அந்தக் காதில் விடுங்கள். பிறகு கையால் காதைப் பொத்திக்கொண்டு குலுக்குங்கள். இரண்டு நிமிடங்கள் கழித்துக் காதைக் கீழ்ப்பக்கமாகச் சாய்க்கவும். புது ஜலத்தோடு உட்புகுந்த பழைய நீரும் வெளிவந்து விடும்! தொல்லை நீங்கிய மகிழ்ச்சி ஏற்படும்!

அனுபவப்பட்டவர்: சுதாகரன்


அவனுக்கென்ன.....?



இஸ்ரேல் படை வீரன் ஒருவனுக்கு ஏதாவது வீரச் செயல் செய்தால் பத்து நாள் லீவு தருவதாகச் சொன்னார் தளபதி. அன்று மாலையே அவன் ஒரு அராபிய டாங்கியை ஓட்டிக் கொண்டு முகாமுக்கு வந்தான். அதை மெச்சிய தளபதி சொன்னபடியே லீவு கொடுத்தார். மாலையில் அந்த வீரன் நண்பனிடம் சொன்னது:

"நமது டாங்கி ஒன்றை ஓட்டிச் சென்ற ஓர் அராபிய வீரனைச் சந்தித்தேன். அவனுடைய டாங்கி ஒன்றைப் பதிலுக்குக் கொண்டு வந்து கொடுத்தான். அவனுக்கும் லீவு கிடைத்திருக்கும்."

மாணிக்-முத்து



நாளுக்கு நாள் புதுமை என்பது கடைச் சரக்காக மலிந்துவிட்ட இந்தக் காலத்தில் திருமணத் தம்பதிகளை, 'பூவும் மணமும் போல, நகமும் சதையும் போல,' என்று பத்தாம் பசலி முறையில் வாழ்த்துவதை விட்டு விட்டு, இனிக் கீழ்க்கண்ட முறையில் புதுமையாக, புரட்சிகரமாக வாழ்த்தலாமே!

'அரசியல்வாதியும் சுயநலமும் போல'

'மாணவனும் கிளர்ச்சியும் போல'

'தொழிலாளியும் வேலை நிறுத்தமும் போல'

'எம். எல். ஏ.யும் கட்சி மாறுதலும் போல'

-வாழ்த்துபவர்: சிவசக்தி



லைப்ரரியில் வெகு நேரமாக ஏதோ புத்தகம் ஒன்றைத் தேடிக் கொண்டிருந்த ஒரு பெண்ணிடம் லைப்ரேரியன், "என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"இதோ, இந்தப் புடவைக்கும், சோளிக்கும் 'மாச்' ஆகும்படியா அட்டை போட்ட புத்தகம் ஒண்ணு வேணும். கிடைக்கலில்லே!"

தகவல்: ரமணன்''



''ஒரு பெண் ஆணைக் கவர்ந்தால் அவள் கவர்ச்சியாக இருக்கிறாள். பெண்ணைக் கவர்ந்தால் ஸ்டைலாக இருக்கிறாள். எல்லோரையுமே கவர்ந்தால் அவள் அழகாக இருக்கிறாள்.'' - மாஜினி

தகவல்: ''ரமன்''



ஒருவர்: கிளி ஒண்ணு பிடிச்சிருக்கேன், பார்த்தீங்களா.....?

மற்றவர்: ஹூம்! உங்களுக்கே காக்காய் பிடிச்சு அலுத்துப் போச்சு போலிருக்கு?

-- சுதாகரன்


சாதாரண ஜலதோஷம் சிலரை உடனே பற்றிக் கொள்ளுகிறது. மற்றவர்களைப் பற்றுவதில்லை. ஏன் ?



சாதாரண ஜலதோஷத்தால் எளிதில் பாதிக்கப்படுதல் மற்றும் இதர உடற்பிணிகள், அதாவது பசியின்மை, சோர்வு, சருமம் மற்றும் பற் கோளாறுகள் இவற்றிற்கு காரணம், விட்டமின்கள் மற்றும் தாதுச் சத்துக்களின் பற்றாக்குறையாக இருக்கக்கூடும். எனவே, போதிய அளவு விட்டமின்களும் தாதுச் சத்துக்களும் உங்கள் உடலுக்கு ஒழுங்காகக் கிடைப்பதற்காக நீங்கள் நாள்தோறும் ஒரு விம்க்ரான் சாப்பிடுங்கள். விம்க்ரானில் 11 அத்தியாவசிய விட்டமின்களும், 8 முக்கியமான மினரல்களும் அடங்கியுள்ளன. அதனால் உங்களுக்கு ஆரோக்கியம், வலிமை, ஆற்றல், மற்றும் நோய்களை எதிர்க்கும் சக்தி கிடைக்கும்.

விம்க்ரான்®

மல்டிபிள் விட்டமின்-மினரல் டேப்லெட்டுகள்





நாள் முழுவதும் உங்களை சக்தியுடன் வைத்திருக்க ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை போதுமானது.

® இ. ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்ப்பரேட்டின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்கைக் குறிக்கிறது. சாராபாய் கெமிகல்ஸ் பிரைவேட் லி... இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்

சாராபாய் SARABHAI CHEMICALS

Shilpi SC 4A/80 Tam

படித்துப் பாருங்கள்

ஆஸ்திக சமாஜ மலர்

ஆஸ்திகம் தழைக்க வேண்டுமானால், அதன் அடிப்படைத் தத்துவமான தெய்வ நம்பிக்கை வளர வேண்டும்; தெய்வ நம்பிக்கை வளர வேண்டுமானால், நன்னெறிப் பிரசாரமும், புராணப் பிரவசனங்களும் வளர வேண்டும்; இவைகளையெல்லாம் சிரத்தையாக வளர்க்க நல்ல தொண்டு மனப்பான்மையும், செல்வாக்கும், செயலாற்றும் திறனும் உள்ள நல்ல மனிதர்கள் வேண்டும். அப்படிப்பட்ட மனிதர்களுள் ஒருவர்தான் திரு எஸ். ஜி. ரத்தினம் அய்யர் அவர்கள். ஆஸ்திக மனப்பான்மையும், அனைவரிடத்திலும் அன்பாய்ப் பழகும் அபூர்வப் பண்பும் கொண்ட அவர் நிறுவிய இந்த ஆஸ்திக சமாஜம் பக்தி நெறி தழைக்க அரும் பெரும் தொண்டாற்றியிருக்கிறது. அத்தொண்டின் சிறப்பினை விண்டுரைக்கும் வாயிலாக இவ்வாண்டு மலர் வெளியாகியிருக்கிறது.

முதல் எடுப்பிலேயே காஞ்சி முனிவரின் கருணை வாசகங்களும், அம்முனிபுங்கவரின் அருள் ததும்பும் திருவுருவமும், ஆண்டு மலருக்குத் தெய்வ மணம் ஊட்டி விடுகின்றன. தீராத வினைகளையெல்லாம் தீர்த்து வைக்கும் திருவேங்கடமுடையானின் திருவுருவம் ஓவியர் 'சில்பி'யின் கைவண்ணத்தில் உருவாகிப் பரவசமூட்டுகிறது. ஆங்கிலத்திலும், தமிழிலும் வேதாந்தக் கருத்துக்களையும், சமயக் கோட்பாடுகளையும், பக்தி நெறியையும் விளக்கும் பல பெரியோர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் மலரின் மதிப்பையும் பக்தி மணத்தையும் உயர்த்துகின்றன. அவ்வளவு கட்டுரைகளும் கருத்துக் கருவூலங்கள்.

ஆஸ்திக சமாஜத்தின் இந்த ஆண்டு மலரில் சேர்க்கப்பட்டிருக்கும் ஸ்தோத்திரங்கள் பக்தி உள்ளம் படைத்த ஆஸ்திகப் பெருமக்களுக்குப் பெரிதும் பயன்தரக் கூடியவைகளாகும். சிவ சிவாஷ்டகம்,— விநாயகர் அகவல், சண்முக கவசம், இடையூறு களையும் அந்தாதி வெண்பா முதலிய பல தோத்திர நூல்களைச் சிரத்தையோடு பாராயணம் பண்ணும் ஆஸ்திக அன்பர்கள் முக்தி நிலையை அடைவதற்குப் பக்தி நெறியைக் கடைப்பிடிப்பதுதான் சாலச் சிறந்த உபாயம் என்பதை எளிதில் உணர்ந்து கொள்ளுவார்கள்.

ஆஸ்திக சமாஜம் நிர்வாகக் குழுவினர்களில் பல பொறுப்பான பெரிய மனிதர்கள் இடம் பெற்றிருப்பது சமாஜம் மேலும் மேலும் வளர்ந்து ஆஸ்திக உலகுக்கு அருந்தொண்டாற்றி வரும் என்பதற்குச் சான்று பகர்கிறது.

ஆஸ்திக சமாஜம், வீனஸ் காலனி, ஆழ்வார்பேட்டை, சென்னை — 18.

காந்தி வட்டம்

காந்தி சதாப்தி ஆண்டிலே காந்திய தத்துவங்களை எடுத்து இயம்பவென்றே ஒரு பத்திரிகையை வெளியிடும் பெருமையைத் தமிழ் நாடு அடைந்திருக்கிறது. இதற்குக் காரணம் தொழில் அதிபரும், இலக்கிய அன்பரும், காந்தீயவாதியுமான திரு நா. மகாலிங்கம் அவர்கள். அவரைக் காப்பாளராகக் கொண்டு பிரசுரமாகி வருகிறது காந்தி வட்டம் என்ற பத்திரிகை. டாக்டர் ஜாகிர் ஹுசேன், கே. எம். முன்ஷி, அமரர் கல்கி, சங்கரராவ் தேவ் என்று இப்படிப் பல காந்தி பக்தர்களின் கட்டுரைகளைத் தொகுத்துத் தரும் காந்தி வட்டத்தின் ஆசிரியராக திரு கே. ராமமூர்த்தி தொண்டாற்றி வருகிறார்.

கிடைக்குமிடம்: 9, கிருஷ்ணசாமி தெரு, அபிராமபுரம், சென்னை-18. தனிப் பிரதி விலை 20 காசு.

பாட்டிலே காந்தி கதை

காந்தீயக் கொள்கைகளைக் காற்றிலே பறக்க விட்டு விட்டு அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவோர் நாடாள்வதை நோக்குகையில் காந்தீயத்துக்கு இந்நாட்டில் புனர்வாழ்வு எதிர்காலத்தில்தான் தோன்ற வேண்டும் என்ற எண்ணம் பல சந்தர்ப்பங்களில் நமக்கு ஏற்படுவது இயற்கையே. எதிர்காலத் தலைவர்களாக இன்றையக் குழந்தைகள் காந்தீயத்தை நன்கு பதிய வைத்துக் கொள்ள ''பாட்டிலே காந்தி கதை'' என்ற இந்த நூல் பெரிதும் உதவும். ஆகவே காந்தி சதாப்தி ஆண்டில் காந்தீயக் கொள்கைகளைக் கூறும் அல்லது விளக்கும் எத்தனையோ பல புத்தகங்கள் வெளியாகி யுள்ள போதிலும் அவற்றுள் பாட்டிலே காந்தி கதை என்ற இந்த நூல் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா எழுதிய இந்தக் கவிதை நூலின் சுருக்கம் முன்பு கல்கியில் வெளியானபோதே பல ஆயிரக் கணக்கான குழந்தைகள் படித்து மகிழ்ந்தனர். இப்போது பாட்டிலே காந்தி கதையை முழுமையாகப் புத்தக வடிவிலே பெற்றுப் படிக்கும் வாய்ப்பு சிறுவர் சிறுமியருக்குக் கிட்டியிருக்கிறது.

காந்திக்கு நண்பர்கள் ஒரு தேநீர் விருந்து அளித்தனர். இதற்கு காந்தி நன்றி கூற எண்ணினார். நன்றியுரையைத் தயாரித்தார். நாலே வரிகள்தான் எழுதினார். ஆனால் அதைப் படிக்க முடிந்ததா?

காகிதம் தன்னை எடுத்ததுமே – அவர்
கைகள் இரண்டும் நடுங்கினவே
வேகமாய் வார்த்தைகள் வந்தனவா?-இல்லை?
வேர்வை உடம்பை நனைத்ததுவே!

இப்படி அவதிப்பட்ட காந்தி பிற்காலத்தில் என்ன செய்தார்?

நண்பர்கள் மத்தியில் பேசிடவே – அன்று
நடுங்கித் தவித்திட்ட காந்தி மகான்
அன்னியரும் மிகப் போற்றிடவே – பல
ஆயிரங் கூட்டத்தில் பேசிவிட்டார்!

இந்த விதமாக உன்னதக் கருத்துக்களைக் கோடி காட்டும் சுவையான நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றுள்ளன. இந்தப் புத்தகத்தில். பக்கத்துக்குப் பக்கம் படங்கள்; குண்டு குண்டான எழுத்துக்கள். வளமான தமிழ். ஆனால் வள்ளியப்பா வழங்கும் எளிய தமிழ்.

கிடைக்குமிடம்: பாரி நிலையம்; 59, பிராட்வே, சென்னை–1. விலை ரூ. 3-50.

பாலன் பெருமூச்சு விட்டான்!

ஒட்டுத் திண்ணையில் ஒட்டாமல் கிடந்த சிறிய தாள்கள் சிதறின. பெருமூச்சு அல்லவா?

அவனுக்கு மூளை மரத்து விட்டாற்போல் ஓர் உணர்வு பரவத் தொடங்கியது. மண்டையை இரு கைகளாலும் பற்றிக் கொண்டான்; பிறகு அதே கைகளால் தடவிக்கொண்டான். மூளை இருக்கிறதா என்று சோதித்துக் கொள்ளவா? — ஊஹூம்! அவனுக்குத் தம் பேரில் இருந்த நம்பிக்கையைக் காட்டிலும் தன்னுடைய மூளை மீது அபார நம்பிக்கை. ஆகவே, அவன் அவ்வாறு மண்டையைப் போட்டு, அதாவது, மண்டையைப் பிடித்து உருட்டிக் கொண்டதற்குக் காரணம் இருக்கத்தான் இருந்தது. அந்தக் காரணம், கேவலம், ஒரு சின்னஞ் சிறு தாள்மீது விதியாக மாயம் புரிந்தது. அவன் இப்போது தனக்குத்தானே சிரித்துக்கொள்ள ஆரம்பித்தான்.

ஆனால், ஒரு ரகசியம்! — அவன் இப்படிச் செய்ததற்காக — அதாவது, தனக்குள் தானே சிரித்துக் கொண்டதற்காக, அவன் ஒரு ஞானி என்றோ, அல்லது ஒரு பித்துக்குளி என்றோ பொருள் அல்ல! 'கேவலம், ஒரு சின்னத் தாளா?... சே, அப்படி நினைக்கலாமா? ஒன்னு, இரண்டா? ரூபாய் ஐம்பதினாயிரத்தைக் கொடுக்கிறதுக்காகக் காத்துக்கிட்டிருக்கிற தெய்வமாச்சே அது?...'

கால்களை மாற்றிப் போட்டுக் கொள்ள வேண்டியவன் ஆனான் பாலன். கால்கள் மரத்துவிட்டால் அவன்தான் என்ன செய்வான், பாவம்! பாவத்தைக் கண்டானா, இல்லை, புண்ணியத்தைக் கண்டானா? என்னவோ நிமிர்ந்து உட்கார்ந்தான். இப்போது அவன் மூளையும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டதை உணரலானான். 'ஆல்ரைட்!... மனமா?... மனச்சாட்சியா?... இப்போது எதை செலக்ட் பண்றது?' மகத்தான பற்றுடன் நெஞ்சைப் பற்றிக் கொண்டான். அவ்வளவுதான். 'மனம்' என்றது ஒரு குரல். உடனே சபலம் வாயைப் பிளந்தது. மறுவினாடி, 'மனச்சாட்சி' என்று இன்னொரு குரல் ஓடிவந்தது. உடனே சலனம் பிறந்தது. 'சே!... கொஞ்ச நஞ்சம் தெளிவிருக்கிற மூளைகூட என்னோட ஆராய்ச்சிக்குப் பயந்து ஆவியாகிப் போயிடும் போலிருக்கே?' இமைகள் துடித்தன. எதையோ தேடினான் பாலன். தேடிய பொருள் கிட்டியது. ரூபாய் ஐம்பதினாயிரத்துக்கு அடியில் அவன் தேடிய அப்பொருள் 'சிவனே' என்று கிடந்தது. எடுத்தான். இனம் புரியாததொரு வெறி உணர்ச்சியுடன் புகை புறப்பட்டது.

''அரிசி கிடைச்சுட்டுதுங்க, அத்தான்!'' என்று வாய் கொள்ளாமல் சிரித்தவாறு அங்கு பிரசன்னமானாள் கண்ணம்மா.

மனித் துறவு

புதுவை மறைநாயகன்



அவள் தெய்வமா? — அல்ல, அல்லவே அல்ல! — அவள் கண்ணம்மா! — பாலனின் கண்ணம்மா!

மனைவி கொடுத்த நல்வாக்கு பாலனின் மனத்தில் பால் வார்த்திருக்க வேண்டும். 'தெய்வம்னு ஒண்ணு இல்லாமல் இல்லே!' நினைத்தபோது ஏக்கமும் துணுக்கமும் ஏற்பட்டன.

புடவைத் தலைப்பால் மூடி இடுப்பில் வைத்திருந்த பையைக் கிழிசலை ஒதுக்கிக் கீழே வைத்தாள் கண்ணம்மா. நிமிர்ந்தபோது புடவை முந்தானை சிர்ப்பட்டது. மஞ்சள் கயிற்றில் ஊசலாடிய 'தாலிப்' பொட்டு மின்னியது.

அவள் கண்களைத் தாழ்த்தினாள். கவலை நிற்கவில்லை. திடுதிப்பென்று 'ஆ!' என்று பதறினாள். அவளுடைய பதற்றத்துக்குப் பயந்தா அந்தச் சிகரெட்டுத் துண்டு கீழே விழுந்தது? ஊஹும்!

''குமார் அழுதானா, அத்தான்?''

''என்ன?... ம்... இல்லே...அழல்லே!''

தடுமாறினான் பாலன். 'குமாரோட ஞாபகம் சுத்தமா இல்லாமல் போயிடுத்தே?... சே!.. முதல்லே, இன்னொரு இந்தப் போட்டிப் பைத்தியத்துக்கு முழுக்குப் போட்டாகணும். நாளைக்கு விடிஞ்சதும், அறந்தாங்கிக்குப் போய் அந்த மளிகைக் கடைக் கணக்கு வேலையை ஒத்துக்கிட வேணும். இனியும் காலம் தாழ்த்தினால், அப்புறம் நம்ம மானம் கப்பலேறிடும்!'. நினைவுகள் ஒரே திசையில், ஒரே கதியில் ஓடிக்கொண்டிருக்கையில், திடீரென்று தடம் மாறித் திரும்பி, அந்தத் தாளில் ஒட்டிக் கொண்டன. 'மனமா?... இல்லே, மனச்சாட்சியா?' - என்று - அவன் மீண்டும் தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

கணவனது நிலையைக் கண்ட கண்ணம்மா வேதனையை மறைக்க விரும்பாமல் சிரித்தாள்.

''அத்தான்! உங்க கையிலே எந்த ஒரு தாக்கலையும் சொல்றதுக்குக் கூட பயமாயிருக்குங்க. நாம மெட்ராஸிலே எவ்வளவோ மானமா வாழ்ந்தோம்; நிம்மதியாய்க் காலம் ஓடிச்சு. பிரஸ் முதலாளி ஏதோ ஒரு 'மூட்'லே உங்களைக் கோபிச்சுக்கிட்டதுக்கோசரம், அந்தக் காஷியர் வேலையை நீங்களும் என்னமோ ஒரு 'மூட்'லே உதறிட்டு வந்திட்டீங்க. இதுவரைக்கும் உங்க பிறந்த மண்ணிலே, நம்மோட கஷ்டம் மூணுபேருக்குத் தெரியாதபடி இந்த மூணு மாசமாய் வாழ்ந்திட்டோம்; மானமாய்க் காலத்தைத் தள்ளிப்பிட்டோம். இன்னிக்குத்தான் அரிசி கடன் வாங்க நேரிட்டுச்சு. என்னவோ ஒரு பொய்யை நிஜம் போலத் தோணும்படி பேசிச் சமாளிச்சுட்டேன். குழந்தை குமாருக்குப் பசும் பால் வாங்கின வகையிலே உள்ள இரண்டு வாரப் பாக்கி ரூபாய் இரண்டுக்கு இன்னும் கொஞ்ச நாழிகையிலே வந்திடப்போகுது சடையன் மகள். இனிமேலும் நீங்க இந்தச் சனியனைக் கட்டி அழுதுக்கிட்டு, மூளையையும் குழப்பிக்கிட்டு இருக்கிறதிலே அர்த்தமே கிடையாதுங்க! நாளைக்கு நாம பாயசம் சாப்பிட்டுப்பிடலாம்னு அசட்டுத் தைரியத்தோட இருக்கிறதைப் பார்க்கிலும் இன்னிக்குப் பட்டினி பசியோட இல்லாமல் இருந்தால் தேவலாமேன்னு கௌரவமா தைரியத்தோட ஆகவேண்டியதைக் கவனிக்கிறதுதானுங்களே நல்லது? உங்களுக்குச் சொல்லித் தர்றதுக்கு எனக்கு வயசு போதாது. அப்படிச் சொல்லித் தாரதாக என்னை நீங்க தவறாகவும் எடுத்துக்கிடாதீங்க. நொந்த மனசிலே ஓடினதைச் சொல்றேனுங்க. அவ்வளவுதான்!...ம்.!.. அத்தான், உடனே அறந்தாங்கி வேலையை ஒப்புக்கொள்ளுங்க. நாம பசியை அறிஞ்சவங்க; பழகிக்கிட்டோம். பாவம், நம்ம மாதிரி நம்ப செல்வத்தையும் பழகிக்கச் செஞ்சுடப்படாதுங்க, அத்தான்!...''

பாலன் உணர்ச்சி வசப்பட்டுச் செருமத் தொடங்கினான்.

''அத்தான்!...'' கண்ணம்மாளும் செருமினாள். முகத்தைத் துடைத்துக் கொண்டாள். மூக்குத்தித் துவாரங்கள் துல்லியமாகத் தெரிந்தன. சுருட்டை முடிகளைக் கோதி விட்டாள். ரப்பர் வளையல்கள் சோர்ந்து விறந்தன.

மனைவியை நிமிர்ந்து பார்த்தான். இனம் புரியாததோர் அச்சம் ஆதார சுருதி கூட்டியது. ''கண்ணம்மா! நீ என்னுடை உயிர். குமார் நம்மோட உயிருக்கு உயிர். இது சினிமா டயலாக் இல்லே. நம்பு. நீ நம்புவாய். தெரியும். காலம்பற அறந்தாங்கிக்குப் போய் வேலை பார்க்கணும்னு என்னுடை மனச்சாட்சி எனக்குக் கட்டளை போட்டுடுச்சு. நீ கண்ணைத் துடைச்சுக்க. உன் பேச்சை நான் தட்டுவேனா?...ம்...கண்ணைத் துடைச்சுக்கிட்டு, குமாரை உசிப்பி, பால் கலக்கிக் கொடுத்திட்டு, சமையலைக் கவனி. ரொம்பக் களைப்பாய் இருக்கு!''

தொண்டை கனத்தது. பழக்க தோஷத்தினால், அவன் தன் மணிக்கட்டைப் பார்த்தான். மணிக்கட்டு பத்திரமாகவே இருந்தது. ஆகவே காய்ந்த வெய்யிலைக் கவனித்தான். 'ஓ மை காட்! மணி பன்னெண்டு ஆகியிருக்கும் போலத் தோணுது. கட்டு எடுக்கிற நேரம் நெருங்கிடுச்சே?... என்ட்ரி ஃபாரம் அனுப்பறதுக்கு இன்னிக்குத்தான் கடைசி நாள்!... என்னவோ ஒரு புது டெஸ்ட்!... ம்... அது என்னை டெஸ்ட் பண்ணுது!....'

கண்ணம்மா நடைக்குப் போய்விட்டாள்.

அந்த 'என்ட்ரி பார'த்தைப் பாலன் கையிலெடுத்தான். ஒரே ஒரு கட்டத்தைத் தவிர்த்து, ஏனைய கட்டங்களெல்லாம் நிரப்பப்பட்டிருந்தன. சில கட்டங்களிலுள்ள சொற்கள் பேனாவினால் அடிக்கப்பட்டன. வேறு சில அடிக்கப்படாமல் இருந்தன. 'மனம், மனச்சாட்சி' என்ற அவ்விரு சொற்களை ஏந்திய ஒரேயோர் இடம் மட்டிலும்தான் காலியாகக் காட்சி யளித்தது. நுழைவுக் கட்டணம் ரூபாய் ஒன்றுக்குப் பூர்த்தி செய்து வைத்திருந்த மணியார்டர் பாரம் அவன் பார்வையில் தட்டுப்படத் தவறவில்லை.

பாலன் நுழைவுத் தாளைப் புரட்டினான்: நுழைவுக் கட்டணம் ஒவ்வொரு கூப்பனுக்கும் ஒவ்வொரு ரூபாய் என்று கண்டிருந்ததைக் கண்டான். அதிர்ச்சி அவனுடன் பழகிய விஷயந்தான்! — ஒரேயொரு கூப்பன்தான் அனுப்பப் போகிறான். தேவை ஒரே ரூபாய்தான்!... மணியார்டர் கமிஷனுக்கு ஒரு காசு இரண்டு காசுகளைத் தேடிப் பொறுக்கி விடலாம்! பணம்... ரூபாய் ஒன்றுக்கு வழி?...

வேர்வை ஓடியது.

நினைவு திரும்பியது. பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலி இடம் அவன் நினைவில் சுழன்றது. ''மானத்தைக் காக்க வல்லது மனம் — மனச்சாட்சி!''

அவன் ஆராய்ந்தான். 'மானத்தைக் காத்துக்கிட மனமும் முக்கியந்தான்; மனச்சாட்சியும் முக்கியம்தான். அதுதான் தெரியுதே?... ஆனா, ரெண்டிலே ஒண்ணை இப்போ நாம் முடிவு பண்ணியாகவேணும். மனம் மனச்சாட்சி என்கிற இந்த இரண்டு வார்த்தைகளில் 'மனச்சாட்சி'தான் சரியின்னு தோணுது மனசிலே. ஆனா, எவனாவது 'பர்வர்ட்டட் ஜீனியஸ்' குதர்க்கமாக 'மனம்' அப்படின்னு எழுதி வச்சிருந்தான்னா, என்ன செய்யிறதாம்?... அப்படித்தானே பழைய சொல்யூஷனிலே நாலைஞ்சு வார்த்தைகள் விடையாய் வந்திட்டுது!... ம்... ஆல்ரைட்!' அவன் நுழைவுத் தாளை எடுத்து 'மனச்சாட்சி' என்ற வார்த்தையை ஆவேசம் மூள அழுத்தமாக அடித்தான்.

வேர்வையைத் துடைத்து விட நேரம் இல்லை. மணியார்டர் பாரத்தை எடுத்தான் பாலன். ஒரு ரூபாய் பணம் வேண்டுமே?— வழி?....

ஒரு யோசனை ஓடியது. 'பாலுக்குக் கொடுக்கிறதுக்காக கைமாற்று வாங்கி வந்து வைச்சிருக்கிற ரெண்டு ரூபாயிலே இப்போது ஒரு ரூபாயை அவசரத்துக்கு உபயோகப்படுத்திக் கிட்டால் என்ன? மிச்சம் இருக்கிற ஒரு ரூபாயை இப்போது பாலுக்குக் கொடுத்திட்டு, பாக்கியுள்ள ஒரு ரூபாயை நாளைக்குக் கெடு வைச்சுக் கொடுத்திடலாமே!...' அவன் எண்ணத்தின் சூடு ஆறவில்லை!

அதற்குள் சடையன் மகள் வந்து நின்றுவிட்டாள். ''பால் பணப் பாக்கியை வாங்கி யாரச் சொல்லுச்சு எங்க அப்பன்!... இன்னிக்கும் கெடு வச்சாக்க, இனிமே பால் தர முடியாதுன்னும் கண்டிச்சுச் சொல்லிப்பிடச் சொல்லிடுச்சுங்க, ஐயா!'' என்றாள்.

பாலனுக்கு அஸ்தியில் ஜுரம் கண்டது. 'முருகா!' — அவனுக்கு மூளை வலித்தது. 'ம்!' என்று பெருமூச்செறிந்தான். ''எம்மா எவ்வளவு பணம் தரணும்?'' என்று கம்பீரமாகக் கேட்டான்.

''ஒரு வாரப் பணம் ஒரு ரூபாயுங்க!'' என்றாள் சிறுமி.

பாலனின் முகம் திடீரென்று தெளிவு கண்டது. 'முருகா!... ஆல்ரைட்!... ஒரு ரூபாய்னு மறந்திட்டுச் சொல்லுது இந்தப் பொண்ணு. பேஷ்! கைமாற்று வாங்கியாந்த



ரெண்டு ரூபாயிலே, இது கிட்டே ஒரு ரூபாயைக் கொடுத்திட்டு, மிச்சமிருக்கிற ஒரு ரூபாயை மணியார்டர் செய்ய வச்சுக்கிட வேண்டியதுதான்! ஒரு கடைசி முயற்சிக்கு வழி கிடைச்சுட்டுது!... ஓ. கே!' நினைவு துரித வண்டியாக ஓடியது. எழுந்தான். திரும்பினான்.

கண்ணம்மா வழியில் நின்றாள். இடுப்பில் இருந்த குழந்தை குமார் 'அப்பா!' பாட்டுப் பாடிய வண்ணம் 'தரிசனம்' கொடுத்தான். ஆஹா! எவ்வளவு அழகாக — கள்ளங் கவடு இல்லாமல் இருக்கிறான் குமார்!...

ஓர் அரைக் கணம் கண்களை இறுக மூடிக் கொண்டான் பாலன். வேர்வை ஆறாகப் பெருகியது. விழிகளைத் திறந்தான். கசிந்தன. மெய் சிலிர்த்தது. கையிலிருந்த ஒரு ரூபாய் தாளைப் பார்த்தான். பிறகு மடியில் ஒளித்து வைத்திருந்த மற்றொரு ஒரு ரூபாய் நோட்டையும் எடுத்தான். ''இந்தாம்மா. உங்களுக்குத் தர வேண்டியது ரெண்டு வாரப் பணம் — ரெண்டு ரூபாய்!... நீ மறந்திட்டே. மறந்திடாமல், பத்திரமாய் உங்க அப்பா கையிலே கொண்டு போய்க் கொடுத்திடு!'' என்று உணர்ச்சி வசப்பட்டுச் சொல்லி, இரண்டு ரூபாய்ப் பணத்தை அச்சிறுமியிடம் ஒப்படைத்தான். பிறகு பேனாவை வேகமாக எடுத்தான். 'மனச்சாட்சி' என்ற வார்த்தையை அடித்திருந்தான் அல்லவா?— அதை 'டிக்' மார்க் செய்துவிட்டு, 'மனம்' என்ற சொல்லைப் புதிய ஆவேசம் மூள, அடிக்கத் தொடங்கினான் பாலன்.

குமார் சிரித்தான்!

தெய்வம் சிரித்ததா?

அந்த நுழைவுத் தாளின் தலைப்பில் ஒயில் காட்டிய 'ஐம்பதினாயிரம் ரூபாய்' என்ற எழுத்துக்களை ஒரு மெய்யான யோகியின் மனயைத்தோடு, மன சுத்தத்தோடு, மனத் துறவோடு இப்போது பார்த்துக் கொண்டேயிருந்தான் பாலன்!

காஞ்சனாவுக்கு கார்டியன் தேவையில்லை



— கே. பி. நீலமணி —

"டிரிங்...டிரிங்..."

"யெஸ்... ஸ்பீக்கிங். மாமாதான் பேசறேன். இம்... ம்... சொல்லுங்கோ. ஆ.... செட்டெல்லாம் ரெடியா இருக்கா... ம், எல்லோரும் எதிர்பார்த்திண்டிருக்காங்களா? சரி... சரி... இதோ பாப்பா வெளியிலே யிருந்து வந்தாச்சு; இன்னும் பதினைஞ்சு நிமிஷத்திலே ஸ்டுடியோவிலே இருப்போம். ஓ !... நோ மென்ஷன்...."

"டொக் !"

ரிஸீவரைக் கீழே வைத்து விட்டுத் திரும்பினார் மாமா. அருகில் காஞ்சனா — பாப்பா என்று மாமா செல்லமாக அழைக்கும் பிரபல நடிகை காஞ்சனா — அவரையே கோபமாகப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தாள்.

"என்ன பாப்பா இப்படி என்னையே முறைக்கப் பார்த்திண்டிருக்கே?" — காரணத்தைப் புரிந்து கொண்டே தெரியாதவர் போல் கேட்டார் மாமா. காஞ்சனாவின் பார்வையிலே இலேசான கடுமை மின்னியது.

"என்னாலே வேறே என்ன செய்ய முடியும்? வர வர உங்க போக்கே எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கல்லே மாமா !"

"இப்ப என்ன நடந்திடுத்து. இவ்வளவு கோவிச்சுக்கறே பாப்பா ?"

"இன்னும் என்ன நடக்கணும்கிறீங்க ? ஒன்பது மணி ஷூட்டிங்குக்கு, ஒன்பதரை மணி வரை நான் வீட்டிலேயே இருந்தால் என்ன அர்த்தம்? நான் எட்டே முக்காலுக்கே ரெடியாயிட்டேன். நீங்க எங்கேயோ வண்டியை எடுத்துண்டு போயிட்டு இப்ப வர்றீங்க ? எனக்காகக் காத்திருக்கிறதா ஸ்டுடியோவிலிருந்து போன் வருது."

"வரட்டுமே. இப்படிப் பத்து போன் வந்து காக்க வெச்சுப் போனாத்தான் கண்டவுடனே உபசாரம் பிரமாதமாயிருக்கும்; நமக்கும் கௌரவம்."

"மண்ணாங்கட்டி. நேரத்துக்கு வராத நடிகைன்னு கெட்ட பெயர் தான் வரப்போகுது. இப்பவே எக்ஸ்ட்ராக்கள்ளாம் என்னை ஒரு மாதிரியாப் பார்க்கிறாங்க...."

"பார்க்கட்டுமே. அப்படிப் பார்க்கிறதினாலேதான் அவங்க எக்ஸ்ட்ராவாவே இருக்காங்க" என்று மாமா புது வியாக்கியானம் செய்து கொண்டிருந்த போதே, "இப்படி எல்லாத்துக்கும் ஏதாவது பேசிக்கிட்டே இருங்க. நாளைக்கு மார்க்கெட் போனப் புறம் தான் உங்களுக்கு உறைக்கப் போகுது" என்றாள் கவலையோடு கைக் கடிகாரத்தைப் பார்த்தபடியே.

"மார்க்கெட்டாவது, போறதாவது பாப்பா. நிச்சயம் இந்தச் சினிமா உலகம் இருக்கிற வரை மார்க்கெட் உண்டு. கவலைப் படாதே" என்று கையில் அழகியதொரு வெள்ளி வெற்றிலைப் பெட்டியுடன், இலேசாக 'ஸ்வாக்' பூசிய சில்க் ஜிப்பா இளங் காற்றில் நெளிந்து மணம் பரப்ப, காவியேறிய பற்கள் இங்குமங்குமாய்த் தெரியச் சிரித்தபடியே காரின் முன் ஸீட்டில் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

காஞ்சனா பளிச்சென்று குறுக்கிட்டு, "நான் சினிமா உலகத்தோட மார்க்கெட்டைச் சொல்லலே, மாமா ! என்னுடைய மார்க்கெட்டைப் பற்றிச் சொல்றேன்" என்று கூறி விட்டுக் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். கார் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

இப்படி ஓடுகிற சொகுசு வண்டியில், சிரித்துக் கொண்டே செல்கிற விதத்தில் காஞ்சனாவின் அடிநாட்கள் அமையவில்லை. வறுமையிலும், வேதனையிலும்தான் அவள் வாழ்க்கையைத் தொடங்கினாள்.

சிறு வயதிலேயே தந்தையையும், அதன் பிறகு பதினெட்டாவது வயதில் அது வரை வளர்த்து ஆளாக்கிய அருமை அன்னையையும் இழந்து நின்ற போதுதான், இவ்வுலகில் தான் ஓர் அநாதை, தனக்கு யாருமில்லை என்பது காஞ்சனாவுக்குப் புரிந்தது. ஆம்! அதுவரை — எப்போதாவது வந்து போய்க் கொண்டிருந்த தூரத்து உறவினர்கள், தாயின் மரணத்துக்குப் பிறகு அவளை அறவே மறந்து விட்டனர்.

அதற்கு மேல் அந்தக் கிராமத்தில் இருக்கவே காஞ்சனாவுக்குப் பிடிக்கவில்லை. மனமொடிந்த — நிலையில் சென்னையை நாடி வந்தபோதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.



கையில் ஒரு துணி மூட்டையுடன், காஞ்சனா எழும்பூர் நிலையத்தில் ரயிலை விட்டு இறங்கி வரும் போதே, அதிர்ஷ்டம் அவளுக்காகக் கைகட்டிக் காத்திருந்தது என்று சொல்லலாம். அல்லது பிரபல டைரக்டரும் படத் தயாரிப்பாளருமான ஆர். எஸ். யோகியின் காமிராக் கண்களில் காஞ்சனா பட்டாள் என்று கூறலாம்.

யாரையோ வரவேற்க வந்து, ஏமாற்றத்துடன் திரும்ப இருந்த யோகி, காரிலிருந்தபடியே காஞ்சனாவைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பருவம் கொழிக்கும் வயது. எந்தக் கோணத்துக்கும் ஏற்றதான எடுப்பான முகத் தோற்றம். கட்டுக்கடங்காத இருள் போன்ற கூந்தல். காலை இளஞ்சூரியனது பொன்னிறக் கிரணங்கள் படிந்து தங்கமென மின்னும்; இளமையும், கவர்ச்சியும் பூத்துக் குலுங்கும் மேனி அழகு. வெள்ளி மதுக் கிண்ணத்தில் மிதக்கும் கறுப்புத் திராட்சையைப் போன்ற கண்கள். போதையூட்டுவது போன்ற அவற்றின் வசீகரப் பார்வை — இவை அனைத்தும் காந்தம் போல் அவரைக் கவர்ந்தன.

எங்கே போவது என்று புரியாமல், குறுக்கும் நெடுக்கும் போகிற டாக்ஸிகளையும், பஸ்களையும் வெறிக்கப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த காஞ்சனாவின் அருகில், அன்னம் போல் அசைந்து வந்த யோகியாரின் கார் மெல்ல நின்றது.

காஞ்சனா ஒருகணம் திடுக்கிட்டுப் போனாள்—மோதுவதுபோல் அருகில் வந்து நின்ற காரையும், "உங்களுக்கு எங்கேயம்மா, போக வேண்டும்?" என்று கனிவுடன் வினவிய யோகியாரின் குரலையும் கேட்டு.

பிடிபட்ட பட்டாம் பூச்சியைப் போல், அவளது இமைகள் படபடத்தன. அஞ்சனம் தீட்டாத விழிகளில், மிரட்சி புரண்டோடியது. சொற்கள் நெஞ்சக் குழிக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தன. நாணத்தாலும், அளவுக்கு மீறிய கூச்சத்தாலும், நாக்குச் செத்து விட்டாற் போல் பேச்சு வரவில்லை. மேலும் அவரது கேள்விக்கு என்ன பதில் கூறுவது — அது அவளுக்கே தெரியாதே! ஆனாலும் —

பார்வையின் தவிப்பிலிருந்தே அவளது வாழ்வின் தவிப்பை எடை போட்டுவிட்டார், யோகியார். பழுத்த அனுபவஸ்தர் அல்லவா அவர்?

மீண்டும் ஒரு முறை அதே கேள்வியைத் திரும்பக் கேட்டு, அதைப் பற்றிய பதிலுக்காகவே யோசித்துக் கொண்டிருந்த காஞ்சனாவின் சிந்தனையைக் கலைத்தார். அவள் மௌனமாக அவர் பக்கம் திரும்பினாள். யோகியார் பரிவோடு கேட்டார்: "பட்டணத்திலே உங்களுக்கு யாராவது உறவினர்கள் இருக்கிறார்களா?"

"இருக்காங்க. ஆனா அவங்களையெல்லாம் இந்த நிலையிலே பார்க்க விரும்பல்லே." மிகவும் தயங்கியபடியே அவள் அதைக் கூறி முடிப்பதற்குள், துயரத்தால் குரல் தழு தழுத்தது. ஆர். எஸ். யோகியின் முகம் மலர்ந்தது.

"கவலையை விடுங்கள். சீக்கிரமே அவர்கள் உங்களைத் தேடி வந்து பார்க்கிற நிலைமைக்கு வரப் போகிறீர்கள்" என்று ஸ்டியரிங்கைப் பிடித்தபடியே காரின் பின் கதவைத் திறந்து விட்டார்.

காஞ்சனா ஒரு முறை அந்தப் பெரியாரின் முகத்தைத் தீர்க்கமாகப் பார்த்தாள். அதில் ஒரு தந்தையின் பரிவும், அன்பின் அரவணைப்பும் இருந்தன. மறு வார்த்தை பேசாமல், ஏதோ ஒரு நம்பிக்கையில் காரில் ஏறி உட்கார்ந்து விட்டாள்.

வழி முழுவதும் டைரக்டர் காஞ்சனாவின் எதிர்கால வாழ்க்கைக்கான தமது எண்ணத்தை — இட்டத்தை எடுத்துக் கூறினார். படத் தொழிலில் நடிப்பது பற்றிய அவளது கருத்தைக் கேட்டார். அவள் மறுக்கவில்லை. அதன் பிறகு —

டைரக்டர் யோகி அப்போது தயாரித்துக் கொண்டிருந்த தம்முடைய ஒரு புராணப்

படத்துக்கு, புது முகம் காஞ்சனாவையே துணிந்து கதாநாயகியாகப் போட்டுப் படம் எடுத்தார். தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிகளில் எடுக்கப்பட்ட அந்தப் படம் யோகியாருக்கு அமோக வெற்றியையும் லாபத்தையும் ஈட்டிக் கொடுத்ததோடு, காஞ்சனாவையும் எடுப்பிலேயே நட்சத்திரப் பதவிக்கு உயர்த்தி விட்டது.

பின்னர், அடுக்கடுக்கான படங்களில், பற்பல டைரக்டர்கள், புதிய புதிய தயாரிப்பாளர்களின் கீழெல்லாம் நடிக்க எண்ணற்ற ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

திறமையும், அத்துடன் இயற்கையிலேயே அடக்கமும் பணிவும் கொண்டிருந்த காஞ்சனாவுக்குத் திரை உலகில் விரைவிலேயே ஒரு நிரந்தரமான ஸ்தானம் ஏற்பட்டு விட்டது. இந்தச் சமயத்தில்தான் —

திருச்சியிலிருந்த மாமாவும் மாமியும் எப்படியோ அவளுடைய விலாசத்தைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்து விட்டார்கள். அன்று வந்தவர்கள் அதன் பிறகு அந்த இடத்தை விட்டு நகரவேயில்லை. மனைவியோடு மாமா அங்கேயே டேராப் போட்டு விட்டார். டைரக்டர் யோகியார் கூறியது காஞ்சனாவுக்கு நினைவுக்கு வந்தது.

மாமி மட்டும் எப்போதாவது நினைத்துக் கொண்டாற் போல், ''ஏன்னா... இப்படியே இங்கேயே இருந்துட்டா எப்படி? ஊருக்குப் போக வேணுமா ?'' என்று கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் மாமா அதையெல்லாம் கொஞ்சமும் லட்சியம் செய்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

'காஞ்சனாவைப் போல அழகும் இளமையும், பணமும் உள்ள சிறுசுகள் தருந்த துணையில்லாமெ பட்டணத்திலே தனியா இருக்கலாமா? யாராவது ஏமாத்தினாலும் போச்சு; இல்லே இவளா யார்கிட்டேயாவது கொஞ்சம் ஏமாந்தாலும் போச்சு. இப்படியெல்லாம் நேராமல் பார்த்துக்க, என்னைப் போல் அநுபவமுள்ள ஓர் ஆண் துணை இல்லாமெ இருந்தா எப்படி?' என்று தாம் அங்கே தங்கியிருப்பதன் — தங்கியிருக்க வேண்டியதின் அவசியத்தை—அவரே அடிக்கடி விளக்கிக் கூறிக் கொண்டிருப்பார்.

இதையெல்லாம் கேட்கும் போது காஞ்சனாவுக்கு உள்ளூறத் தாங்க முடியாத சிரிப்புத் தான் வரும்.

'மாமா, என்னைக் காப்பாத்திக்க, என் பொருளைப் பத்திரமாய்ப் பார்த்துக்க, எனக்குத் தெரியும். நீங்க வந்த வழியைப் பார்த்துண்டு போங்க" என்று சுலபமாகச் சொல்லி விடலாம்; சொல்லிவிட இயலும். ஆனால் காஞ்சனாவால் அப்படிக் கூற முடியவில்லை. அதற்கு அவளிடம் இயற்கையிலேயே உள்ள இரக்க குணம்தான் காரணம்.

ஆம்! அடி நாட்களில் தாயோடு சேர்ந்து கஷ்டப்படும்போது இவர்கள் எல்லாம் எங்கே போயிருந்தார்கள்? இப்போது காண்பிக்கும் இந்தப் பரிவு, கவலை, பொறுப்பு, எல்லாம் அப்போது எங்கேபோயிருந்தன?

இதைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல், அதையெல்லாம் மறந்து அல்லது மன்னித்துத்தான் அவர்களை ஏற்றுக்கொண்டாள். ஆனால் அந்த ஏற்புக்குப் பிறகு —

படிப்படியாக மாமா அந்த வீட்டில் தம்முடைய சர்வாதிகார ஆட்சியை ஸ்தாபித்துக் கொண்டு விட்டார்.

காஞ்சனாவைப் புதிய படங்களில் 'புக்' பண்ணுவது முதல், கால்ஷீட் கொடுப்பது வரை எல்லாம் — காஞ்சனாவின் நன்மையைக் கருதி மாமாவே தான் செய்து வந்தார். அன்னியர்கள் யாரும் காஞ்சனாவைச் சந்தித்துப் பேசி விட முடியாது. எவ்வளவு பெரிய கதாநாயகனானாலும் சரி, எத்தனை பிரபல நிருபரானாலும் சரிதான்; தலையெழுத்தே என்று முதலில் மாமாவைப் பேட்டி கண்டாக வேண்டும்.

இது ஒரு விதத்தில் காஞ்சனாவுக்கு உதவியாக இருந்தது. அநாவசியப் போட்டி தன் மாமாவைத் தாண்டி வராது. பட ஒப்பந்தத் தொகை விஷயமான பேரத்தையெல்லாம் அவரே படத்துக்குப் படம் சற்றுத் தாராளமாகக் கூட்டிப் பேசி வந்தார். இதனால் அவளுக்குக் கெட்ட பெயர் வராததோடு வரும்படியும் உயர்ந்தது. ஆகவே, மாமாவுக்கு முழு அதிகாரத்தையும் கொடுத்து விட்டுக் காஞ்சனா 'ஹாய்யா'க இருக்கத் தொடங்கி விட்டாள்.

நாளை எந்த ஸ்டுடியோவில், எந்தப் படத்துக்கு,

எப்போ கால்ஷீட், எந்தத் தேதியில் வெளிப் புற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண் டும் என்கிற விவரங்களை, முதல் நாளே மாமா அவனுக்கு விளக்கமாகக் கூறி விடுவார்.

ஆனால் அத்துடன் தம் பொறுப்பு முடிந்து விட்டதாகக் கருதுவதில்லை. எப் போதும் காஞ்சனாவுடன் துணைக்குப் போக அன்று ஷூட்டிங் ஆனாலும் சரிதான், மாமா தவறுவதில்லை. இந்த சமயத்தில்தான் அதாவது இப்படி மாமாவின் கண்காணிப் போடு, காஞ்சனா பத்திரமாய்ப் பெயரும் புகழுமாகத் தொழில் செய்து கொண் டிருந்த போதுதான் — அதிர்ச்சி தரும் அந்த முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது.

ஆம்! திடீரென்று ஒரு நாள், மாமா காணாமற் போய்விட்டார். தனியாகவல்ல; காஞ்சனாவின் கணக்கிலிருந்து ஐம்பதினாயிரம் ரூபாயுடனும், எக்ஸ்ட்ரா நடிகை லீலாவுட னும்தான் மாயமாய் மறைந்து விட்டிருந்தார்.

இந்தச் செய்தியை முதலில் அறிந்த காஞ்சனா அதிரவில்லை; மாறாக, பொங்கிவந்த சிரிப்பைத்தான் அவளால் அடக்க முடிய வில்லை. ஏனெனில், சமீப காலமாக மாமா வுக்குப் பால்யம் திரும்பிக் கொண்டு வரு வதை அவருடைய செய்கைகளிலிருந்து காஞ்சனா கவனித்தே வந்திருக்கிறாள். ஆனால் மாமிதான் இந்தச் செய்தியைக் கேட்டுப் பதறிப் போனாள். தலையிலும் முகத்திலும் அடித்துக் கொண்டு அழுதாள்.

''ஐயோ, காஞ்சனா! அநியாயமா என் தலையிலே இப்படிக் கல்லைத் தூக்கிப் போட் டுட்டுப் போயிட்டாரே! உன்னைக் கூடவே இருந்து காப்பாத்தலேன்னா கெட்டுப் போயிடுவேன்னு சொன்ன இந்தப் பாவி மனுஷனில்ல இப்போக் கெட்டுப் போயிட் டாரு! நான் என்னடி செய்வேன்?''

இப்படி வாய் ஓயாமல் புலம்பிக் கொண் டிருக்கும் மாமியைச் சமாதானப்படுத்துவதற் குள் காஞ்சனாவுக்குப் போதும் போது மென்றாகி விட்டது.

''அழாதீங்க மாமி. ஐம்பதினாயிரம் ரூபா யும், ஒரு எக்ஸ்ட்ராவும் ஆறு மாதத்துக்குக் கூட வராது. அப்புறமா என்னைப் பத்திர மாப் பாத்துக்க மாமா வந்துதானே ஆக ணும்?'' என்று ஆறுதல் கூறினாள். ஆனால்—

'மாமா இப்படி ஓடிப்போனதும், மாமி இங்கு உட்கார்ந்து ஒப்பாரி வைப்பதும், 'எல்லாம் முன்னேற்பாடு' என்பதை நடிப் பையே தொழிலாகக் கொண்ட காஞ்சனாவி னாலேயே கண்டுகொள்ள முடியவில்லையே. ஏமாந்து விட்டாளே. தன் கணவர் எத்தனை 'பெரிய கெட்டிக்காரர்' என்றுதான் மாமி உண்மையில் எண்ணி மனப்பால் குடித்துக் கொண்டிருந்தாள்.

தனக்காக லண்டனில் பணத்தோடு காத்துக் கொண்டிருக்கும் கணவனைக் காண மாமியின் மனம் இறக்கை கட்டிப் பறந்தது. காஞ்சனா வும் மாமியைத் தடுத்து நிறுத்தவில்லை. ஆனால் —



''நானு வருஷமா இந்த நாயை வளர்க் கிறேன். இன்னும் எஜமான் யார் என்று தெரியவில்லை இந்த நாய்க்கு!''

* *

—'மாமா காஞ்சனாவை மட்டும் ஏமாற்ற வில்லை; தன் கூட்டாளியான மனைவியையே ஏமாற்றிவிட்டு, உண்மையிலேயே அந்த எக்ஸ்ட்ரா ரேணுகாவுடன் விமானத்தில் பறந்து போய்விட்டார்' என்கிற விஷயம்— பாவம், மாமிக்கு ஊருக்குப் போயல்லவா புரியப் போகிறது. ஆனால்—

—''உறவு என்கிற உரிமையில், கார்டியன் என்கிற போர்வையில் புகுந்து, காஞ்சனாவின் பொருளை அபகரிக்கத் திட்டம் தீட்டிய மாமாவுக்கும் மாமிக்கும் —''நடிகை காஞ் சனா ஏமாறவில்லை; மனம் கெட்டுப் போன மாமாவுக்குப் புத்தி கற்பிக்கத் தனது சினே கிதையான அந்த எக்ஸ்டிராவை ஏற்பாடு செய்தவளே காஞ்சனாதான்'' — என்கிற உண்மை புரியக் கொஞ்ச நாளாவது வேண் டாமா!


மெசியிலே படபடத்துக் கொண்டிருக்கும் கேபிளைப் படித்துக் கொண்டிருந்த காஞ் சனாவின் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்திருந் தாலும், அதன் அடிவாரத்தில் ஏதோ வேதனை புரையோடுவது போலவும்தான் இருந்தது. அதற்குப் பெயர்தான் பாசமா அல்லது காஞ்சனாவிடம் இயற்கையாகவே உள்ள இரக்க குணமா, அல்லது இரண்டு மேயா? காஞ்சனாவின் விழிகள் கலங்கக் காரணமென்ன? இதோ அந்தக் கேபிளைப் படித்துவிட்டால் புரிந்துவிடுகிறது.

''அன்புள்ள அக்காவுக்கு,

உங்களை ஏமாற்ற எண்ணிய மாமாவை லண்டன் விடுதி யொன்றில் அரைக் காசில்லாமல் ஏமாற்றி விட்டு விட்டு, உங்கள் பணத்துடன் பறந்து வந்து கொண்டிருக்கிறேன்.

அன்புள்ள உங்கள் தோழி,

ரேணுகா''







வட்டமேஜை

'கல்கி'யின் 13-7-69 'விண்வெளிச் சிறப்பிதழ்' கண்டேன். விண்வெளிப் பயணம் பற்றிய ஒவ்வொரு கட்டுரையையும் படிக்கும் போது, நாமே விண்வெளிக்குச் செல்வது போன்ற பிரமை ஏற்படுகிறது. இவ்வளவு தெளிவாகவும், அதே சமயத்தில் விரிவாகவும், வேறு எந்தப் பத்திரிகையும் விண்வெளிப் பயணம் பற்றி எழுதவில்லை என்பது நிச்சயம். ஒவ்வொரு மாணவரும் படித்துப் பயன்பெற வேண்டிய கட்டுரைகள் அவை. சந்திர (சரித்திர) நாயகர்கள் வெற்றியுடன் இனிதே திரும்ப, கல்கியின் சார்பில் எனது வாழ்த்துக்கள்.

பஞ்சமாதேவி

11—7—69 வி. பார்த்தசாரதி

விண்வெளிச் சிறப்பிதழில் வியப்புக்குரிய வீரமான செயல்களைத் தெளிவாக விளக்கி, அப்போலோவின் அற்புதத்தையும் அழகான முறையில் வெளியிட்டு வாசகர்களின் வாழ்த்துதலை முதலில் பெறுகிறீர்கள். 'ஞான ஒளி'யின் நல்சுவையோடு முடித்திட்ட திரு சுந்தரத்துக்கும் நன்றியோடு வாழ்த்து கூறுகிறோம்.

கோலார் தங்கவயல் ஜீ. மெல்கிசேதக்

11-7-69

'கல்கி'யில் மூன்று மாத காலமாக வெளிவந்த 'ஞான ஒளி' நாடகத்தில் சுந்தரத்தின் வசனம் பலாச் சுளைமீது தேன் பாய்ச்சியது போல் இருந்தது. அதைப் பொன் தட்டில் வைத்துப் படைத்தது போல் இருந்தது, 'மேஜர்' சுந்தரராஜனின் நடிப்பு. நாடகத்தை நேரில் பார்க்காதவர்களுக்கு நேரில் பார்க்க முடியவில்லையே என்ற குறையே இல்லாதவாறு அமைந்திருந்தன, புகைப்படங்கள்.

எத்தனை முறை பார்த்தாலும் சலிப்பே தட்டவில்லை. (நான் இதை இருபத்தேழு முறை படித்தேன்) ஓர் இதழைப் படித்து முடித்தவுடன் இனி அடுத்த இதழ் எப்பொழுது வரும் என்ற ஆவலைத் தூண்டிக் கொண்டிருந்தது.

அரியலூர்

14—7—69 எம்.ஜி. ஜகதீஷ்சேகர்

கல்கி விண்வெளிச் சிறப்பிதழ் கண்டேன்; மன மகிழ்ச்சி கொண்டேன். ஜூலை 16ந் தேதி அமெரிக்க வீரர்கள் சந்திரனுக்குப் புறப்படும் நன்னாளையொட்டி இப்படியொரு சிறப்பிதழ் வெளியிட்டது மிகப் பொருத்தமே. விண்ணைத் தாண்டி வேறு கிரகங்களுக்கு விரையும் விஞ்ஞான வித்தைகளைத் தமிழ்கூறும் நல்லுலகம் அறியுமாறு சிறப்பிதழ் வெளியிட்ட கல்கி பாராட்டுக்குரியது. இந்தியர்களாகிய நமக்கு அத்தகைய பயணம் செய்வதற்குரிய வாய்ப்பு தற்சமயம் இல்லை என்றாலும் கல்கியின் சிறப்புக் கட்டுரைகளைப் படிக்கும்போது அம்புலிக்கே சென்றுவிட்ட உணர்ச்சியைத் தூண்டியது. விண்வெளிச் சாதனைகள் புரிய மனிதன் எவ்வளவு சோதனைகளுக்கு உள்ளாகிறான் என்பதை அறியும் போது நம்மையறியாமல் பெருமூச்சு விடுகிறோம்; பெருமிதம் அடைகிறோம். இது போன்ற அரிய கட்டுரைகளை மேன் மேலும் அளிக்க வேண்டுகிறேன்.

திருச்சி — 2

14—7—69 ஆர். ரங்கநாதன்

"எங்கள் சமயத்துக் கேற்றாற் போல் சமூக நாடகம் ஒன்றுகூட இல்லையே" என்னும் குறை கிறிஸ்துவ சமயத்துக்கு உண்டு. அக்குறையை 'ஞான ஒளி' நாடகம் நிவர்த்தி செய்து விட்டது.

காரைக்கால்

12—7—69 அல்போன்ஸ் மாணிக்கம்

"ஞான ஒளி" ஒரு சிறந்த படைப்பு. பிரதிவாரமும் மேற்கொண்டு என்னவென அறிய ஆவலைத் தூண்டும் வண்ணம் கதையை வெகு ஜோராகச் சித்திரித்துத் தந்த ஆசிரியர் கே. சுந்தரம் அவர்களுக்கு என் பாராட்டுதல்கள். எங்கள் குடும்பமே இதை வெகுவாக ரசித்துப் படித்தது.

திருக்கழுக்குன்றம்

11—7—69 டி.எஸ். சுப்புஸ்வாமி

'விண்வெளிச் சிறப்பிதழை'ப் பாராட்டி எழுத எங்கு தேடினும் பொருத்தமான சொற்களே கிடைக்கவில்லை!

சென்னை — 17

11—7—69 விஜயலக்ஷ்மி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



இவள்தான் ஸாரா. பிறக்கும்போதே குறைந்த எடையோடு பி ந்த குழந்தை. வேறொரு குழந்தை உணவு அருந்திக் கொண்டிருந்த இவள் இப்பொழுது அமுல்ஸ்ப்ரே சாப்பிட்டு வருகிறாள்

இப்பொழுது அவளைப்பாருங்கள்!

"அவள் எடை கூடி இருக்கிறது. அமுல்ஸ்ப்ரே தொடங்கியதிலிருந்து அவள் வளர்ச்சி அபாரம்!" என்கிறார், 15 மாதக் குழந்தையான ஸாராவின் தந்தை திரு. ஸைரஸ் கஸ்தூரி.



உங்கள் குழந்தை முதலாண்டிலே வெகு வேகமாக வளருகிறது — இக்காலத்திற்குள், அது பிறந்தபோது இருந்த எடை மும்மடங்காக வேண்டும். எனவேதான் உங்கள் குழந்தையின் உடல் வளர உதவும் புரத சத்தை அதிகமாகக் கொண்டிருக்கிறது அமுல்ஸ்ப்ரே. குழந்தை உணவுகள் தயாரிக்க அமெரிக்காவில் உபயோகிக்கப் படும் உன்னதமான ஸ்ப்ரே–ட்ரையிங் செய் முறையி-னால் ஆக்கம் பெற்றது அது. பாலிலுள்ள புரதத்தின் தரம் குறையாமல் இருப்பதற்காக, ஸ்ப்ரே—ட்ரையிங் செய்முறையில், குறைந்த வெப்பத்தில் பால் பதன மாக்கப் படுகிறது. அமுல்ஸ்ப்ரே ஒரு சீரான சரி விகித உணவு. அதில் விடமின்கள், கார்போஹைட்ரேட்டுகள், தாதுப் பொருள்கள்—ஏன், உங்கள் குழந்தை வேகமா கவும் ஆரோக்கியமாகவும் வளருவதற்குத் தேவையான அனைத்தையுமே கொண்டது அது.

ஆயிரக்கணக்கான தாய்மார்கள், தங்கள் குழந்தைகள் பிறந்த முதல் வாரத்திலிருந்தே அவற்றிற்குத் தாய்ப் பாலுக்குப் பதிலாகவோ அல்லது உபரி உணவாகவோ அமுல்ஸ்ப்ரே புகட்டி வருகிறார்கள். அதனால்தான், தயாரிக்கத் தொடங்கிய இரண்டு ஆண்டுகளுக்குள்ளா-கவே அமுல்ஸ்ப்ரே இந்தியாவிலேயே உச்ச விற்பனை யுள்ள குழந்தை உணவாகிவிட்டது.

அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது!

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

